
# அறுபத்து மூவர் நாயன்மார்கள் பாடல்கள்

(ஸ்வர தாளத்துடன்)



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

கலைமாமணி

**D.பட்டம்மாள்**

# அணிந்துரை

தமிழ் மொழியில் இன்றைய இசைப்பாடல்கள் கீர்த்தனை என்ற அமைப்பிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றன. பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற மூன்று அங்கங்களைப் பெற்றுப் பாடுபவர் மனக் கற்பனைக்கு விரிவான இடங்கொடுப்பதால் கீர்த்தனை வகைகளுக்கே இசைக் கலைஞர்கள் பாடுவதில் முதலிடம் கொடுக்கிறார்கள்.

தொல்காப்பியம் தமிழில் இன்று உள்ள மூத்த இலக்கியம், இலக்கண நூலும் ஆகும். அந்த நூலில் பாடலுக்கு ஏற்ற செய்யுள் வகைகள் நான்கு என்றும், அவை அகவல், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கலிப்பாவின் உறுப்புக்களான தரவு தான் பின்னால் பல்லவி என்றும் துணைத்தரவு என்பது அநுபல்லவி என்றும், தாமிசைகள் என்பவை சரணங்கள் என்றும் உருவெடுத்தன என்று இசையியல் வல்லாளர்கள் ஆய்ந்து கூறுகிறார்கள்.

தமிழ் இசைக் கீர்த்தனையில் பாடுபொருள் முதலியவைகளுக்கேற்றவாறு பதம், தில்லானா, ஜாவளிகள் முதலிய வகைகள் உண்டு. எல்லாக் கீர்த்தனை வகைகளையும் கதைப் பின்னனியில் காட்டமுடியும் என்பதனால் கீர்த்தனையாசிரியர்கள் ஒரு கதையைக் கீர்த்தனைகளிலேயே பாடினார்கள்.

அருணாசல கவிராயர் இராமநாடகக் கீர்த்தனை, அசோமுகி நாடக கீர்த்தனை முதலியவற்றை இயற்றினார். அசோமுகி நாடகம் கந்தபுராணத்தைப் பின்பற்றியதாக இருக்கவேண்டும். அது கிடைக்கவில்லை. முந்நூறு ஆண்டுகள் இடைவெளியில் ஒரு நல்ல நாடக இலக்கியத்தைத் தமிழகம் தவள விட்டிருக்கிறது.

மாரிமுத்தாப்பிள்ளை அருணாசல கவிராயர் காலத்தில் வாழ்ந்தவராவர். அவர் நொண்டி நாடகம் இயற்றினார். அவருடைய கீர்த்தனைகள் மிகப்புகழ் பெற்றவை.

குறவஞ்சி நூல்களில் அருமையான பல கீர்த்தனைகள் அமைந்துள்ளன. குறவஞ்சிகள் என்றாலே இசைநாடகத் தமிழ்நூல்கள் தாம்.

கோபால கிருஷ்ண பாரதியார் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் பெரிய புராணச் சரித்திரங்களைக் கீர்த்தனை நாடக வடிவில் இயற்றினார். நந்தனார் சரித்திரம், இயற்பகை நாயனார் சரித்திரம், திருநீலகண்டர் சரித்திரம், ஆகியவற்றை அவர் இயற்றினார். நந்தனார் சரித்திரம் மட்டுமே நமக்குக் கிடைக்கிறது. கோபாகிருஷ்ண பாரதியாரின் மாணவராகிய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயருக்கே மற்ற இரண்டு சரித்திரங்களில் சிற்சில கீர்த்தனைகள் மட்டும்தான் கிடைந்துள்ளன.

அவை நாடகப்பாங்கில் அமையாதுபோனாலும் பெரியபுராணக் கதைப்போக்கைப் பின்பற்றிச் செய்யப்பட்டிருக்கின்றன.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் காலத்திலேயே அப்பரடிகளின் கதையைக் கீர்த்தனை நாட வடிவில் ஒருவர் செய்திருக்கிறார். உ.வே.சா. அவர்கள் குறிப்பினால் அது நமக்குத் தெரிகிறது.

வேறு பலர் செய்த பெரிய புராணக் கீர்த்தனைகளும் இருக்கவேண்டும்.

கண்ணப்ப நாயானார் சரித்திரத்தை ஒருவர் கீர்த்தனை வடிவத்தில் தத்திருக்கிறார்.

சிவகதா காலட்சேபங்கள் செய்யும் வழக்கமுள்ள கலைஞர்கள் மேற்படி கீர்த்தனைகளைப் பாடியும் சில வேளைகளில் அபிநயித்தும் மக்கைப் பரவசப்படுத்தி இருக்கிறார்கள்.

ராமசாமி சிவனைப் பின்பற்றிய பாங்கிலேதான் நம் டி. பட்டம்மாள் பெரிய புராணக் கீர்த்தனைகள் இயற்றியிருக்கிறார். அறுபத்து மூவர் சரித்திரங்களுக்கும் கீர்த்தனைகள் பாடியுள்ளார். ஏற்கனவே திருவிளையால் புராண கீர்த்தனைகளையும் திருவாரூர் மூவராகிய தியாகையர், தீட்சிதர், சாஸ்திரிகள் கீர்த்தனைகளையும் பாடி வெளியிட்டுள்ளார்.

அறுபத்து மூவர் சரித்திரங்கள் இந்த நூலில் எளிய நடையில் கீர்த்தனை வடிவில் சொல்லப்பட்டிருக்கின்றன.

டி. பட்டம்மாளின் இசைப்புலமை குறித்து நான் கூறவேண்டியதில்லை. திரு. டி.ஆர் சுப்பிரமணியம், திரு டி.வி. கோபாலகிருஷ்ணன், திரு எஸ். கலியாணராமன், திரு எல். ராஜம், திரு. ராஜகுமார், பாரதி முதலிய பிரபல வித்துவான்கள் இவருடைய பாடல்களைப் பாடி வருவதிலிருந்தே இவர் பெருமையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

புதிய ராகங்களைக் கண்டுபிடிப்பதிலும், புதுமைகள் செய்வதிலும், புதுப்புது கீர்த்தனைகள் இயற்றுவதிலும், மாணவர்களைப் பயிற்றுவிப்பதிலும், தம் வாழ்க்கையைக் கழித்துள்ள இந்த மாதர் திலகத்துக்குக் கலைமாமணி விருதைத் தமிழக அரசு தந்து கவுரவித்துள்ளது.

இவருக்கு வித்வத் சபை முதலாகத் தமிழகத்தின் பல்வேறு அமைப்புக்கள் பரிசுகளும் பாராட்டுகளும் தந்துள்ளன. பல அரங்கங்களில் இசையில் கருத்துக் செயல்முறை விளக்கம் செய்து புகழ் பெற்றவர்.

பெரியபுராண கீர்த்தனைகள் எளிய நடையில் நன்கு அமைந்துள்ளன. சரித்திரங்களைச் சுருக்கமாகக் கீர்த்தனைகளில் அமைந்திருக்கிறார் திருமதி பட்டம்மாள்.

இவருடைய முயற்சியைப் பாராட்டுகிறேன். பட்டம்மாள் காட்டும் இவ்வழி இயல் இசையியல் வல்ல தமிழ் கற்ற கலைஞர்கள் நம் பண்பாடுகளின் விளக்கமாகிய சரித்திரங்களைக் கீர்த்தனை வடிவிலும் வேறு இசைப் பாவடிவங்களிலும் இயற்றுவதற்கு முன்வரவேண்டும். ஆனால் இக்காலத்தில் சுகரக்குறிப்புகளோடு இவ்வகையான இசை நூல்களை வெளியிட்டால் மட்டும் போதாது.

சுரக்குறிப்புகள் மாறுபடாமல் கீர்த்தனைகளில் இசை உருவத்தைத் திரிபு படாமல் பாதுகாத்து வைக்கும். ஆனால் இக்காலத்து பெரும்பாலான இசைக் கலைஞர்கள் குறிப்பாக

இளைஞர்கள் சுரக்குறிப்புகளை மட்டும் வைத்துக்ண்டு பாடம் பண்ணிக்கொள்ளத் தயங்குகிறார்கள். அதனால் இதுபோன்ற நூல்கள் நினைத்த அளவு பயன்படாமல் போய்விடவும் கூடும். இப்பாடல்களை ஒலி நாடாக்களில் நூலாசிரியரின் பாடாந்தரப்படி பாடிப் பதிவு செய்து வெளியிட்டுவிட்டால் இளைஞர்கள் சிறிதும் தயக்கமோ, கிரமமோ, இல்லாமல் பாடஞ்செய்து கொள்ளவும், பாடவும் முன்வருவார்கள், திருமதி பட்டம்மாள் அவர்களின் அருமையான திருவிளையாடல் கீர்த்தனைகளை வித்வான்கள் கற்றுப் பயின்று மேடைகளில் பாடுவதற்கு ஏராளமான பேர் முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

– நா. மகாலிங்கம்

# முன்னுரை

சிவனடியார்களில் முக்கியமானவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்கள் ஆவர். இவர்கள் பல்வேறு குலமரபுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், சிவநெறியிலே ஒன்றுபட்டவர்கள்.

இவர்களைப் பற்றிய வரலாறுகள், பலவிதமான உணர்ச்சி பாவங்களோடும், உள்ளமுருக்கும் சம்பவங்களோடும், பக்திச் சுவையின், அடிப்படையில், நெஞ்சைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. இதனை நூல் வடிவில், சோழநாட்டு அரசர் அனபாயச் சோழனின் மந்திரி சேக்கிழார் வடித்துள்ளார். இதனை 'திருத்தொண்டர் புராணம்' என்றும் ''பெரிய புராணம்' என்றும் கூறுவர்.

சேக்கிழார் திருத்தொண்டர் புராணமியற்ற முதலடியை ஐயனே எடுத்து தரவேண்டும் என்று வேண்ட, ஐயனும் வானொயில் 'உலகெல்லாம்' என்று ஒலித்து முதலடியை எடுத்துத்தந்தார்.

நமது தேசத்திலுள்ள, புராணங்கள், பெரும்பான்மையானவை, வடமொழி நூல்களை மூலமாகக் கொண்டவை ஆனால் இப்பெரிய புராணம், நம் தமிழ் மொழியிலேயே, முதல் நூலாக மலர்ந்த இலக்கிய நூலாகும். இது ஐந்தாவது வேதம் என்று போற்றப்படுகிறது. இந்த நூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சைவத் திருமுறை பன்னிரண்டுள் இந்நூல் பன்னிரண்டாவது திருமுறையாக விளங்குகிறது.

இந்நூலைச் செய்த சேக்கீழாருக்கு தக்க மரியாதை செய்த 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற நாமமும், ஞானமுடியும் சூட்டினால் அனபாயச் சோழன் 63 நாயன்மார்களது வாழ்க்கையிலும், சிவபெருமான் எவ்வெவ்வாறு விளையாடல் புரிந்து, முடிவில் தன்னிடம் சேர்த்துக்கொண்டுள்ளார் என்பதன் விவரமே 63 நாயன்மார்களது பாடல்.

இந்நூலுக்கு மனமுவந்து சிறப்புரையளித்த சக்தி தொழில் நிறுவனங்களில் (கோவை) தலைவரும், ராமலிங்கர் பணிமன்றத்தின் தலைவருமான அருட்செல்வர் டாக்டர் நா. மஹாலிங்கம் அவர்களுக்கும், எனது நன்றி கலந்த வணக்கம்.

இந்நூலை பரிசீலித்து இலக்கண பிழைகளை சரிபார்த்து கொடுத்த பேராசிரியர் மா. வைத்தியலிங்கன் நெ. 4 சோழபுரம் தெரு, திருவான்மையூர், சென்னை – 41, அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன்.

இந்நூலுக்கு பிழை திருத்தம் செய்த திருமதி சுபஸ்ரீ மணி அவர்களுக்கும் நன்றி.

இந்நூலை அனைவரும் பக்தியுடன் பாராயணம் செய்து பயனடைய, பரமனடி பணிபுரியும்.

டி. பட்டம்மாள்

# அறுபத்து மூவர்

சிவனடியார்களில் முக்கியமானவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்கள் ஆவர். இவர்கள் பல்வேறு குலமரபுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பினும். சிவநெறியிலே ஒன்றுபட்டவர்கள்.

அவர்களைப் பற்றிய வரலாறுகள், பவலிதமான உணர்ச்சி பாவங்களோடும். உள்ளமுருகும் சம்பவங்களோடும், பக்திச் சுவையின் அடிப்படையில், நெஞ்சைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. இதனை நூல்வடிவில் சோழநாட்டு அரசர் அனபாயச் சோழனின் மந்திரி சேக்கீழார் வடித்துள்ளார். இதனை திருத்தொண்டர் புராணம் என்றும், பெரிய புராணம் என்றும் கூறுவர்.

சேக்கீழார் திருத்தொண்டர் புராணமியற்ற, முதலடியை ஐயனே எடுத்துத்தர வேண்டுமென்று வேண்ட, ஐயனும் வானொலியில் ‘உலகெலாம்’ என்று ஒலித்து முதலடியை எடுத்துத்தந்தார்.

நமது தேசத்திலுள்ள புராணங்கள் பெரும்பான்மையானவை வடமொழிநூல்களை மூலமாகக் கொண்டவை. ஆனால் இப்பெரிய புராணம், நம் தமிழ்மொழியிலேயே முதல் நூலாக மலர்ந்த இலக்கிய நூலாகும். இது ஐந்தாவது வேதம் என்று போற்றப்படுகிறது. இந்நூல் பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சைவத் திருமுறை பன்னிரண்டுள் இந்நூல் பன்னிரண்டாவது திருமுறையாக விளங்குகிறது.

இந்நூலைச் செய்த சேக்கீழாருக்கு தக்க மரியாதை செய்து ‘தொண்டர்சீர் பரவுவார்’ என்ற நாமமும் ஞானமுடியும் சூட்டினான் அனபாயச் சோழன். 63 நான்மார்களது வாழ்க்கையிலும், சிவபெருமான் எவ்வெவ்வாறு விளையாடல் புரிந்து, முடிவில் தன்னிடம் சேர்த்துக் கொண்டுள்ளார் என்பதன் விவரமே 63 நாயன்மார்களத பாடல்.

# ஆனைமுகத்தோன் துதி

ராகம் : கம்பீரநாட (36) ஆ : ஸகமபநிஸ்

தாளம் : ஆதி அவ : ஸ்நிபமரிஸ

**பல்லவி**

அடிகள் பெருமையை நான் அறிந்தமட்டும்சொல்வேன்
ஆனைமுகத்தோன் அருளால் (சிவ)

**அனுபல்லவி**

அடிமலரடைய அருந் தொண்டினைச் செய்து
ஆண்டவன் அன்பில் ஆழ்ந்து அமிழ்ந்த

**சரணம்**

அரஹர சிவசிவ என்றும் அல்லும் பகலும் உன்னை
அர்ச்சனை செய்து அடிக்கமுது படைத்து
பரகதியடைய பலதலம் சென்று
பரவசமாய்யுன்னை பாடித்துதித்த

**பல்லவி**

; ஸஸாகாம பா, ப பா பா । ; பநீ பா ம । கா; ப ம கா ॥
அடி கள்பெருமை யை நான் । அறிந்த மட் । டும் சொல்வேன் ॥
; க மா பா மபமகஸா கமா । பா; ; ; । ; ; கமகஸ ॥
ஆ . னை முக த்தோன் அரு । ளால் । சி . வ. ॥

**அனுபல்லவி**

; மபாகமா பா நீ ஸ்ா ; । ; நி ஸ்ா க் ஸ் ஸா । நீ ; ஸ்ாஸ்ா ॥
அ டி மல ர டை ய । அரும்தொண்டி । னைச் செய்து ॥

---

; ஸ்கா மப்ம கா; ஸா; । நிஸ் நிபா, ; । மகமப பமமக ॥ மகஸா
ஆண் ட வன் அன் பில் । ஆழ் ந்து அ । மிழ்ந் த ॥

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ; ம பா பபா பபா பபா பநி | । பா மா பா மா | । ம கபம க ம கா | ॥ |
| அ ர ஹர சிவ சிவ என் | । று அல்லும் ப | । கூ லும் உன்னை | ॥ |
| ; மா, பமா மகபம காஸா | । ; நி ஸா க மா | । பா, க மா பா | ॥ |
| அர்ச்சனை செய். .து | । அ டிக் கமு | । து படைத்து | ॥ |
| ; க மா பநிப பாநீஸ் ; | । ; நிஸாக்ஸா | । நீஸ்ா ரீ.ஸ்ா | ॥ |
| பர கதி . அடைய | । பல தலம் | । சென் று | ॥ |
| ; ஸ்காம்ப்ம்க்ா ஸ்க்ஸ்ா ; | । ; பஸ்நிபாம | । மகபமகமகஸ | ॥ |
| பரவச . மாய் யுன்னை | । பா . . டித்து | । தி . . த்த .... | ॥ |

# ஆதி சைவர் 1. சுந்தரர் திருநாவலூர்

நடுநாடு - ஆடி சுவாதி

கயிலையில் சிவபெருமானுக்குத் தொண்டு செய்யும் ஆலால சுந்தரர். தேவியின் பணிப்பெண்கள் மீது மனம் பறிகொடுத்ததையறிந்த சிவபெருமான். அவர்களுடன் பூலோகம் சென்று, இன்பமனுபவித்துப்பின் தன்னிடம் வந்து சேரும்படி அருளினார். ஆலால சுந்தரரே நம் சுந்தரமூர்த்தியாவர். சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் பிறந்த தவப்புதல்வராவார். நரசிங்க முனியரையர் என்னும் அரசனால் வளர்க்கப்பட்டார். திருமணக் கோலத்தில் சிவபெருமானே கிழவனாய் வந்து, இவரைத் தடுத்தாட் கொண்டார். வன் தொண்டர் என்னும் பெயர்சூட்டி, தன் புகழ் பாடுமாறு சொல்லி, பாட்டின் முதலடியையும் எடுத்துத் தந்தார் பெருமான்.

ஒரு சமயம் சிவபெருமானே இவர் எந்த இடம் தலை வைத்துப் படுத்தாலும் காலை இவர் தலைப்பக்கம் வைத்துப் பின், தான் யாரென்று கூறி மறைந்தார். ஈசன் அருளால் பரவையை மணம் செய்து கொண்டார். குண்டையூர்க் கிழவர் அளித்த நெல்லை, பூதங்களைக் கொண்டு பரைவையில்லத்தில் சேர்த்தார். கோயில் திருப்பணிக்கு நிதிபெற ஐயன் மேல் பதிகம் பாட இவர் தலைக்குயரமாக வைத்த செங்கற்களே ஐயன் அருளால் தங்கக்கட்டிகளாயிற்று. ஐயனின் கூத்தாடும் காட்சியினைக் காணப்பெற்றார். ஈசன் அருளால் பெற்ற பொன்னை அவர் அருளாலேயே மணிமுத்தாரில் இட்டு, திருவாரூர் குளத்தில் வரச்செய்தார். ஒரு சமயம் சிவபெருமானே பிராமண வடிவங்கொண்டு இவரது பசியையாற்றியுள்ளார். இன்னொரு சமயம் பலர் வீட்டில் யாசித்து உணவு பெற்று இவரது பசியைப் போக்கினார் ஈசன், சங்கிலியாரைப் பிரிந்து, அவ்வூரைவிட்டுப் போவதில்லையென்று சுவாமியின் முன் சத்தியம் செய்து, பின் சங்கிலியை மணந்தார். பின் சபதத்தை மீறி கண்களின் பார்வையிழந்து தவித்தார். ஐயன் அருளால் பார்வை பெற்று திருவாரூர் அடைந்தார்.

பரவையின் பிணக்கை சிவபெருமானே தூது சென்று தீர்த்துவைத்தார். இதனால் ஏற்பட்ட கலிக்காமரின் பகையையும் தீர்த்தார் சிவபெருமான். சேரமானிடம் மிகவும் நட்பாயிருந்தார். அவர் தந்த பொருட்களை எடுத்துச்செல்கையில், ஐயனின் ஏவலால் பூதகணங்கள் வேடராய் வந்து பறித்துக் கொண்டார்கள். பதிகம் பாடி ஐயனை வேண்ட பொருள்களெல்லாம் கோபுர வாயிலில் வந்து சேர, அவற்றை திருவாரூர் எடுத்துச் சென்றார். முதலை விழுங்கிய பையனை பதிகம் பாடி, முதலையை விட்டு பையனை கக்கச் செய்தார். வெள்ளையானையில் தேவர்கள் அழைத்துச் செல்ல கயிலைக்குச் சென்றார். அச்சமயம் தன் நண்பன் சேரனை நினைக்க, அவர் தம் குதிரைக்கு பஞ்சாட்சரம் ஓதி சுந்தரரை வணங்கியவாறே அவர்முன் சென்றார். கயிலையில் சுந்தரர் பதிகமோதி, ஈசனை வணங்கி, பின்னர் ஆலால சுந்தரர் பணியை மேற்கொண்டார். கயிலையில் சுந்தரரால் பாடப்பட்ட பதிகம், வருணதேவனால், திருவாஞ்சைக் களத்துக்கு வந்து, எங்கும் விளக்கமுற்றது.

ராகம் : பூர்வி கல்யாணி (53) ஆ : ஸரிகமபதபஸ்
தாளம் : கண்டசாபு அவ : ஸ்நிதபமகரிஸ

**பல்லவி**

மணக் கோல சுந்தரரை தடுத் தாட்கொண்டாய்
பரவையை மணமுடித்து பல விதமாய் அருள் செய்தாய்

**அனுபல்லவி**

வணங்காத சுந்தரர் மீது விறன் மிண்டர் கோபம் தீர
அடியார்கள் மீது பாட அடியெடுத்துத் தந்தனை

**சரணம்**

சங்கிலியை மணம் செய்து சபதத்தை மீறி வந்த
சங்கடம் தீர்த்து பரவைக்கும் தூது சென்று
சிங்கமெனச் சீறும் கலிக்காமன் சினம் தீர்த்து
சேரன் தொடர வெள்ளையானையில் சிவலோகம் செல்லச் செய்தாய்.

£À» Â

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஸப பா ம | ॥ | கா பமகரிஸா | ॥ | ஸரிஸா நி.த. | ॥ | ஸ ரி கா , |
| மணக் கோல | | சுந் த . ர . ரை | | தடுத் தா ட். | | கொண்டாய் |
| க ம ப பா | ॥ | ப ப ப த ப | ॥ | க நி த ப ம | ॥ | மதபம கரிஸரிகம |
| பரவையை | | மணமு டி த்து | | பலவிதமாய் | | அ. ருள் செய்தா . . ய் |

A Ý£À» Â

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க ம ப த ப | ॥ | ஸ்ாஸ் ஸ் ஸ் | ॥ | ஸ் ரி.ஸா ஸ் | ॥ | தா ஸ் நித |
| வணங்கா . த | ॥ | சுந்தரர்மீது | ॥ | விறன்மிண்டர் | ॥ | கோபம்தீ |
| ப தஸ் ரீ ரி. | ॥ | ஸ்ா நி தா | ॥ | ப தநி த ப ம | ॥ | கா பம கரி |
| ர அடியார்கள் | ॥ | மீது பா | ॥ | டஅடியெடுத்துத் | ॥ | தந் த . னை. |

\µ n ®

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க ம ப ப ப | ॥ | ப ப த ப த | ॥ | க நித பா | ॥ | பாபம கரிகா |
| ச ங் கிலியை | ॥ | மணம்செய்து | ॥ | சபதத்தை | ॥ | மீறி . வந்த |
| கநி த ப ம | ॥ | காமக க ரி ஸா | ॥ | ஸரி ஸ ஸ த | ॥ | ஸாரி கக |
| சங் க டம் | ॥ | தீ . ர் த் து . . | ॥ | பர வைக் கும் | ॥ | தூதுசென்று |

| | | | |
|---|---|---|---|
| கம ப தப ॥ | ஸ்ாஸ் ஸ் ஸ் ॥ | ஸ்ாரி. ஸ்நித ॥ | ஸ்ரி. க்ா, |
| சிங்கமெனச் ॥ | சீறும் கலி க் ॥ | காமன்சினம் ॥ | தீர்த் து |
| க்ா ப்ம் க்ரி ஸா ॥ | ஸ் ஸ் ஸ்நி பத ॥ | தநி த ப ம ॥ | காபம கரிஸ |
| சேர . ன் தொடர॥ | வெள்ளையா.னையில் ॥ | சிவலோகம் ॥ | செல்லச்செய்தாய் |

## 2. திருநீலகண்டநாயனார்

குயவர் - சோழநாடு - சிதம்பரம் - தை - விசாகம்

நீலகண்டற்கு தன் மனைவியுடன் ஏற்பட்ட ஓர் பிணக்கில், அவர் வணங்கும் நீலகண்டத்தின் மீது ஆணையாக, தன்னைத் தீண்டக்கூடாது என்று கோபித்துக் கொண்டான். ஒருநாள் தன்னிடம் சிவயோகி ஒருவர் கொடுத்துச் சென்ற பழைய ஓடு காணாமல் போக மனைவியின் கைப்பிடித்து நீர்ல் மூழ்கி, தான் அதை திருடவில்லை என்று சத்தியம் செய்தால், நம்புவதாக ஓட்டை கொடுத்த யோகி கூறவும், தான் மேற்கொண் சபத்தால் ஓர்சூச்சியின் இரு முனைகளையும் இருவரும் பிடித்து நீரில் மூழ்க, அதற்கு சம்மதியாமல் யோகி, அவர்கள் கையைப் பிடித்தே மூழ்கச் செய்ய, மூழ்கியெழுந்ததும், முதுமை நீங்கி ஐயன் காட்சிபெற்று பின்னர் பதமும் பெற்றனர்.

**ராகம் : அடாணா (28)** **ஆ : ஸரிகபதநிஸ்**

**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிதபமபகரீஸ**

**பல்லவி**

கணவன் மேல் கோபமுற்று திரு நிலகண்டன் மேல் ஆணை
தன்னைத் தொடாதே என்றாள் நீலகண்டர் மனைவி

**அனுபல்லவி**

பிணக்கு தீர குயவனிடம் சிவயோகியாய்ச் சென்று
பழைய ஓடதனைத் தந்து மறைந்திடச் செய்தீர்

**சரணம்**

ஓட்டைத் தான் திருவில்லை என்று மனைவி கை
மூங்கில் இரு முனையும் பிடித்துக் குளத்துநீர்
முழுகி எழச்செய்து முதிரித்த பக்தர்கள்தம்
முதுமை நீக்கிச் சிவலோகம் அடைவித்தீர்.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| பம பா ஸா ; ஸா,ஸ்ஸாஸா | । ஸ்ரிம்ரீஸ் ஸா | । ஸ்நிரிஸ்நிஸ்தா | ॥ |
| கணவன் மேல் கோப முற் று | । திரு . நீ ல கண் | । டம்மேல் ஆ . ணை | ॥ |
| ப தா த த நிஸா ஸ்நிரிஸ்பா; | । பாமா பா க் ரி | । ஸ் தநீ ஸ்ா; | ॥ |
| தன்னைத்தொடா . தேஎன் . றாள் | । நீ ல க ண் டர் | । ம . னை வி | ॥ |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| பஸ் நி ஸ்ாரீ .ரீ .ரீ .ம் ரிஸா | । நிஸ்ா ரீஸ் ஸ்ா | । ஸ் த நீ ஸ்ா ; | ॥ |
| பிணக்கு தீர குயவனிடம் | । சிவ யோகியாய்ச் | । சென் . று | ॥ |
| நிரீ .ஸா, ஸா ஸ்நிரிஸ் தா தா | । பதாத தநிஸ்ா | । ஸ் நி ரிஸ் பா; | ॥ |
| பழை ய ஓட தனை த் தந் து | । மறைந் தி ட. | । செ . . . தீ ர் | ॥ |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| தா , தா , தா மதாத தாதா | । பதாநீ , ஸா | । ஸ் நி ரிஸ் பா ; | ॥ |
| ஓட்டைத்தான் திருடவில்லை | । என் று ம | । னை . வி . கை | ॥ |
| நீ, பா, பா ப ம நி ப ம க மா | । ரி மா பா, பா | । பாநிநி பம பா | ॥ |
| மூங்கில் இ ரு . மு . னை . யும் | । பிடித் துக் கு | । ள த்து . நீ . ர் | ॥ |
| பமாபா , ஸ்ா ஸ்ா ; ஸ்ாஸ்ா | । பரீ .ஸ்ா, ஸ்ா | । ஸ்ாதா நீ ஸ்ா | ॥ |
| முழு கி எ ழச் செய்து | । முதிர்ந்த | । பக் தர் கள் தம் | ॥ |
| நிஸ்ரிம்ரீஸ்ா ஸ்நிரிஸ் தாதா | । ; பாதாநீ | । ஸ்நிரிஸ் பா ; | ॥ |
| முதுமை . நீ க் கிச் சி . வ . | । லோகம் | । அடைவித்தீர் | ॥ |

## 3. இயற்பகை நாயனார்

எவர் எதைக் கேட்டாலும் இல்லை என்னாது வழங்கும் இயற்பகையிடம், அவருடைய மனைவியையே விரும்பிக்கேட்டான் ஓர் அந்தணன். சிறிதும் தாமதியாமல் கேட்டவுடன் சரியென்று ஒப்புதல் தந்தார் இயற்பகை.

பின்னர் அவ்வந்தணன் கேட்டுக் கொண்டபடி பக்கத்து ஊர்வரை பிறரால் அவனுக்கு தீங்கு நேராவண்ணம் சென்று வழியனுப்பி விட்டு திரும்புகையில், அவன் ஓலம் கேட்டு இயற்பகை திரும்ப, ஐயன் மறைந்து இருவருக்கும் விண்ணில் காட்சி தந்த பின்னர் தன்னையடையவும் அருள் செய்தார்.

ராகம் : பேகட (29) ஆ : ஸகரிகமபதபஸ்

தாளம் : ஆதி அவ : ஸ்நிதபமகரிஸ

**பல்லவி**

தயக்கமின்றி இயற்பகை மனைவியை ஐயனாய் வந்த
உனக்குத் தானம் கொடுத்து சொல்லைக் காத்தான்

**அனுபல்லவி**

பயந்த ஐயனுக்கு பக்க துணையாய் நின்று
பாய்ந்து வந்தோரைக் கொன்று வழியனுப்பினான்.

**சரணம்**

ஐயனின் ஓலம் கேட்டு திரும்பிய இயற்பகை
ஐயன் மறைந்ததை அறிந்து வியந்தான்
இயற்பகைக்கும் மனைவிக்கும்(உன்) அரும் காட்சி தந்து
உன்னடி அடைந்திட அருள் செய்தான் ஐயன்.

£À» Â

| | | |
|---|---|---|
| கமாப தாபாஸ்ஸ்ாநி ரீ.ஸ்ா | பதா நிதாபா | பமதப மகமரி |
| தயக்க மின்றி இயற் பகை | மனை வியைஐ | ய . னாய் வந்த |
| கம பத நீதபகா, ம ரீ ஸா | ஸஸ நி தா, பா | ஸ நிரீஸா; |
| உன க்கு தா னம் கொடுத்து | சொல்லைக்காத் | தான் |

A Ý £À» Â

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரிஸ்நிதா பாஸா, நிரீஸா | । | நிஸாகாகா , | । | க் ம் க் ரிஸ் ாஸா | ॥ |
| ப யந்த . ஐ யனுக்கு | । | பக் கது ணை | । | . யாய்நின்று | ॥ |
| நி ரீ ஸா, ரீ நீ நீ தபஸ்ா | । | ப த நீ தாபா | । | பம த ப ம க ம ரி | ॥ |
| பாய்ந்துவந்தோரைக்கொன்று | । | வ . ழி யனுப் | । | ப . னா . . ன் | ॥ |

\µ n ®

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப த ாநிதாபாபா, மதாபா | । | ; கமா தபா | । | காகம ரீஸா | ॥ |
| ஐ . ய னின் ஓலம் கேட்டு | । | திரும் பய | । | இயற் பகை | ॥ |
| ஸாகா; மாகா ; ம க ம ரி | । | ; கமா ப பா | । | பமதாபா; | ॥ |
| ஐயன் மறைந் த . தை. | । | அறிந் து வி | । | யந் . தான் | ॥ |
| நிஸ்ா நிதாபா ஸ்ாஸ் நிரீ .ஸா | । | நிஸ்ாக்ா , க்ரி | । | க்ாரீ .ஸ்ா ; | ॥ |
| இயற்பகைக்கும்மனை.விக்கும் | । | அரும்காட்சி | । | த ந் து | ॥ |
| நி நிரீ . ஸ்ாரீ . நீநீ தப ஸ்ா | । | பத நீ தாபா | । | பமதப மகமரி | ॥ |
| உன் . னடி அடைந்தி . ட | । | அ . ருள்செய் | । | தான் . ஐ . யன் | ॥ |

# 4. இளையான்குடி மாறநாயனார்

வேளாளர் - சோழநாடு - இளையான்குடி - ஆவணி - மகம்

எவருக்கு எந்த நேரத்திலும் அன்னமிடும் இளையான்குடி மாறனை, உலகறியச் செய்ய எண்ணங்கொண்ட ஈசன், அவனுக்குச் சொல்லொணா வறுமையைத் தந்தார். வறுமையிலும் பணியை விடவில்லை. பின்னர் சிவடியாகச் சென்று பிக்ஷை கேட்க, மனைவி சொற்படி நெல் விதைத்த இடத்திலிருந்து மண்ணிலிருந்து தானியமெடுத்துத் தந்து வீட்டின் கூரைக்கொம்பை இழுத்து விறகாக்கி விருந்து சமைக்க கண்ட ஐயன் மனமுவந்து காட்சி தந்து, பின்னர் அவர்கள் கரையேறவும் செய்தார்.

ராகம் : எதுகலகாம்போதி (28) ஆ : ஸரிமபதஸ்
தாளம் : மிச்ரசாபி அவ : ஸ்நிதபமகரிஸ

**பல்லவி**

இளையான் குடிமாறன் இணையற்ற பக்தியை
எவரும் அறிந்தி திருவுள்ளம் கொண்டீர்

**அனுபல்லவி**

சளைத்து உணவின்றிக் களைத்திடச் செய்தே – சிவன்
அடியாகி பிக்ஷை ஏற்க அவன் இல்லம் சென்றீர்

**சரணம்**

விதைத்த நெல் விதையெடுத்து கூரையை விறகாய் வைத்து
விருப்புடன் தம்பதிகள் விருந்து சமைந்திட
அது கண்டு மனமுவந்துன் அரும்காட்சி தந்து
சிவலோகம் சென்றவர்கள் சிறப்புடனிருக்கச் செய்தீர்

**பல்லவி**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ; ஸ ரி கா க | ॥ | கா, காமப | ॥ | மக ரீக ம க | ॥ | ரிகாமகரி ரி ஸ ஸா | ॥ |
| இளையான்கு | ॥ | டி மா றன் | ॥ | . இணை யற்ற | ॥ | பக் தி. யை | ॥ |
| ; ஸரிகரிஸஸா பா | ॥ | தா, ஸா ஸா | ॥ | ; ஸரிமாம | ॥ | கமபாமா தாபா | ॥ |
| எவ . ரும் . அ | ॥ | றிந் திட | ॥ | திருவுள்ளம் | ॥ | கொண் . . . டீர் | ॥ |

**அனுபல்லவி**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; ம க பா த | ॥ | ஸ்ா, ஸ்ாஸ்ா | ॥ | ; தத நீஸ் நிதா | ॥ | தா , பா , ப |
| சளைத்துஉ | ॥ | ண வின் றி | ॥ | களைத்தி . . டச் | ॥ | செய்தே சி |
| பாமப பமமம ம | ॥ | கம பா பம பத | ॥ | , பம பாதஸ் தப | ॥ | பமமா கா ரீஸா |
| வன்அ டியா . . கி | ॥ | ப . க்ஷை ஏற்க . | ॥ | அவன் இல் . லம் | ॥ | சென் . . றீர் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| பதா , தஸ்ா | ॥ தஸ் ஸ் நிஸ்ாநிதா | ॥ பாதஸ் தப பப | ॥ மாபமகா கரிரிஸ |
| விதைத்தநெல் | ॥ விதையெடு . த்து | ॥ கூரை . யை . விற | ॥ கா . . ய் வைத்து |
| ஸரிகஸரிஸா | ॥ ஸபதஸாஸா | ॥ ஸ ரீ மா ; | ॥ கம பம த பா |
| விருப்புடன் | ॥ த ம் பதி கள் | ॥ வி ருந்து | ॥ ச . மை . த்திட |
| ; மக பா த | ॥ தஸ்ஸ் ஸா ஸா | ॥ ; தத நீஸ்ா நித | ॥ தா , தபபா |
| அதுகண்டு | ॥ மனமு வந் துன் | ॥ அரும் கா. ட்சி | ॥ தந் து . . |
| ;மப ப ம ம க ம | ॥ கமப பம தப தா | ॥ ; மபம பததப | ॥ மாபமகா மகரிக ரிஸ் |
| சிவ லோக . . . கம் | ॥ சென் . ற . வர் கள் | ॥ சிறப் புடனி . | ॥ ரு . .க்கச் செய் . .தீர் |

# 5. மெய்ப்பொருள் நாயனார்

*சிறறரசர் - நடுநாடு - திருக்கோவிலூர் - கார்த்திகை - உத்திரம்*

சிவணடிகளின் ரூபத்தைக் கண்ட மாத்திரத்தில், பயமும் பக்தியம் கொள்ளும் தன்மையுடையவர் மெய்ப்பொருள்.

இதனையறிந்த இவருடைய பகையரசன், இவரை வெல்லமுடியாமல் சூழ்ச்சியாக இவர் பள்ளியறைக்கு சிவனடி போல் வேடம் தரித்து, உள்ளே சென்று இவர் வணங்குகையில் இவரைக் குத்த, தன்னை இந்நிலைக்கு கொண்டு வந்தவர் யாரென்று தெரிந்தும் அவர் கொண்ட வேடத்திற்கு மதிப்பளித்து, அவனை ஒன்றும் செய்யாமல் பக்கத்து ஊர்வரை துணையுடன் அனுப்பிய பின்னரே உயிர்நீத்து பரமனடி சேர்ந்தார்.

**ராகம் : மோஹனம் (28)** **ஆ : ஸரிகபதஸ்**

**தாளம் : ஆதி** **அவ : ஸ்தபகரிஸ**

### பல்லவி

மெய்ப் பொருள் மன்னனை வெல்ல முடியாத முத்தநாதன்
சூழ்ச்சியாக கொல்ல எண்ணங் கொண்டான்

### அனுபல்லவி

மெய்த்தவ வேடமே மெய்பொருள் எனக் கொள்ளும்
மெயப்பொருள் பள்ளியறை வேடம் பூண்டமுத்தன் சென்றான்

### சரணம்

கத்தியால் குத்திய கயவனைச் சிவனெனக்
கனிந்த பக்தியினால் காவலுடன் வழியனுப்பி
சித்தத்தை சிவன் பால் வைத்த மெய்ப் பொருளை
சிற்றம் பலத்தான் உன் சேவடி சேர்த்தாயே.

### பல்லவி

| | | | |
|---|---|---|---|
| பதாஸ்ஸா ஸ்ாஸ் தரிஸ் | தபபக | । பதா ஸ்ா, தப | । பக தப கரி ஸா |
| மெய்ப்பொருள் மன்னனை . . | வெல்ல | । முடி யா த | । முத் த. நா. தன் |
| ஸா, ரிகாரிக பா ; பா ; | | கா , பா, தஸ் | । பா தா பா; |
| சூழ் ச்சியாக . கொல்ல | | எண் ணங் கொண் | । டா . ன் |

### அனுபல்லவி

| | | |
|---|---|---|
| கா ; கா கா ரிகாப பா; | । கப தா தா தா | । தஸ்ா த பா தா |
| மெய்த்த வ வே . ட மே | । மெய் . ப் பொருள் | । எனக் கொள்ளும் |
| தா, ரி. ஸ்ா ஸ்ா தா, ஸ் தா பா | । பதா ஸ் தா பா | । பக தப க ரி ஸா |
| மெய்ப் பொருள் பள் ளி ய றை | । வே . டம் பூண்ட | । முத்தன் சென்றான் |

### சரணம்

| | | |
|---|---|---|
| ஸரிகா காகக . ரிகப ப ப ப ப ப | । க பதா த த த த | । பதஸ் ஸ் ஸ் தபத |
| கத்தியால்குத்திய கயவனை சிவனெனக் | । கனிந்த பக்தியினால் | । காவலுடன் வழிஅனுப்பி |

| | | | |
|---|---|---|---|
| பத ஸ்ரி க்க்கா | ரீ . ஸ் ஸ் த ப தா | । பத ஸ் ஸ் தா பா | । பக தப கரி ஸா |
| சித்தத்தை சிவன்பால் வைத்த மெய்ப்பொருளை | | । சிற்றம்பலத்தான் உன் | । சேவடி சேர்த்தாயே |

## 6. விறன்மிண்ட நாயனார்

வேளாளர் - மலைநாடு - செங்குளத்தூர் - சித்திரை - திருவாதிரை

ஆண்டவனை விட, அவனது அடியார்கள் மீது பெருமதிப்பு உடையவர் விறன்மிண்டர். ஒரு சமயம் சுந்தரர், தேவாசிரிய மண்டபத்திலுள்ள அடியார்களை வணங்காமல் நேராக கோயிலினுள் சென்று ஐயனை மட்டும் வணங்கினார். இதனால் மிகுந்த கோபம் கொண்டார் விறன்மிண்டர். இவருடைய கோபம் அடங்க, அடியார்கள் மீது பதிகம் பாடும்படி, சுந்தரருக்கு பணித்து, அதன் அடியையும் அவருக்கு எடுத்துத் தந்தார் ஈசன். அப்பதிகத்தில் எல்லா அடியார்களுக்கும் தான் அடியேன் என்று வருவதைக் கேட்டு மகிழ்ந்தார் விறன்மிண்டர். தன் காலம் முழுவதும் அடியார்களுக்கு சேவை செய்து ஈசனடி சேர்ந்தார் விறன்மிண்டர்.

**ராகம் : பிலஹரி (29)** **ஆ : ஸரிகபதஸ்**

**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிதபமகரிஸ**

## பல்லவி

அடியார்களை வணங்காமல் உன்னை மட்டும் பணிந்த
சுந்தரர் மீது கோபம் கொண்டார் விறன்மிண்டர்

## அனுபல்லவி

அடிகட் கெல்லாம் சுந்தரரும் அவனை ஆட்கொண்ட
அண்ணலும் புறம் சென்று கூறினான் விறன்மிண்டர்

## சரணம்

அடியார்கள் மீது திருப்பதிகம் பாட சுந்தரருக்கு
அடியெடுத்து தந்து, விறன்மிண்டர் கோபம் தீர்த்தீர்

அடியார்கட்குச் செய்யும் அரும் சேவையில் மகிழ்ந்து
அருங் கணங்கட் கெல்லாம் அதிபராக்கிக் கொண்டீர்.

## பல்லவி

க ப தா , தாஸ் ஸ்ஸாநி தா பா ॥ பதாநிதா பா ॥ பததப மகரீ ॥
அ டி யார் களை வணங் கா மல் ॥ உன்னை மட்டும் ॥ ப . ணிந்த. ॥

கா, பமாகா ரீ, ஸா ஸா, ॥ ஸ ரீ கா , ரி க ॥ பா ; பா பா ॥
சுந் த ரர் மீ து கோ ப ம் ॥ கொண்டான்வி. ॥ றன் மிண்டன் ॥

## அனுபல்லவி

ப த த ப ம க கா ரீ, க பா பா ॥ க பா தா , தா ॥ ஸ்ா, நி தபத ॥
அ டி க ட் கெல்லாம் சுந்த ரரும் ॥ அவ னை யாட் ॥ கொண் . . ட
॥

தாஸ் ரீ ., ரீ . ஸா, நி த ப தா ॥ ஸா நி தா பா ॥ மக ரிக பா பா ॥
அண்ணலும் பு றம் சென் . று ॥ கூ றி னா ன் ॥ வி . றன் மிண் டன் ॥

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| க ப தாத தாத பத ஸ்நி தா பா | ॥ தா, பா, தப | ॥ மகரிக பா; | ॥ |
| அடியார்கள் மீது திருப் பதிகம் | ॥ பா ட கந் | ॥ த . ரர்க் கு | ॥ |
| கபா தஸ் நி தப பதத ப ம க ரீ | ॥ க ப தா , ஸ்ா | ॥ ஸ்ாநித ஸாஸா | ॥ |
| அடியெடுத்து . தந் . . து . . | ॥ வி றன் மிண் டர் | ॥ கோ பம் தீர்த்தீர் | ॥ |
| ப தா ஸ்ா, ரீ .க்ா; க்ா; | ॥ ரிக்ப்ா ம் க் ரி ஸ் | ॥ ஸ்ஸ்ாநி தப தா | ॥ |
| அடியார்க்குச் செய்யும் | ॥ அரும் சே . வையில் | ॥ ம கிழ்ந்து . . | ॥ |
| பதாக் ரீஸ்ா ஸ்ா , நி த பதா | ॥ தஸ்ாநி தா பா | ॥ பததப மகரீ | ॥ |
| அருங்கணங்கட் கெல் . . லாம் | ॥ அ தி ப ராக்கி | ॥ கொண் . . டீ . ர் | ॥ |

## 7. அமர்நீதி நாயனார்

வணிகர் - சோழநாடு - பழையாறை - ஆனி - பூரம்

ஒரு சிவணடியார், அமர்நீதியிடம் ஓர் கோவனத்தைத் தந்து பத்திரமாக வைத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, தான் நீராடச் சென்றார். கோவணத்தைத் திருப்பித்தர முடியாமல் அது காணக்கிடைக்காமற் போயிற்று, அதற்கீடாக அதனெடை பொருள்கள் போதுமானதென்று அடிகள் கூறவும், அதன்படியே அமர்நீதி பொருள்கள் யாவையும் வைத்தும், தராக தூக்கியே நின்றது பின்னர் மகனுடன் மனைவி நின்றும், தராக தாழாததால், தானே ஏறி நின்றதும் தராகடனே மூவரும் சிவலோகம் சென்றனர்.

**ராகம் : தன்யாசி (8)** **ஆ : ஸகமபநிஸ்**
**தாளம் : கண்டசாபு** **அவ : ஸ்நிதபமகரிஸ**

**பல்லவி**

அன்னமும் ஆடையும் அடியார்களிக்கும்
அமர்நீதிக்கருள் செய்ய எண்ணம் கொண்டனை

**அனுபல்லவி**

கன்னி நதி காவிரியில் நீராடச் செல்லு முன்
கோவணத்தைத் தந்து மறைந்திடச் செய்தீர்

**சரணம்**

தொலைத்த கோவணத்தின் எடைக்கு ஈடு செய்ய
மனைவி மகன் பொருளுடன் தாமும் தராசில் நிற்க
மலைத்து மானிடர் நோக்க தேவர் பூமாரி பெய்ய
மூவரும் தராகடன் சிவலோகம் செல்வித்தீரே.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| பநிஸ்ஸா | ॥ ஸ்நிரி,ஸ் நித ப | ॥ கம ப த ப | ॥ பமமக கரிஸ ॥ |
| அன்னமும் | ॥ ஆ. . . டை . யும் | ॥ அடியார்க்க | ॥ ளி. . . . . க்கும் ॥ |
| ஸநிஸ மகமா | ॥ பப பக ம | ॥ பநி ஸ் ஸ்ா ரி. நி | ॥ ஸ்ா ; , ॥ |
| அமர்நீ . . . திக் | ॥ கருள் செய்ய | ॥ எண்ணம் கொண்ட. | ॥ னை ॥ |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ஸ்ாநி க்ரி. | ॥ ஸாபநிஸ் | ॥ பநிஸ்ரிஸ் | ॥ நீ த பா ॥ |
| கன்னிநதி | ॥ கா விரியில் | ॥ நீ . ரா . டச் | ॥ செல்லு முன் ॥ |
| கா ம ப ப | ॥ நீ த பா | ॥ பநி ஸ் ஸ்ா | ॥ ஸ் ரிஸ்ரி நிஸ்ா ॥ |
| கோவணத்தைத் | ॥ தந்து | ॥ மறைந்திடச் | ॥ செய் . . தீ ர் ॥ |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| க ம ப பா | ॥ பத பா , | ॥ கமப தப | ॥ ம கக ரி ஸ ॥ |
| தொலைத்தகோ | ॥ வணத்தின் | ॥ எடைக்குஈ | ॥ டு . செய்ய ॥ |
| ஸ ஸஸ ம க | ॥ மம மபபம க | ॥ கம பா ப | ॥ நீஸ் தப ॥ |
| மனைவிமகன் | ॥ பொருளு. டன். | ॥ தா . மும் த | ॥ ராசில் நிற்க ॥ |
| மகம பா | ॥ ப நிஸா ஸ் | ॥ ஸ்ாம்க்ரி | ॥ ஸ்ா ரி.நி ஸ் ॥ |
| மலைத்து மா | ॥ னிடர் நோக்க | ॥ தேவர் பூ. | ॥ மாரி. பெய்ய ॥ |
| பநிஸ்ஸா | ॥ நீஸ் தப | ॥ கம பதப | ॥ ம க க ரி ஸ ॥ |
| மூ. வரும் | ॥ தராசுடன் | ॥ சிவலோ . கம் | ॥ செல்வித்தீரே ॥ |

# 8. எறிபந்த நாயனார்

சோழநாடு - கருவூர் - மாசி - ஹஸ்தம்

எந்த சமயத்திலும் யாருக்கு யாரால் எந்தத் தீங்கு ஏற்படினும், எறிபத்தர் தானாகவே முன் சென்று அவர்களுக்கு உதவி புரிவார். ஒரு சமயம் சிவகாமியாண்டான் என்னும் சிவபக்தர் ஈசனுக்கு மலர் பறித்து வருகையில், அவ்வழியே வந்த பட்டத்துயானை அவரது பூக்குடலையைப் பறித்து இழுத்து அவரையும் கீழே தள்ளிவிட்டது. இதனைக் கண்ணுற்ற எறிபக்தர், மிகுந்த கோபங்கொண்டு பட்டத்து யானையை பாகனுடன் கொன்றார். இதனையறிந்து பதறி வந்து புகழ்ச்சோழன், யானையைக் கொல செய்த சிவபக்தர் எறிபத்தரென்று தெரிந்து, காரணமறிந்து கலங்கி, தன்னையும் வெட்டிவிடுமாறு, உடைவாளை எறிபத்தரிடம் தந்தார். அரசனுடைய நிலையைக் கண்ட எறிபத்தர், தன்னைத் தானே மாய்த்துக் கொள்ள முயலுகையில் வானில் தன்னால்தான் இவ்வாறு நடந்தனைத்து என்று கூறி, யானையை பாகனுடன் எழுந்திடச் செய்தார் ஈசன்.

**ராகம் : ஆரபி (29)** **ஆ : ஸரிமபதஸ்**
**தாளம் : ஆதி (திச்ர)** **அவ : ஸ்நிதபமகரிஸ**

**பல்லவி**

பட்டத்துயானை சிவகாமி யாண்டான் உன் பூசைக்கு
பறித்த மலர்களை பறித்து அழித்ததே

**அனுபல்லவி**

மட்டற்ற கோபம் கொண்டு பார்த்த எறிபத்தரும்
மழுவால் மதயானையை பாகனுடன் கொன்றான்

**சரணம்**

புகழ்ச் சோழன் மிக வருந்தி தன்னையும் கொல்லத்தந்த
உடைவாளால் எறிபத்தர் தம் உயிர் மாய்த்துக் கொள்ளுமுன்
மகிழ்ந்துன் அருள்விளையாட்டு எனக் கூறி
மதயானை பாகனுடன் பிழைத் தெழச் செய்தாயே.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| தப பா பா பா பா ம ம | ॥ பா பத பா | ॥ மாக ரீ , | ॥ |
| பட்டத் து யா னை சி வ | ॥ காமியாண் | ॥ டான் உன் | ॥ |
| ரிப ம கரிஸ ஸநி த ஸா ஸ | ॥ ஸரி பம பா | ॥ பதஸ் நிதப | ॥ |
| பூ. சைக் கு பறித்த மலர்களை | ॥ பறித்து . . | ॥ அழித்ததே | ॥ |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ப ம பா தா ஸ்ாஸ் ஸ் ஸ்ா | ॥ தா ஸா ரிரி | ॥ ரி.ம் க் ரீ . , | ॥ |
| மட் டற் ற கோபம் கொண்டு | ॥ பார்த்த எறி | ॥ ப . த்த ரும் | ॥ |
| தரி. ஸா ஸ் நி தா த பா, | ॥ பம பத பா | ॥ மாக ரீ | ॥ |
| மழு வால் ம த யானை யை | ॥ பா . கனுடன் | ॥ கொன் றான் | ॥ |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ம த தா பா பப பப பா | ॥ மா பத பா | ॥ மா கரி ரீ | ॥ |
| புகழ் சோழன் மிக வருந் தி | ॥ தன்னை. யும் | ॥ கொல்லத் தந்த | ॥ |
| ரி ப ம க ரீ ததஸா ஸா | ॥ த ஸ ரி ம க ரி | ॥ ரீ ரி ரீ, | ॥ |
| உடைவா . ளால் எறி பத்தர் | ॥ தம் . உயிர் மாய்த்துக் | ॥ கொள்ளுமுன் | ॥ |
| ம தா பா , தா ; ஸ்ஸ் | ॥ தஸ் ரி ம் க் ரி | ॥ ரீ . ரி. ரீ . ரீ . | ॥ |
| மகிழ்ந்து உன் அருள் | ॥ விளையாட்டு | ॥ எனக் கூ றி | ॥ |
| தரி. ஸ்ா ஸ்ா தாத த பா | ॥ ம பா த பா<br>॥ | ॥ மக ரீ ரீ | |
| மத யா னை பாக னுடன் | ॥ பழைத்தெழச் | ॥ செய்தா யே | ॥ |

## 9. ஏனாதிநாத நாயனார்

சான்றார் - சோழநாடு - எயின்னூர் - புரட்டாசி - உத்திராடம்

அரசாங்க வாள்வித்தை பயில்விக்கும் ஆசான் ஏனாதினாதன். அவனிடம் அசூயை கொண்ட அதிசூரன் போட்டியில் தோற்றும், சூதாக ஜெயித்திட எண்ணங் கொண்டான். விபூதி தரித்தவர்களிடம் ஏனாதினாதன் சண்டையிடமாட்டான் என்பதை பயன்படுத்திக்கொள்ள எண்ணினான் அதிசூரன்.

ஏனாதினாதனை தனியாகப் போருக்கழைத்து, சிவசிந்தனை சிறிதுமற்ற, தன் நெற்றியில் விபூதியணிந்து, கிட்ட நெருங்கி தன் நெற்றியைக் காட்டியதும் இவனாலேயே தான் இறக்கவேண்டுமென்று, மனமுவந்து ஏனாதினாதனும் அவனை எதிர்க்காமலேயே இறந்தான். இவனது விபூதிபக்தியைக் கண்டுமெச்சிய பரமன் காட்சிதந்து அவனைக் கரையேற்றினார்.

ராகம் : ஹம்ஸத்வனி (29) ஆ : ஸரிகபநிஸ்
தாளம் : கண்டசாபு அவ : ஸ்நிபகரிஸ

**பல்லவி**

அரச வாள்வித்தை யாசான் ஏனாதி நாதனுடன்
அதிசூரன் அசூயை கொண்டு உரிமைக்கு போரிட்டான்

**அனுபல்லவி**

பரம பக்தன் போல் திருநீறை நெற்றியிலிட்டு
போரில் தோற்ற அதிசூரன் தனியே போரிட வந்தான்

**சரணம்**

விபூதி நெற்றியைக் கண்ட ஏனாதிநாதன் - சூரன்
விரும்பியபடி தானேமுன் சென்றிறக்க
விபூதி மேல் ஏனாதி கொண்ட பேரன்பைக் கண்டு
வெளிப்பட்டு உந்தன் காட்சி தந்தாயே.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| கப நி ஸ்நி | ப ப க ரி க | கபகாரி | ஸாரி ஸ ஸ |
| அர ச வாள் | வித்தைஆ. சான் | ஏ. னாதி | நா தனுட ன் |
| ஸ ஸ நீ ப | நிஸ ரி ரி ரி | க ப க ரி க | பா ப பா |
| அ தி சூ ர ன் | அ சூயை கொண்டு | உரிமைக்கு | போரிட்டான் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ஸ் ஸ் நி ப ப | ஸ்ா, ஸ்ஸ் | ஸ் ரி. ரீ . ஸ் | நி ப நி ஸ்ா |
| ப ர ம பக் தன் | போல்திரு | நீ. ரை நெற் | றி யி லிட்டு |
| ஸ்ரிக்ப் க்ரிஸ் | ஸ் நிபா ப நி ஸ் | ஸ்ஸ் ஸ் நிபா பா | பகநிப கரிஸ |
| போ.ரில் தோற்ற | அ . தி சூ . ரன் | தனி யே . . போ | ரி . ட . வந்தான் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| க ப க ரி க | பா பா ப | க ப நீஸ்நிபா | பகநிப கரிஸ |
| வி பூதி நெற்றி | யைக் கண்ட | ஏ.னா . . தி | னா . . . தன் . . |
| கா ப க ரி | ஸஸக ரிஸநிபா | ஸரி க ரிக | பா பப ப |
| சூரன் விரும் | பய ப.டி. . . | தா.னே . முன் | சென்றிறக்க |
| நி ஸ் நி பக | பநி ஸாஸ் | ஸ் நிஸ் ரீ | க்ா ப் க் ரி |
| வி பூதி மேல் | ஏ . னா தி | கொண்டபே | ரன்பைக்கண்டு |
| நி ரி. க் ரீ . | நி ப நி ஸ்ா | ஸ் நிபா ப | கரிஸரீ |
| வெளி ப்பட்டு | உந் . தன் | கா . ட்சிதந் | தா . . யே |

# 10. கண்ணப்ப நாயனார்

வேடர் - தொண்டைநாடு - உடுப்பூர் - தை - மிருகசிருடம்

கன்னி வேட்டைக்கு செல்கையில், மலையுச்சியில் கோயினைக் கண்ட திண்ணன் ஈசனால் தடுத்தாட் கொள்ளப்பட்டார் என்றே சொல்லலாம். வீடு திரும்ப மனமில்லாமல் தன்னிச்சைப்படி, செருப்பால் சுத்தம் செய்து, வாய் நீரால் அபிடேகம் செய்து, எச்சில் ஊனைப் படைத்து, அங்கேயே காவல் புரிந்து வந்தான் திண்ணன். வழக்கமாக பூசை புரியும் கோசரியார், ஈசன்முன் இறைந்துகிடக்கும் இறைச்சியைக் கண்டு மனக்கலக்க முற்றார் ஈசன் அவருடைய கனவில் தோன்றி நடப்பதை ஒளிந்திருந்து பார்க்குமாறு பணித்தார்.

வழக்கமாக இறைச்சியுடன் பூசைபுரிய வந்த திண்ணன், ஈசனின் ஒர கண்ணினின்றும் வழியும் உதிரத்தினைக் கண்டான். தனக்கு தெரிந்த பச்சிலை வைத்தியம் செய்தும் பயன்படவில்லை. பின் ஊனுக்கு ஊனே சரியென்று தெளிந்து தன் கண்ணைப் பெயர்த்து, ஈசனின் கண்ணில் பொருத்த, ரத்தம் பெருகுவது நின்றுவிட்டது. ஆனால் மறுகண்ணில் உதிரம் வர ஆரம்பித்து விட்டது. மனம் தெளிந்து, தனது காலினால், ஈசனது கண் இருக்குமிடம் தெரிய அடையாளம் வைத்துக்கொண்டு, தன் மறுகண்ணைக் பெயர்க்கையில் ‘‘நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! எனத் தடுத்து நிறுத்தினார் ஈசன். அவனுடைய அன்பில் மகிழ்ந்து ஈசன் அவனைத் தன் வலப் பக்கத்தில் இருக்க அருள் செய்தார்.

ராகம் : புன்னாகவராளி (8) ஆ : நிஸரிகமபதநி

தாளம் : ஆதி அவ : நிதபமகரிஸநி

**பல்லவி**

செருப்பால் சுத்தம் செய்து வாய்நீரை உமிழ்ந்து எச்சில்
ஊனைப் படைத்துனக்கு காவல் புரிந்தான் திண்ணன்.

**அனுபல்லவி**

அருச்சனை செய்யும் சிவ கோசரியார்க்கு திண்ணன்
அன்பைக் காட்ட ஒளிந்து பார்த்திடச் சொன்னாய்

**சரணம்**

கண்ணில் உதிரங் காட்டி திண்ணன் கண்ணையப்ப - மறு
கண்ணிலும் உதிரம் காட்ட மற்றொன்றை பெயர்க்கையில்
திண்ணன் கைப்பிடித்து - நில் கண்ணப்பா எனக்கூறி
அவனை எக்காலும் வலப்பக்கமிருத்தினாய்.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , ஸப பா பா பம ம ககரிஸ | ; , ஸரி காரி | ஸாரி நி ஸா ; |
| செருப்பால் சுத் தம். . செய்து | வாய்நீரை | உமிழ்ந்து |
| ; , ஸஸமாம மமா பபமகா | ; , ரிகமபா | பம மக க ரிஸா |
| எச்சிலூனை படைத்துனக்கு | கா, வல்பு | ரிந்தான்திண் . ணன் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , ஸஸம ம மா மா, ம பப ம | கா, கா ம மா | பா ; பாதா |
| அருச் சனை செய்யும் சி . வ . | . கோச ரி | யார்க்கு . |
| பா, காக கா கா கா , பபா | த பா ரிக ம பா | பம மக கரி ஸா |
| அன்பைக் காட்ட ஒளிந் | து . பார்த் திடச் | சொன் . . . . னாய் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , ஸரிகாரிஸ ஸா ஸா, ரிஸ | நீ , ஸஸஸாரி | ஸரிகரி கா கா |
| கண்ணில் உதி ரம் காட்டி . | திண்ணன் கண்ணை | யப்ப . ம று |
| ; , காம மா பபா ப பா தா | பா, மபத பா | மப காரி ஸா, |
| கண்ணிலும் உதிரம் காட்ட | மற்றொன்றை | பெயர்க்கையில் |
| ; , பா க மா பா பா தா பா | பா, பா த பா | ப பா பா, தப |
| திண்ணன்கை ப டித் து | நில் கண்ணப்பா | எனக் கூ றி . |
| மா, ரிகரி கா மா பா பா தா | பா, ரி க ம பா | மக மக கரி ஸா |
| அவனைஎக் கா . . லும் | வலப் பக்க | மி . ருத் தி . னாய் |

## 11. குங்கலியக்கலய நாயனார்

அந்தணர் - சோழநாடு - திருக்கடவூர் - ஆவணி - மூலம்

ஆண்டவனுக்கு குங்கலிய தூபம் காட்டுவதே தொண்டாகக் கொண்ட குங்கலியக்கலயனாருக்கு கொடிய வறுமையேற்பட்டது. விற்பதற்கு ஏதும் பொருளின்றி, மனைவியின் மாங்கல்யத்தை விற்று, பொருள் வாங்க கடைக்குச் செல்கையில், குங்கலியப் பொதி மூட்டையுடன் ஒருவன் எதிர்ப்பட்டான். அவனிடம் மாங்கல்யம் தனைத் தந்து, குங்கலியப் பொதியைப் பெற்று, அதைக் கோயிலில் சேர்த்து, தானும் அங்கேயே இருந்தார். மகிழ்ந்த ஈசன் குங்கலியக் கலயனாரின் வீட்டில் பல பொருள்களையும் நிரப்பி, கலயனாரையும் வீட்டிற்குச் சென்று உணவருந்தும்படி வானொலியில் கூறினார். ஆண்டவன் கட்டளையை மீற பயந்து, கலயனார் வீட்டிற்குச் செல்ல, வீட்டிலுள்ள பொருள்களைக் கண்டு மகிழ்ந்து, ஐயன் அருளை எண்ணி உருகினார்.

திருப்பனந்தாளில் ஓர் பெண்ணின் பூஜைக்காக சாய்ந்திருந்த லிங்கத்தினை, தன் கழுத்திலும் லிங்கத்தின் கழுத்திலுமாக ஓர் கெட்டியான கயிற்றைக் கட்டி இழுத்து சரிசெய்தார். இவ்வாறு சிவத்தொண்டு பல செய்து சிவலோகம் சென்றார்.

**ராகம் : மலயமாருதம் (16)** **ஆ : ஸரிகபதநிஸ்**

**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிதபகரிஸ**

**பல்லவி**

மாங்கல்யம் தனை விற்று மக்கள் பசியாற்றாது
குங்கிலியப் பொதி வாங்கிக் கோயில் சென்றார் கலயர்

**அனுபல்லவி**

பாங்குடன் இல்லத்தில் பல பொருள் நிரப்பிப்
பரிவுடன் உணவருந்த அவனையும் அனுப்பினீர்

**சரணம்**

நழுவிய ஆடையுடன் மாலை சாத்துதற்கேற்பச்
சாய்ந்த லிங்கத்தினை சரி செய்திடவே – தம்
கழுத்தில் கட்டிய கயிற்றினால் லிங்கத்தைக்
கலயனார் இழுக்க நிமிர்ந்திடச் செய்தீரே !

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , கபதநீ ஸ்ஸா ஸா, ஸா | ; , நிஸ் நிதா | பா , பா, தப |
| மாங்கல்யம் தனை விற் று | மக்கள்ப சி | ஆற் றா து. |
| கா, கபத பா க பா க ரீ ஸா | ஸ ரீ கா , கா | ப பா பா ப பா |
| குங்கிலிய பொதி வாங்கிக் | கோயில்சென்றார் | க ல யர் . . . |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , நீ த பா பா பா த ப கா | ; , க பத நீ | ஸ்ாஸ்ா ஸ்ா; |
| பாங் குடன் இல் லத் தில் | பல பொருள் | நி ரப் பப் |
| ; , ஸ்ஸ் ரி ஸா; , நிஸ் நித ப | ; , கப க ரீ | ; , கக ப பா |
| பரிவுடன் உணவருந்த | அவனையும் | அனுப்பனீர் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , கபக ரிக பா, ப பா பா | கா, ப தா நித | பா தா பா; |
| நழுவி . ய ஆடை யுடன் | மா லை சாத் துதற் | கே ற் பச் |
| ; , கதப பா பா, பக ரிஸா | ; , ஸரி காக | பா பா பா; |
| சாய்ந்த லிங் கத் தினைச் | சரி செய்தி | ட வே தம் |
| ; , த நி த பா பா பா த ப கா | ; க பா தநீ | த நி ஸ்ா ஸ்ா ஸ்ா |
| கழுத்தில் கட் டி ய . . | கயிற் றினால் | லிங் . . கத் தைக் |
| ; , நிக்ரி.ஸ்ா ஸ் நிநி த பா; | ; , த நித பா | க பா க ரீ ஸா |
| கலயனார் இ . ழுக் க | நிமிர்ந்திடச் | செய் தீ . ரே |

# 12. மானக்கஞ்சாற நாயனார்

வேளாளர் - சோழநாடு - காஞ்சனூர் - மார்கழி - சுவாதி

சிவனடியார்கள் வந்து எது கேட்டாலும் மறுக்காது அளிப்பவர் மானக்கஞ்சாறர். அவருடைய மகளுக்கும், ஏயர்கோன் கலிக்காமருக்கும் திருமணம் நடக்கவிருக்கிறது. திருமணத்தன்று தன்னை வணங்கிய மணப்பெண்ணின் முடியில் விருப்பம் கொண்ட சிவனடியார், மானக் கஞ்சாறைக் கேட்க, தயக்கமின்றி அவரும் வெட்டித் தந்ததும், அடியார் மறைந்து விண்ணில் ஐயன் காட்சி அளித்தார்.

ஏயர்கோன் கலிக்காமன் ஈசனை வேண்ட, பழையபடி அப்பெண்ணுக்கு முடிவந்து விட்டது.

ராகம் : பந்துவராளி தாளம் : ஆதி (திச்ர)

**பல்லவி**

மானக் கஞ்சாறர் மகட்கும் ஏயர் கோன் கலிக்காமர்க்கும்
மணமன்று மாவிரத முனிவராய்ச் சென்றீர்

**அனுபல்லவி**

மானக்கஞ்சாறர் மகள் தேன்வார் கூந்தல் நாம்
பூணும் பஞ்சவடிக்கும் பொருந்துமென்றுரைத்தீரே

**சரணம்**

மணநாள் எனவும் பாரார் மகளே எனவும் பாரார்
மணமலி கூந்தல் கொய்து மாதேவா உனக்குத் தந்தார்
தினிந்த பத்திமை கண்டு தேன்மலி கூந்தல் முன்போல்
செழித்து வளரச் செய்து கலிக்காமர் மணம்புரி வித்தீர்.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| தா ரி. ஸ்ஸா ஸ்நித பபா | கா நி த ப ப | மகம க ரி ஸ | |
| மானக் கஞ்சா றர்ம கட்கும் | ஏ யர் கோன் க | லிக்கா . மர்க்கும் | |
| ஸ ரிகா கா கம ப பதா | | தநித பாம | கமப தா, |
| மண மன்று மா விர த | | முனிவ ராய் | சென் . றீர் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| தா நி ம தா நீநி ரி.ஸ்ா | நிக்ரி ஸ்ாஸ் | ஸ்நித நீஸ் |
| மானக் கஞ்சா றற் மகள் | தேன் . . வார்கூந் | தல் . . நாம் |
| ஸ்ரி.க்ா க் ப்ம் க்ரிரி ஸ்ஸா | ஸ்ஸ்ஸ் நிதப | பமக தபத |
| பூ .ணும் பஞ்ச வடி . .க்கும் பொரு. | ந்தும் என் | று ரை த்தீரே |

**சரணம்**

| | | |
|---|---|---|
| க ம பா பத பாபா பம | ப த நி ஸ் நித | பா பம கா |
| மணநாள் எனவும் பாரார் | ம க ளே . என் | வும் பா . ரார் |
| க ம பபமா க மகரி ஸநி | ஸரி கா கா | கமப பபப |
| மண மலி . கூந் . தல். கொய்து | மா . தே வா | உனக்கு தந்தார் |
| ஸ்நித மத நி ஸா ஸ் ஸ்ா , | ஸ்ரி. க்ாம் க் | க்ரிஸ்ா ; |
| திணிந்த பத்திமை கண்டு . தேன் | மலி கூந்தல் | முன் போல் |
| தநி ஸ்ஸா நித பத நீ , நிநி | த ஸ் நி த ப ம | கம ப தா, |
| செழித்து வளர செய்து கலி | க்கா மர் மணம் | புரிவித் தீர் |

# 13. அரிவாட்டய நாயனார்

வேளாளர் - சோழநாடு - கணமங்கலம் - தை - திருவாதிரை

ஐயனுக்குத் தவறாமல் சோறும் கீரையும் மாவடுவும் படைத்து வந்த அரிவாட்டயனை, சோதிக்க மிகுந்த வறுமையினை அவனுக்கு அளித்தார் ஈசன், தான் பட்டினி கிடந்தும் பணியைத் தொடர்ந்தான் அறிவாட்டயன். ஒருநாள் பட்டினியால் வாடி, உடல் சோர்ந்து, ஐயனுக்குப் படைக்க எடுத்துச் சென்ற சோறு, கால் தடுக்கி வீழ்ந்து, பள்ளத்தில் சிதறியது மிகுந்த துயருற்று அறிவாட்டயன், தன்னை மாய்த்துக் கொள்ளும் பொழுது தடுத்து, அச்சோற்றினையும் உண்டு அவனுக்கு சிவலோக பதமும் அருளினார் ஈசன்.

| | |
|---|---|
| ராகம் : ஆபோகி (22) | ஆ : ஸரிகமதஸ் |
| தாளம் : ஆதி (திச்ரநடை) | அவ : ஸ்தமகரிஸ |

**பல்லவி**

சோறு கீரை மாவடு தன்னை தவறாது படைப்பவனை
சோதிக்க வறுமையினை அவருக்களித்தீர்

**அனுபல்லவி**

வேற வழியின்றி நெல்லறுத்த கூலியில் பெற்ற
செந்நெல்லை தவறாது படைத்தார் நாயனார்.

**சரணம்**

படைக்கும் நாளிலவன் சோறுடன் பள்ளத்தில் வீழ
பாழான சோற்றுக்காக உயிரை மாய்க்க எண்ணி
இடையரிவாளினால் தம் கழுத்தை அறுக் கையிலே
தடுத்து அச் சோற்றையுண்டு சிவலோகம் அருள் செய்தீர்.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ஸ்ாஸ் தாம மாக கக ரி | கரி ஸ தமத | ஸஸஸ ஸஸா |
| சோறு கீரை மாவ டுதன்னை | தவறா . து. ப | டைப்ப வ னை |
| தஸரிகா, கமம மமா | க ம தா ஸ்ா | தஸ் த ம மத |
| சோதிக்க வறுமையினை | அவருக் க | ளித் தீ . ர் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ஸ்ா ஸ் தமத ஸ்ா ; ஸ்ா | த ஸ் ரீ மா | க் ரி க் ரி ஸ்ா |
| வே று வழியின் றி நெல் | வ றுத்த கூ | லியில் பெற் ற |
| ம்க் க்ரி ஸ்ா தஸ் தம தா | தஸா தா ம | கரீ ரி ஸா |
| செந் நெல் லைத் தவ றா . து | படைத் தா ர் | நா . ய னார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ரிகா மா, மக ரிக மா | ம த நி தா ம | , ரிக கரி ஸ |
| படைக்கும் நா . ளில வன் | சோ . று டன் ப | ள்ளத்தில் வீ . ழ |
| ஸ ம க கரிஸ தமத ஸா ஸ | த ஸ ரீ ரி க | மா, மா ம |
| பா. . ழா. ன சோற்றுக் காக | உயிரை மாய்க் | எண்ணி |
| தஸ் த த த ம த ஸ்ா ஸ்ா , | த ஸ்ா ரீ ம் | க்ா க் ரி ஸா |
| இடை யரி வா . ளினால் தம் | க ழுத் தை அ | றுக் கையி லே |
| ஸ் ம் க் ரி. ஸா தா ஸ் தமத | ரி.ஸ் தஸ் தம | கம கரிஸா |
| தடுத்து . அச்சோற்றைஉண்டு | சிவ லோ. கம் | அருள் செய்தீர் |

## 14. ஆனாய நாயனார்

இடையர் - எழுநாடு - மங்கலவூர் - கார்த்திகை - ஹஸ்தம்

மாடு மேய்க்கச் செல்கையில் ஆனாயன் குழல் எடுத்துச் செல்வான் திருவைந்தெழுத்தை மனத்தில் இருத்தியே எப்பொழுதும் குழல் ஊதுவான். இப்பணி செய்தே பரமணனடி சேர்ந்தான் ஆனாயன்.

ராகம் : கமாஸ் (28)　　　　　　ஆ : ஸமகமபதநிஸ்

தாளம் : ஆதி　　　அவ : ஸ்நிதபமகரிஸ

**பல்லவி**

திரு நீற்றைப் பூசி இடைக்குலத் தொழிலைத்
தினமும் உவந்தே செய்தார் திருமங்கலத்தானாயன்

**அனுபல்லவி**

திருவைந்தெழுத்தையே மனத்தினில் இருத்தியே
மெய் மறந்து கொன்றை மரத்தடியில் குழல் ஊத

**சரணம்**

கன்றும் தாயை மறந்து அவர் காலடிச் செல்ல
ககனம் முழுதும் அசையாமல் நிற்க
மன்றுளாடல் செய்தீர் மன்னுமுன் காட்சிதந்து
பொன்னம்பலத்தில் அவர் பொலிவுற்றிருக்கச் செய்தீர்.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , பஸ் ஸா ஸ் நீ ஸ்நி நீ நீ | ; , த நீ த ப | பம பா தாபா |
| திரு நீற்றை பூ . . சி . | இடைக் குலத் | தொ . ழிலைத் |
| ; ஸ மகா ம பா தா பத நீ | ஸா, ஸ் ஸ் நீ த | பா ம க ம பத நி |
| தினமும் உ வந் தே. செய் | தார் திரு மங்க | லத் தானா . யன் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , மநி தா நி ஸ்ா; நீஸ்ா | ; , நித நிஸ்ா | ஸ் நி நி த தா பா |
| திரு வைந்தெழுத் தையே | மனத்தினில் | இ ரு த் தி யே |
| ; , ஸ் ஸ்நிதநி ஸ்ாஸ்ாஸ்ாஸ்ா | ; , ஸ் க் க் கா | ரி ம் க்ரிஸ்ாஸ்ா |
| திரு வைந் . தெழுத் தையே | மனத்தினில் | இ ரு த் தி யே |
| ; , மா க மா பா, தபத த நி | ஸ்ா, தஸ் நி தா | பா ; கம பத |
| மெய் மறந்து கொன்றை ம . | ரத் . தடி யில்கு | ழல் ஊ..த. |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ; , தாநி தா தா , த தா நீ | தா, பத நிஸா | ஸ் நிநித தா பா | |
| கன்றுமம் தாயை மறந் துஅ | வர் கா . லடிச் | செல் . . . ல | |
| ; , மநி தபா மபதாநிதபமமக | மம கம நிதநிப | தநிதநி பதா, | |
| ககன ம்மு. மு. . தும் | அசை யா . மல் | நி. . ற் க . | |
| ; , மநி த நீ ஸ்ா, ஸ்ா , ஸா | ; , ஸ்ா க்ா க் | ம்க்க்ரி ஸ்ா; | |
| மன்றுளாடல் செய் தீர் | மன்னு முன் | கா . ட்சி . தந்து | |
| ; , மா க மா பா பா, ததநி | ஸ்ா, நிஸ்நி தா | பா பா ; கம | பதநி |
| பொன்னம்பலத்தில் அவ | ர் பொலிவுற்றி | ருக் க . செய் | தீர் . . |

# 15. மூர்த்தி நாயனார்

வணிகர் - பாண்டியநாடு - மதுரை - ஆடி - கிருத்திகை

ஈசனுக்கு மணமிகு சந்தனம் சாத்திக் தொண்டு செய்தான் மூர்த்தி. இதற்குப் பலவித இடையூறுகளைச் செய்தான் அவ்வூர் அரசன், சந்தனம் கிடைக்காமல் வருந்தி தம் முழுங்கையையே குருதி வரத் தேய்த்தான்.

ஐயன் அருளால் மன்னன் இறந்தான். அவனுக்கு வாரிசு இல்லாததால் பட்டத்து யானையைக் கொண்டு, மாலையிடச் செய்து அரசனைத் தேர்ந்தெடுக்கையில், மூர்த்திக்கு அரச பதவி கிடைத்தது. அரசனான மூர்த்தி பணியை விடாது தொடர்ந்து செய்து பரமனடி சேர்ந்தான்.

ராகம் : தோடி (8) தாளம் : ஆதி

**பல்லவி**

மணமிகு சந்தனக்காப்பு உனக்கணிவித்து
மகிழ்ந்தார் மதுரைவாழ் வணிகர் மூர்த்தி

**அனுபல்லவி**

குணமில்லா மன்னனால் தொண்டு தடை பட
வருந்தித்தம் முழங்கைக் குருதிவரத் தேய்த்தார்

**சரணம்**

மூர்த்தி செயல் தடுத்து மூட மன்னன் மாளச் செய்து
யானை மூலம் அரசை அவர் அடைந்திட் செய்தாயே
கீர்த்தியுடன் ஆண்டு சைவமோங்கத் தொண்டு செய்து
சீலமுடன் வாழ்ந்தவரைச் சீரடி பற்ற செய்தாய்.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ; , ம க ரி ஸா ரிஸ நிதநி ஸ்ஸா | ; , ஸரி க மா | ப க மா பா பா | |
| மண மிகு சந் . . . . . தன | காப் புனக் | க . ணி வித்து | |
| ; கம ப தா த நிஸ்ரி நீ. ஸ்ா | ; , ஸ்நி தமா | ம தம க ரி ஸஸ நி | ஸரிக |
| மகிழ் ந்தார் ம து ரை. வாழ் | வணிகர் | மூ . . . ர் த் தி . . . | |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ; , ஸ்நி தபா பம தப மக மா | ; , நீ , தா | ஸ்நி ஸா, ரி. ஸ்ா | |
| குண மில் லா மன். . ன . னால் | தொண் டு | த . டை ப ட | |
| ; , ரிம் காரி ஸ்நித நிஸா; | ; த நீத பா | மக தம கரி ஸா | ஸரிக |
| வருந் தி தம் மு . ழங் கைக் | குரு தி . | வ . ரத் தேய்த்தார் | |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ; , மா ம மமா ; ரிகாமா | ; , ம த நி நி த | தமம க த ம க ரி | |
| மூர்த்தி செயல் தடுத்து | மூ . ட ம ன் | னன் மா.ளச் செய் | |
| ஸா, ஸ ரிகரீ ஸாரிஸ நி.த.நீ. | ஸா, ஸரிக மா | பத பத மா பா | |
| து . . யா .னை மூ லம்அர சை . அ | வர்அடைந்திடச் | செய் . . தா யே | |
| ; , தா த தா தா ; நீ தா | ; , ம தநி நிநி | ஸ்ா ஸ்ா ஸ் ரி ஸ்ா | |
| கீர்த் தியுடன் ஆண்டு | சைவ மோங்கத் | தொண்டு செய் து | |
| ; , ஸ்ாரிக்ரி.ஸ் தம த நீ ஸ்ா | ; , ஸ் நித மா | மக தம கரி ஸா | ஸரிக |
| சீ லமு டன் வா ழ்ந்தவரை | சீ . ர டி | பற் றச் செய்தாய் | |

## 16. முருக நாயனார்

அந்தணர் - சோழநாடு - திருப்புகலூர் - வைகாசி - மூலம்

இவர் திருவைந்தெழுத்தை ஓதிக் கொண்டே, பலவித நறுமலர் பறித்து, மாலை தொடுத்து, ஐயனுக்கு சாத்தித் தொண்டு புரிந்து ஐயனடி சேர்ந்தவர்.

**ராகம் : வஸந்தா (17)** **ஆ : ஸமகமதநிஸ்**
**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிதமகரிஸ**

## பல்லவி

திருப்புகலூர் வர்த்த மானேச்வரம் கோயில்
சிவத் தொண்டு புரிந்தார் அந்தணர் முருகனார்

## அனுபல்லவி

அருமையாய் மலரை ஆரமாய் தொடுத்து
அனுதினம் அய்யனை அலங்கரித்தாரே

## சரணம்

ஞானப்பாலுண்ட திருஞான சம்பந்தரின்
நண்பனாகிப் பல பெருமையும் பெற்று
கான மழை பொழிந்து கணமும் உனை நினைந்து
கசிந்து உருகினாரைக் கழலினை சேர்த்தாயே.

## பல்லவி

| | | |
|---|---|---|
| நிஸ்ா நி தாதா மநிதா ; ; | ம தா நீ, தா | மா க ரீஸா , |
| திருப் பு க லூர் வர்த்த | மா னேச்வ | ரம் கோ . யில் |
| ஸ ஸா மா ; ம மக தம கா; | ; க மா தநீ | ஸ் நி ரீ.ஸா ; |
| சிவத் தொண்டுபு . ரிந் தார் | அந் தணர் | மு . ரு கனார் |

## அனுபல்லவி

| | | |
|---|---|---|
| மதாத தா ; தா தா தா ; | ம தா நி ஸா ; | ஸ் நி ரீ .ஸ்ா ; |
| அருமையாய் மலரை | ஆ. ர மாய் | தொ.டுத்து |
| ஸ்ா ம்க் ரீ.ஸ்ாஸ்ா, நி தமதா | ; ஸ் நீ த மா | மகதம கா ; |
| அ னு . தினம் ஐ ய னை. . | அல ங் க ரித் | தா . . . ரே |

**சரணம்**

| | | |
|---|---|---|
| கமாகரீரீஸா ; ஸா ஸா | ஸமாம மா மா | மக தம கா ; |
| ஞா னப்பாலுண்ட தி ரு | ஞா ன ச ம் | பந் த. ரின் |
| கா. ம தா தா ; ; தா தா | ம தா நி ஸா ரி | ஸா ; ; ; |
| ந ண் பனா கி பல | பெருமையும் பெற் | று . |
| நி ஸா நி தா மா தாநீ ஸா; | ம தா நி ஸா ரீ | ஸ் நி ரீ . ஸ்ா ; |
| கான மழை பொழிந்து | க ணமும்உனை | நி . னைந்து |
| ஸ்க்ாரி. . ஸ்ாஸ்ா தமாம தாதா | நி ஸ்ா நி தா மா | மக தம கரிஸா |
| க சி ந்து உ ரு கி. னா. ரைக் | க ழ லிணைசேர்த் | தா . . . . யே . . |

# 17. உருத்திர பசுபதி நாயனார்

அந்தணர் - சோழநாடு - திருத்தலையூர் - புரட்டாசி - அஸ்வினி

உருத்திர பசுபதியானவர் நீரில் நின்று கொண்டு, சிரம் மேல் கரம் கூப்பி, எப்போதும் ருத்திர மந்திரத்தை சபித்துக் கொண்டே முக்தியடைந்தார்.

| | |
|---|---|
| **ராகம் : அம்ருதவர்ஷிணி (66)** | **ஆ : ஸகமபநிஸ்** |
| **தாளம் : ஆதி (திச்ர நடை)** | **அவ : ஸ்நிபமகஸ** |

**பல்லவி**

திருத்தலையூர் என்னும் திருத்தலம் தன்னில்
சிவத் தொண்டு புரிந்தார் அந்தணர் பசுபதி

**அனுபல்லவி**

ஓமையுடன் தம் சிரம் மேல் கரம் கூப்பி
ஒளிரும் தாமரைத் தடாகத்தில் நின்றே

**சரணம்**

உருத்திர மந்திரத்தை உள்ளன்புடனே
ஒரு போதும் மறவாமல் உச்சரித்தவருக்குத்
திருவருள் புரிந்திடத் திருவுள்ளம் கொண்டுனது
திருவடித் கமலத்தில் சேர்த்துக் கொண்டாயே.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| க ம கக கா ஸா ஸா ; | ஸஸஸ க ஸக | மா ; ; |
| திருத்தலையூர் என்னும் | திருத் தலம் தன் | னில் |
| க ம பநி பம பநீ ஸ்ா, | ஸ் நி ப பா, | கக ம கா, |
| சிவத் தொண்டு, புரிந் தார் | அந் தணர் | பசு ப தி |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| நிஸ் நி பப நி ஸ்ா ; ; | நிஸ் காக்ம் | க்ா, ஸ்ா, |
| ஒருமை யுடன் தம் | சிரம் மேல்சுரம் | கூ ப் ப |
| ஸ்க்ஸ் ஸ்ா நி பா; , ஸ் | ஸ்ா நி ப பம | கம கா; |
| ஒளிரும் தா மரைத் த | டாகத்தி ல். | நின் றே |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ஸககக ஸநிஸ ஸ கா ; | பா பா பம | கமகா ; |
| உருத்திர மந் திரத் தை | உள் ளன் பு. | ட . னே |
| கம பநி பா பமகம கா | ஸ நி ஸக பம | மக ம பா , |
| ஒரு போ . தும் மறவா. மல் | உச் சரித் த | வரு . க்குத் |
| நிஸ் நி பாம பஸ் நி ஸா, | ஸ்நிஸ்க்க்ம் | கா ஸ் ஸ்ஸா |
| திரு வ ருள்பு ரிந் தி டத் | திரு வுள்ளம் | கொண்டு னது. |
| ஸ்ா ஸ்நிபம பஸ்ஸ் ஸா, | ஸ்நி பா பம | கம கா; |
| திரு வடிக் கமலத் தில் | சேர்த்துக்கொண் | டா . யே |

## 18. திரு நாளைப் போவார்நாயனார்

பறையர் - சோழநாடு - ஆதனூர் - புரட்டாசி - மோகினி

ஈசன் கோயிலிலுள்ள தாளவாத்தியங்களுக்கு தோல் வார் முதலியன அளிப்பதோடு, சிவார்ச்சனைக்கு கோரோசனையும், அளிக்கும் பணியைச் செய்து வந்தான் நந்தன்.

திரப்புன்கூரில் நந்தன் தன்னை நன்கு தரிசனம் செய்வதற்காக ஈசன் நந்தியை விலகியிருக்கும்படி பணிந்தார்.

தில்லைக்குச் செல்ல நந்தனுக்கு தீராத ஆவலுண்டாயிற்று, தில்லையன் நினைவு வரும் போதெல்லாம் நந்தன், நாளைப் போவேன் என்பார். இதனால் இவருக்கு திரநாளைப் போவார் என்னும் பெயர் வந்தது. நாளை போவேன் என்று சொல்பவர் ஒரு நாள் தில்லை செல்ல கிளம்பிவிட்டார். ஐயன் கனவில் அருளியபடி தில்லை அந்தணர்கள், மூட்டிய தீயினில் குளித்து கோயிலினுள் சென்று ஐயனுடன் ஒன்றுபட்டார். பின்னர் யாரும் அவரைப் பார்க்க கிடைக்கவில்லை.

**ராகம் : நீலாம்பரி (29)** **ஆ : ஸகமபநிஸ்**

**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிதபமகமகரிஸ**

**பல்லவி**

ஆதனூர் புலையர் நந்தனார் அளித்த கோரோசனையால்
அர்ச்சனை செய்ததில் ஆனந்தம் கொண்டீரே.

**அனுபல்லவி**

காதலுடன் திருப்புன்கூரில் காண வந்தவருக்கு
காவல் நந்தி நகரச் செய்து காட்சி தந்தீர்

**சரணம்**

தில்லையின் எல்லையிலே அவர் தொல்லைப் பிறவித் துயர்
தீர்த்திட எண்ணங் கொண்டீரே
எல்லா அந்தணரும் கூறஎழுப்பிய தீயினில்
மூழ்க அந்தணனாக்கி இணையடி சேர்த்தாயே.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , காமபா ப பாப பாபா | ; , பஸ் ஸ் ஸ்ா | ஸ்ா, நி பாபா |
| ஆத னூர் புலையர் நந்தனார் | அளி த்த கோ | ரோச னையால் |
| ; , பாநி பா பா, ம மக மா | ம காம கா மரி | ரீ பா பமமக |
| அர்ச்சனை செய் த . தில் | ஆ. னந் தம் | கொண்டீ. ரே |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , க மக ஸஸ ப ஸாஸ ஸா ஸா | ; , ஸ் நி ஸ் க் ஸ் | நிஸ்ா நி பப பா |
| கா . தலுடன் திருப் புன்கூ ரில் | கா ணவந் | வந் . த வருக்கு |
| ; , கமப பாப நிஸ்நி பாபம | கா, கம ப ம க | ரீ ரி ப பம மக ॥ மா |
| கா . வல் நந் தி நகர செய்து | . கா ட் சி | செய் . . தீ . . . ॥ ர் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , த ப ம கா ஸா; ஸா ஸா | ; , ஸஸ நி ஸரி | கா ம க கா கா |
| தில் லை யின் எல் லை யி லே | அவர் . தொல் . | லை . பறவித்துயர் |
| ; , கம ப பா பாதப பமமக | ; , கா மாக | கா பா பமமக |
| தீர்த்திட எண் . . ணம் . . | கொண்டீ . | . . ரே . . . |
| மா, ஸா, ஸா பஸாஸ் ஸா ஸ்ஸ் | ; , ஸ் க் ஸ் ஸ்ா | நீஸ் நி பா பா |
| எல்லா அந் த ண ரும் கூடி | எழுப் ப ய | தீ . . . யினில் |
| கமா பா, ஸ்ா நீஸ்நி பாபா மா | பம நிப பமமக | மக மக பமமக ॥ |
| மூழ் க அந் தண, னாக்கி | இணை ய டி . | சே . .ர்த் தா. . ॥ யே |

# 19. திருக்குறிப்பு தொண்ட நாயனார்

வண்ணார் - தொண்டைநாடு - காஞ்சிபுரம் - சித்திரை - சுவாதி

சிவனடியார்களின் குறிப்பறிந்து அவர்களுடைய கந்தையைக் கேட்டு வாங்கி சுத்தம் செய்து வந்தான் திருக்குறிப்புத் தொண்டன்.

ஒரு சமயம் சிவபெருமுனே அடியாகி வந்து தன்னிடம் ஒரு கந்தை மட்டும் இருப்பதாகவும், சுத்தம் செய்து மாலையே திருப்பித்தர வேண்டும் என்றும் சொன்னார். ஒப்புதல் செய்து கந்தையைப் பெற்று கொண்டார். குறிப்புத் தொண்டர் விடாது பெய்த மழை காரணமாக காயவைக்க முடியவில்லை. கொடுத்த வாக்கை நிறைவேற்றாததால், தோய்கல்லில் முட்டிக் கொள்ளச் சென்றானைத் தடுத்து நிறுத்தி, அவனுக்கு முக்தியளித்தார் ஈசன்.

| | |
|---|---|
| ராகம் : ஸாரங்கா (65) | ஆ : ஸபமபதநிஸ் |
| தாளம் : கண்டசாபு | அவ : ஸ்தாபமரிகமரிஸ |

**பல்லவி**

காஞ்சி மாநகர் வாழும் ஏகாலிகுலத்தகத்தே
திருக்குறிப்புத் தொண்டனெனும் பெயர் பெற்றார் ஓர் பக்தர்

**அனுபல்லவி**

வாஞ்சையுடன் நீயணிந்த அழுக்குக் கந்தையை தந்து
விரைவாக வெளுத்து அன்றே தந்திடச் சொன்னாய்

**சரணம்**

அந்தி பொழுது வரை அடை மழை பெய்யச் செய்து
கந்தை காயாமல் இருந்திடச் செய்தாயே
நொந்து பக்தர் தலையை தோய் கல்லில் முட்டிக் கொள்ளும்
முன்பு சென்றவரைத் தாங்கி முக்தியளித்தாயே.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ஸாரிரிஸ | ஸப பா ப | பமா பதா நீஸ்ா | ஸ்ஸ்நித தபப |
| காஞ்சிமா | நகர் வாழும் | ஏ . . கா . . லி | கு . லத் தகத்தே |
| மப ப த ப | பமரீ க மரீஸா | ஸ ஸ ரி ஸா | ப ம ப பா |
| திருக்குறிப்பு | தொண்ட. னெனும் | பெயர் பெற்றார் | ஓர் பக்தர் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ஸா ஸ ஸ ஸ | ஸா ஸ்ஸ்ஸ் | தநி ஸ் ரிஸ் | நிஸ் தா ப |
| வாஞ்சையுடன் | நீ ய ணி ந்த | அழுக்கு . கந் | தையைத ந்து |
| பப பத நீஸா | தத பா, | பத பா ப | பம ரீ க ம ரி |
| விரைவா. . க | வெளுத்து | அன்றே தந் | தி. டச் சொன்னாய் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ஸ ப பா ப | பம பபப | பப த பா | பமரீ     க ம ரி |
| அந்திப்பொ | ழ . துவரை | அடைமழை | பெய்யச் செய்து |
| ம பத பா | பமரீ கம ரீ | ஸஸரிஸா | பமகம பா, |
| கந்தைகா | யா . . ம . ல் | இருந் திடச் | செய். .தாயே |
| ஸ் நி த ப ப | கம பா, | பா பதப | தநிஸ் ஸ்ஸ் |
| நொந்துபக்தர் | தலையை | தோய் கல்லில் | முட்டிக்கொள்ளும் |
| தநி ஸ் ரிஸ் | ஸ்நிதா பத நீஸா | ஸ்ா ஸ்நிதநிபா | ததபம ரிக மாரீ |
| முன்பு சென்ற | வ. ரைத் தா. .ங்கி | முக் தி. . .ய | ளி . த் தா . . யே |

## 20. சண்டேச்வர நாயனார்

அந்தணர் - சோழநாடு - திருச் சேய்ஞலூர் - தை - உத்திரம்

பசுக்களைக் கொடுமைப்படுத்தி வந்த இடையனிடமிருந்து மேய்தொழிலைத் தானே ஏற்றுக் கொண்டு சரிவரச் செய்து, நற்பெயரும் பெற்றான் விசாரவர்மன்.

முற்பிறவியில் சிவபூசை செய்ததன் நினைவால் உந்தப்பட்டு, மணலால் லிங்கம் செய்துல பால் அபிடேகம் தினமும் செய்து வந்தான் விசாரவர்மன்.

பாலைக் கொட்டிப் பாழடிப்பதாக பலரும் விசாரவர்மனின் தந்தை எச்சதத்தனிடம் பகர, அவனும் ஒளிந்திருந்து பார்த்து, பின்னர் தன் மகனை குச்சியால் அடித்தான், அடியைப் பொருட்படுத்தாமல் அபிடேகத்திலேயே லயித்திருந்தான் விசாரவர்மன். மேலும் கோபங்கொண்ட எச்சதத்தன் சிவபூசைக்காக மகன் வைத்திருந்த பாற்குடங்களைக் காலால் எட்டியுதைத்தான். சிவ பூசைகஅக அபராதமிழைத்த கால்களை, தந்தையென்றும் பாராமல் வெட்டி வீழ்த்தினான் விசாரவர்மன், அவனுக்கு சண்டீசப் பதவியளித்தார் ஈசன்.

ராகம் : கேதாரம் (29) ஆ : ஸமகமபநிஸ்

தாளம் : ஆதி அவ : ஸ்நிபமகரிஸ

**பல்லவி**

சேய்நல்லூர் அந்தணன் எச்சதத்தனக்கும்
வித்ரைக்கும் மகனாம் விசாரவர்மன்

**அனுபல்லவி**

மேய் தொழிலையே ஆயனிடம் ேற்று,
மிக நேத்தியாய் செய்து பெயர் பெற்றார்.

**சரணம்**

முற்பிறவி வாசனையால் மணலால் லிங்கம் செய்து
குடங்குடமாய்ப் பாலைக் கொட்டி அபிடேகம் செய்ய
குற்றமெனக் கொண்டு பூஜைக்கு தீங்கிழைத்த
தந்தை தானே வெட்டி சண்டேச பதம் தந்தாய்.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , கம பபம மகாரி ஸா ஸா | ; , ஸாஸ ஸா | ஸரி கா ஸா ; |
| சேய்நலூர் அந் . தணன் | எச் ச தத் | த . னுக்கும் |
| ; , ஸம காம பா பாபா ; | ; , பஸ் நி பா | ம ககரி ஸா; |
| பவித்ரைக்கும் ம க னாம் | வி சா ர | வ. .ர் மன் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , ஸமக மா பாகமபநிஸா | ; , ஸ் ம் க் க் ரி | ஸ் ரீஸ் ஸ்ாஸ்ா |
| மேய்தொவி லை யே | ஆ . ய னி | டம் . ஏற்று |
| ; , பஸ்ஸ்ாஸ் நிஸ்ா நி பா பா | ; , கப மாக | ஸா; ரிக ஸா |
| மிக நேர்த்தி யா.ய் செய்து | பெயர் பெற் | றா ர் . . |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , க ம ப பப பா , ப பாபா | ; , ஸ் நி பா ப | மக கரி ரீஸா |
| முற் பறவி வாச னை யால் | மண லால்லிங் | கம் . . . செய்து |
| ; , கமபபம மககரி ரீஸா | ஸஸஸா ரீ ; | ரீ கா ஸா ; |
| குடங்குடமாய் பாலை கொட்டி | அபடே கம் | செய் ய |
| ; , ஸம கா ம பா நீ நிஸ்ா , | ; , ஸ்ம்க் க்ரி | ஸ்ரீஸ் ஸாஸ்ா |
| குற் ற மெ னக் கொண் . டு | பூ . ஜைக்கு | தீ ங் கிழைத்த |
| ; , பஸ்ஸ்ஸா நீஸ் நி பா பா | ; , கமநிபம | மமகரி ஸாஸா |
| தந்தை தா ளை . . வெட்டி | சண்டே . ச | பதம் தந்தாய் |

## 21. திருநாவுக்கரசர் சுவாமிகள்

வேளாளர் - நடுநாடு - திருவாருர் - சித்திரை - சதயம்

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த மருணீக்கியார் சமணத்தாவராயிருந்தார். இவருடைய சகோதரி திலகவதியார் ஓர் சிவபக்தை. அவள் தன் சகோதரனுக்காக, சிவபெருமானை வேண்ட ஈசனும் அவரைத் தடுத்தாட் கொள்ளுவதாகக் கூறினார்.

மருணீக்கியாருக்கு கடும்சூலை நோயையுண்டாக்கி அவர் தமக்கையிடம் செல்வம் செய்தார் ஈசன். பின் அவள் சொற்படி அதிகாலையில் கோயிலைச் சுற்றி வருகையிலியே நோயும் தீர்ந்தது. பதிகம் பாடும் உணர்வும் உண்டாகி பாடினார். சமணர்களும் மதம் மாறிய மருணீக்கியாரை படாதபாடு படுத்தினார். முதலில் சுண்ணாம்புக் காளவாயிலிட்டனர். பின்னர் யானையை ஏவி அதன் பின்னர் விஷமருந்தச் செய்தனர். கடைசியில் கல்லைக் கட்டி, அவரை கடலில் தள்ளினார்கள். எதற்கும் அஞ்சாமல் பதிகம் பாடி சமாளித்தார். மரணீக்கியார் பின்னர் ஈசனை வேண்டி, தன்னுடைய தோளில் சூலக்குறியும், இடபக்குறியும். பூதகணங்களால் இடப்பெற்றார். ஞானசம்பந்தரால் அப்பர் என்று அழைக்கப்பட்டார். நாவுக்கரசு என்னும் பெயர் உண்டாகுமாறு ஈசன் அசரீரியாக அருள் செய்தார்.

பாம்பு கடித்திறந்த பையைப் பிழைத்தெழச் செய்தார். ஐயன் தந்த படிக்காக பெற்று அடியார்கள் பசி நீக்கினார். வேதம் பூசித்து மூடிய கோயில் கதவை திறக்கச் செய்தார். சிவபெருமானே பிரமாணன் வடிவெடுத்து, பொதிசோறு அளித்து இவரது பசியை போக்கியுள்ளார். திருவையாறில் ஐயன் இவருக்கு கயிலாய தரிசனம் செய்து வைத்தார். சிவபெருமான் அருளால் செதுக்குமிடம் எல்லாம் பொன்னும் மணியும் தென்பட்டும். அதை ஒட்டாஞ்சில்லுக்கு சமமாக எண்ணி தூர எறித்தார். இவரை மயக்க அரம்பா ஸ்திரீகளையனுப்பியும், இவரை மயக்க முடியாமல் அவர்கள் திரும்பினர். இச் சோதனைகளுக்குப் பின் இவரைத் தன்னடி சேர்த்துக் கொண்டார் தயாபரன்.

ராகம் : ஆஹரி (1) ஆ : ஸகமபதநிஸ்

தாளம் : ஆதி அவ : ஸ்நிதபமகரிஸ

**பல்லவி**

மூத்தவன் அய்யனை வேண்டச் சமணம் நீங்கிச் சிவஞானம்
பெற்ற மருணீக்கியார் இன்னல் பட்டு மீண்டார்

**அனுபல்லவி**

தோத்திரம் செய்து நாவுக்கரசனெனும் பெயர் பெற்ற
தவமெங்கும் சுற்றி சிவக்குறியும் தோளில் பெற்றார்.

**சரணம்**

அப்பரென்று ஆளுடைப் பிள்ளையால் அழைக்கப் பெற்று
ஐயாற்றில் கயிலாயக் காட்சி பெற்று
அப்பூதியடிகள் மகனைப் பிழைக்க வைத்து
அய்யன் அருள் பெற்று அவனடி சேர்ந்தாரே.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , பத நி நீ ஸ்ா ஸ் ஸ் நீ ரீ . | ஸ்ா, நி நி நி நீ | ஸ் நி நித நிதபா |
| மூத் தவள் அய்யனை வேண் | டச் சமணம்நீங் | கிச் . . சி . வ |
| ; பா ப பா ம கம கா ரிஸா | ; , ஸா ரி கா | ம பத பத ம பா |
| ஞானம் பெற்ற மருணீக் கியர் | இன்னல் பட் | டு மீ . . ண் டார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , ஸ்ா தநீ ஸ்ா, நி ரீ . ஸ்ா | ; , ஸ் ரிக்ம்க் | ரி ஸ்ாநி ரீ .ஸ்ா |
| தோத்திரம் செய்து நாவுக் | கரச னெனும் | பெயர் பெற்ற |
| ; , பத நி ஸ்ஸ் நி நி த நிதத பா | ; , ஸபப பம | மக பமக ரிஸா |
| தலமெங்கும் சுற்றி. சி வக் | குறியும் தோ. | ளி. . ல் பெற்றார். |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , ஸாப பா மா மக ப ம கரி | ஸா , ம க ரிஸா | ஸஸாநி.ரிஸரீ |
| அப்பரென்று ஆ. . .ளு . | ட பள்ளையால் | அழைக்கப்பெற்று |
| ; , ஸரிகா, மா ப பா பா, | த பா பத நிஸா | ஸ்நிநித தா பா |
| ஐ . யாற்றில்க யி லா | யக் . காட்சி | பெ . . . ற்று |
| ; , பத நீ நி ஸரி ஸரி நீ ஸா | ; , ம்க் ரீ . ஸ் | ஸ்ா, நி ரீ . ஸ்ா |
| அப் பூதி அ . டி. கள் | மக னைப்ப | ழைக்க வைத்து |
| ; , பத நிநிஸ் ஸ்நிநித தாபா | ; , மப ப ப ம | மக பமக ரிஸா |
| ஐயன் அருள் . பெற்று | அவனடி . | சே. . ர்ந்தா.ரே |

## 22. குலச்சிறை நாயனார்

பாண்டி நாடு - மணமேற்குடி - ஆவணி - ஆனுஷம்

இவர் பாண்டிநாட்டு மந்திரியாவர், பாண்டியரசி மங்கையர்க்கரசியின் விருப்பப்படி, சமணமழித்து சைவமோங்க் வழி செய்தார். சுந்தரரால் பெரும்நம்பியென அழைக்கப்பட்டார். பதவியிலிருந்து கொண்டே, பரமன் பணி செய்து பரகதி பெற்றார்.

ராகம் : ஸஹானா (22) ஆ : ஸரிகமபமதநிஸ்
தாளம் : ஆதி அவ : ஸ்நிதபமகமகரிஸ

### பல்லவி

பாண்டி மணமேற் குடிகுலச் சிறையார்
சுந்தரரால் பெரு நம்பியென பாராட்டுப் பெற்றார்

### அனுபல்லவி

வேண்டும் அடியார்க்கு விரும்பியதையளித்து
வேறேதும் பாராமல் விருந்து படைப்பார்

### சரணம்

பாண்டியரசியின் விருப்பப்படியே
சமணம் அழிந்து சைவம் ஓங்கிடச் செய்தாய்
மாண்பு மிகு மந்திரி பதவி வகித்தாரை
மாதேவன் பணி செய்தே மலரடி சேர்த்தாயே.

### பல்லவி

| | | | |
|---|---|---|---|
| ; , ரீ ரி ரீரீ, ரி நீ தா | பா ; ; தப | ப ம கம ரீ கரி | |
| பாண்டி மண மேற் கு | டி கு . | லச் சி . றை . யா. | |
| ஸா, நி ரி ஸ ஸஸா, ஸ நிஸா தநி | தப நிஸரீரீ | பம கம ரீ கரி | ஸா, |
| ர் சு ந் த ரரால் பெரு நம். ப. | என பா. ராட்டு | பெ. . . ற்றா | ர் |

### அனுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| ; , பா பா ம தா, த நீ ஸா | நி ரீ ஸ் ஸ் ஸா, | தஸ் நித பா; | |
| வேண்டும் அடி யார்க் கு | விரும்ப ய தை | ய . ளித்து | |
| ; , ரிக் ம் பாமா ம்க் ம்ரி க்ரி | ஸா, நித பாம | மக கம ரிககரி | ஸா |
| வே . றேது ம் பா. ரா | மல் விருந் துப | டை. . . . . . ப் | பார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , நித பா ம கக மக ரிககரி | ஸா , நி ரீஸா | ஸநி.நி.த.நி.த. பா |
| பாண்டி ய ர . . .  சி . . . | யின் விருப்பப் | ப . டி . . . .யே |
| ; , ஸ நீ ஸா ரீ ; ரீ ரீ | ;  ரி க மப மா | ககமக ரிககரி |
| ச மணம் அழிந்து | சை . வம் ஓங் | கி . டச் செய் . . . |
| ஸா, பாபபப மா, தா, தநி | ஸ்ா, நி ரி. ஸ்ா ஸ் | ஸ் நிநித. பா பா |
| தாய் மாண்பு மிகு மந் தி ரி | ப த           வி வ | கி . த் தாரை |
| ; , நிரி. ஸ்ா ஸ் ஸ்நிநித பாபா | ; , ரிக ம பா | காமரி கரிஸா |
| மா.தேவன் ப.ணி. செய்தே | மல ரடி | சேர்ந் தா . யே |

# 23. பெருமிழலைக் குறும்ப நாயனார்

குறும்பர் - சோழநாடு - பெருமிழலை - ஆடி - சித்திரை

கூறாமலே சிவனடியார்களுக்குத் தொண்டு செய்பவர், சுந்தரரை எப்பொழுதும் நினைத்து யோகம் பயின்றார். சுந்தரர் கயிலை செல்வதை யோகம் மூலம் தெரிந்து யோகமுயற்சியினாலலேயே அவர் செல்வதற்கு முந்தின பிரம்மாந்திரம் மூலம் சிவலோகம் சென்றார் குறும்பர்.

ராகம் : ஹிந்தோளம் (8) ஆ : ஸகமதநிஸ்
தாளம் : கண்டசாபு அவ : ஸ்நிதமகஸ

**பல்லவி**

பெருமிழலைக் குறும்பனார் சிவனடியார்களுக்கு
கூறாமல் குறிப்பறிந்தே பணிகள் பல செய்தார்

**அனுபல்லவி**

திருப்பதிகம் பாடிய சுந்தாரை நினைத்து
தினமும் செபித்து யோகம் பயின்றார்

**சரணம்**

சுந்தரர் வடகயிலை அடையும் நாளைத் தமது
யோகத்தினால் தெரிந்து குறும்பனாரும்
முந்தினதினமே யோகம் முயன்று பிரம
மந்திரம் திறந்து சிவலோகம் தந்தருளினீ

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| நி ஸ் நி த ம | க ம க ஸா | நிஸ மக ஸ | , தநிஸா |
| பெரு மி ழலை | குறும்பனார் | சிவ னடி யா | ர்களுக்குத் |
| நிநிஸமம | மக மதத | மத நி ஸ் நி | த நி ஸ்ா |
| கூ றாமல் | குறிப் பறிந்தே | பணிகள் பல | செய்தார் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| நி ஸ் ஸ் த நி | ஸ்ாஸ்ஸ்ா | நி ஸ் ம் க் ஸ் | த நீ ஸ்ா |
| திருப்ப திகம் | பா டி ய | சு ந் த ர ரை | நினைந்து |
| ம்க்ஸா, | க் ஸ் நீ, | தநிஸ்ா ஸ்நிதா மா | மகதம தமகஸநிஸ |
| தினமும் | செபத்து | யோ . . கம் . ப | யின் . . . . றா ர் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| க ம ம மா | ஸநிஸமம | ம ம ம தம | கா மகஸ |
| சுந் த ரர் | வட. கயிலை | அடை யும்நா | ளைத் தமது |
| கம காஸ | நித நிஸஸ | ஸநிஸமக | மா ; , |
| யோ . கத்தி | னால்தெரிந்து | குறும் பனா. | ரும் |
| மக மத த | த தா ; | மக மத நி | ஸ் தநி ஸ்ஸ் |
| முந் தின தி | ன மே | யோ . க ம்மு | யன்றுபரம |
| ஸ் ம் க் ஸ்ா | ஸ் த நிஸ்ா | ஸ்நிதா ம | மமகஸஸ |
| மந் . தி ரம் | தி றந் . து | சிவலோகம் | தந் . தருளினீர் |

## 24. காரைக்காலம்மையார்

வணிகர் - சோழநாடு - காரைக்கால் - பங்குனி - சுவாதி

இவருக்கு பெற்றோரிட்ட பெயர் புனிதவதியாகும். வைத்திருந்த மாம்பழம் இரண்டில் ஒன்றைச் சாப்பிட்டதும், மற்றொன்றையும் கேட்டான் புனிதவதியின் கணவன். அதனைச் சற்றுமுன் வந்த சிவனடியாருக்குத் தந்து, உபசரித்திருந்த படியால் சொல்வதற்குப் பயந்து, செய்வதறியாமல் திகைத்து ஈசனை எண்ண, அவள் கையில் ஓர் மாம்பழம் வந்தது. அதனைத் தன் கணவனிடம் கொடுத்தாள் புனிதவதி. ருசி வேறாக உள்ளதாகக் கணவன் கூற புனிதவதி நடந்ததைக் கூறினாள். அதை நம்பாத கணவன், இன்னுமொறு மாம்பழம் தனை தருவிக்கச் சொல்ல, அவளும் ஈசனருளால் தருவித்து அவனிடம் தந்தபின் அது மறைந்தது.

இதனைக் கண்டதும், பரதத்தனுக்கு புனிதவதியார் மீது பயமும் பக்தியுமுண்டாயிற்று. அவளுடன் கணவனாய் வாழ்க்கை நடத்த அவன் மனம் ஒப்பவில்லை. வேற்றூரில் வணிகம் செய்து வேறொரு பெண்ணை மணந்து குடும்பம் நடத்திவந்தான்.

இதையறிந்த புனிதவதியாரின் உறவினர், புனிதவதியை அவனிடம் அழைத்துச் சென்றனர். பரதத்தன் புதுமனைவியுடன் புனிதவதியை வணங்கி தன் மனதிள்ளதைக் கூறினான். பின்னர் புனிதவதியார் ஐயனை நோக்கி, தன் கணவனுக்காகவே போற்றிவந்த இவ்வுடலை நீக்கி, பேயுறு அளிக்குமாறு வேண்டிப் பெற்றாள். பின் அற்புதத்திருவந்தாதியும், இரட்டை மணிமாலையும் பாடினாள். பேயுருவோடு தலைகீழாய் நடந்து, ஐயனை அடைந்து, பிறவாவரம் கேட்டுபின் ஐயன் ஆட்டத்திற்குதான் பாடும்படி அருளுமாறு வேண்டினாள், அவ்வாறே ஆலங்காட்டிற்குச் சென்று (தலைகீழாக) பதிகங்கள் பாட அய்யன் ஆடினார். ''அய்யனால் அம்மையே'' என அழைக்கப் பெற்றார். என்றும் சிவனடியிலேயே தங்கி பாடிக் கொண்டிருந்தார்.

ராகம் : ஹம்ஸானந்தி (43) ஆ : ஸரிகமதநிஸ்
தாளம் : ஆதி (திச்ர நடை) அவ : ஸ்நிதமகரிஸ

**பல்லவி**

சிவபக்தை புனிதவதியைப் பரதத்தனுக்கு மணம்
முடித்தார் தந்தை தனதத்தனார்

**அனுபல்லவி**

சிவனடிக்கு தந்த கனி திரும்ப கிடைக்கச் செய்து
கணவனும் அவரை அறிந்திடச் செய்தீர்

**சரணம்**

பயந்த கணவன் மாற்று மனைவியுடன் வாழக்
கண்ட புனிதவதி உனை வேண்டிப் பேயாகி
அயராமல் தலை கீழாய் கயிலைக்கு வந்தவரை
ஆலங்காட்டு நடத்திற்குப் பாடப் பணித்திட்டாய் ஐயா

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ஸ்நித நிதம ககக ககக | க நிதம கம | கஸ ஸஸ ஸா |
| சிவ பக் தை புனித வ தியைப் | ப ர த த் த | னுக்கு, மணம் |
| நிநிஸகா; ; காக | க ம த நி நிரி. | ஸா; ; |
| முடித் தார் தந்தை | தன த த் த . | னார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| க ம த நிநி தஸ்ாநி ரி.ஸ்ா | நி ஸ் ஸ் ஸ்ஸ் ஸ் | த நிஸ் நித |
| சிவன டிக்கு. த ந்த கனி | திரும்ப கிடைக்கச் | செய்து . . |
| ஸ் க்ரி ஸ்ா நி த மத நீ. | ஸ் நிநி த த ம | கமகா ; |
| கண வ னும் அவரை. | அ றிந் தி ட | ச் செய் தீர் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ஸரிக கககக கமம கா, | ஸ் நித மகா | கம கா; |
| பயந்த கணவன் மா . ற்று | ம னைவி யு | டன் வா. ழக் |
| க மத மமக கரிஸா; | ஸாரி காக | ஸ்நிதாமா |
| க ண்ட புனித வதி | உனை வேண்டி | பே. யா கி |
| ஸ்நிதமதா ஸ் ஸ் நி ரிஸா | ஸ்நிஸ் ரி. க்ா | ரி.க்ரி.ஸ்ஸ்ா |
| அய ரா.மல் தலைகீ. ழாய் | கயி லைக் கு | வந் த வ ரை |
| ஸ்ாரி. ஸ்ாஸ் த நிதம தா | மதநீதா தமம | மாக ம த நி |
| ஆலங் காட்டு நடத்தி ற்குப் | பா.டப் பணித் | திட்டாய் ஐ . யா |

## 25. அப்பூதியடிகள்

அந்தணர் - சோழநாடு - திங்களூர் - தை - சதயம்

இவருக்கு திருநாவுக்கரசு என்னும் நாமமே இனிக்கும். தன்னுடைய எல்லா உடைமைகளுக்கும் அப்பெயரையே சூட்டி மகிழ்ந்தார்.

ஓர் சமயம் திருநாவுக்கரசு இவர் வீட்டில் விருந்துண்ண ஏற்பாடாயிற்று. இலை பறிக்கச் சென்ற இவரது பையன், பாம்பு கடித்திறந்தான். விருந்து தடைபடுமேயென நினைந்து, மகன் இறந்ததை மறைத்து வைத்தார். அப்பூதி, பின்னர் மகனுக்கு விபூதியிட அழைக்குமாறு அப்பர் கூற, நடந்ததை நடந்தவாறு அப்பூதியும் கூற அப்பரருளால் மகன் உயிர் பெற்று ஓடி வந்தான்.

ராகம் : ரேவதி (2) ஆ : ஸரிமபநிஸ்
தாளம் : ஆதி அவ : ஸ்நிபமரிஸ

## பல்லவி

திங்களூர் அந்தணர் அப்பூதியடிகள்
ஆனந்த நடம்புரி ஆண்டவன் அன்பர்

## அனுபல்லவி

மங்கலமாகவே திருநாவுக்கரசர் நாமம்
மனத்தில் செபித்து அரசு, மயமாகவே வாழ்ந்தார்.

## சரணம்

வாழை இலை பறித்த மகன் பாம்பு கடித்து மாய
மறைத்தவர் செய்கை அறிந்து வாகீசர் வியந்தே நல்ல
ஏழிசைப் பதிகம் பாடி எழுப்பினர் மகனை உன்றன்
எழிலடி சொழுத அன்பர்க் இணையடியருள் செய்தீரே.

## பல்லவி

| | | |
|---|---|---|
| ; , ஸா நி ப நி ஸா , நி ரீஸா | ; , மா மாம | ஸநி ரீ ஸா ; |
| திங்களூர்அந் தணர் | அப் பூ தி | ய . டி கள் |
| ; , ஸாரிமா ; , ரி மா ப நி | ஸா , நி பா மா | ரிம பமரீஸா |
| ஆ னந் த ந டம் பு ரி | ஆ ண் டவ ன் | அன் . . பர் |

## அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; , நீநி நீ பா, ம பாநீ | ; , ம ப நீநி | ஸ் ஸ்ஸா நி ரி.ஸ்ா |
| ம ங்க ள மா. க வே | திரு நாவுக் | க ர சர் நா . மம் |
| ; , ரி.ரி. ரீ ரி. ஸ்ரி.ஸ் நிப நிஸ் | ; , ஸ் ஸ்நி பம | ரி ம பம ரீ ஸா |
| மனத்தில் செ . பத் . து அர | சு மயமா . க | வே . . . வாழ்ந்தார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; ஸம மாம ரிஸா ரி மா மா | ; , ரிம பாம | ரிரீ ரி ஸ.நி.ரீ |
| வா .  ழை  இலை . பறித்த | மகன் பாம்பு | கடித்து மா . ய |
| ஸா ,  ரிஸ நி.ப நி. ஸநி. ரீ ஸநிஸா | | ; , ஸ ரி மாம   ரிம பம ரீஸா |
| மறைத் த. வர் செய்.கை அ. றிந்து   வா . கீ சர் | | வியந்தே . நல்ல |
| ; , நிஸ் நிபநி ஸ்ஸ்ஸ்ாஸ்ாஸ்ா | ; , ஸ்ரி. ரி.ரி.ரி. | ஸ்ஸ்நி ரீ .ஸ்ா |
| ஏ . ழிசை . பதிகம் பாடி | எழுப் ப னர் | மகனை உன்றன் |
| ; , நிஸ் ரி.ம்ா ரிப்ம் ரீ, ஸ்ா | ; , ஸ் நிப மா | ரி ம ப ம        ரீ ஸா |
| எழி லடி தொழுத . அன்பர்க் | இணையடி | அருள்செய் . தீ ரே |

## 26. திருநீலநக்க நாயனார்

அந்தணர் - சோழநாடு - சாத்தமங்கை - வைகாசி - மூலம்

சிவபெருமானுக்கு பூசை செய்யும் பணியை சிரத்தையுடன் செய்வார் திருநீலநக்கர். ஒருசமயம் லிங்கத்திற்கு பூசை செய்கையில், அதன் மேல் ஓர் பெரிய சிலந்தி ஊர்வதைக்கண்டு அவனுடைய மனைவி அதனை ஊதி, அப்புறப்படுத்தி உமிழ்நீரை உமிழ்ந்தார். இதனைக் கண்ணுற்ற நீலநக்கர், மனைவியை நையப்புடைத்துத் துரத்திவிட்டார். அன்றிரவு கனவில் ஐயன் தோன்றி மனைவி எச்சில் பட்டஇடம் நீங்கலாக, உடல் முழுவதும் சிலந்திக்கொப்பளங்கள் ஏற்பட்டுள்ளதாக அறிவித்தார். பொழுது விடிந்ததும் மனைவியையும் அழைத்துக்கொண்டு, கோயிலுக்கு சென்று அர்ச்சனை செய்தார்.

ஒரு சமயம் திருஞான சம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணருடன், இவர் வீட்டில் ஓர் இரவு தங்கினார். சாதிபேதமின்றி இவரது பரந்த உள்ளத்தை பாராட்டினார் ஞானசம்பந்தர் ஞானசம்பந்தரின் திருமணத்தில் கலந்து சோதியுள் புகுந்தவர்களில் திருநீலநக்கரும் ஒருவராவர்.

**ராகம் : ஸாவேரி (15)** **ஆ : ஸரிமபதஸ்**

**தாளம் : மிச்ரசாபு அவ : ஸ்நிதபமகரிஸ**

**பல்லவி**

சாத்த மங்கை அந்தணர் நீலநக்கன் எனும் பக்தன்
சிவனுக்கும் அடியார்க்கும் ஆனந்தமாய் அர்ச்சிப்பார்

**அனுபல்லவி**

ஆத்திரமாய் மனைவியை ஐயன் மேல் உமிழ்ந்த
அநுசிதம் கண்டு கடிந்து துரத்தி விட்டார்

**சரணம்**

சிலந்திக் கொப்புளங்கள் உமிழ்நீர் பட்ட இடம் நீங்க
உடல் முழுதும் வந்ததெனக் கனவினில் ஐயன் கூற
கலக்கமும் நீங்கி மனைவியுடன் அய்யனை அர்ச்சித்து
காலமெல்லாம் தொழுதவனையுன் கழலடி சேர்த்தாயே.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| தக்ரிஸ்ா ஸ்ா | தஸ்ரி. ஸ்நிதப தா | பா ம த பதா | மபாதபம கரிஸா |
| சாத்த மங்கை | அந் த. . . ணர் | நீல நக்கன் | எ. னும் . பக் தன் |
| ஸரிக ஸரீ, | தஸா ஸ்நிதப தா | ஸா ரி மாமா | பா, த பம பத பத மா பா |
| சிவனுக்கும் | அடி யா. . . ர்கும் | ஆன ந் த மாய் | அ . .ர்ச் சி . . ப் பா ர் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| பா ம தப தா | தஸ்ா ஸ்ா ஸ்ா | பதஸ் ரிக் ஸ்ரி | ஸ்ாஸ் ஸ் நிதப தா |
| ஆத்திர . மாய் | ம னை வி யை | ஐ. யன் மே.ல் | உமிழ்ந்தஅநுசிதம் |
| த ம த ஸ்ா, ரி. | ஸ்ா, ஸ்நிதா மா | பதஸ்ஸ்நிதா தா | மபாதபம கரிரீ |
| கண் . டு க | டி ந் து | . . துர.த்தி . . விட் | டா . . . . ர் . . |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ஸரீ மா ரி ம | பாம த ப ப ம | பாதஸ்நிதா தா | மபாதபம கரிரீ |
| சிலந் தி கொப்பு | ளங் கள் உமிழ் | நீர் ப . ட்ட | இ . டம் . நீங்க |
| ஸ ரி க ஸ ரீ, | ஸாஸ ஸநிதா பத | ஸரீ மாமா | பாமத பதா |
| உடல்முழுதும் | வ ந்த தெ. . னக் | கன வினில் | ஐ யன்கூ. ற |
| பபம த பதா | தஸ்ஸ் ஸ் ரி.ஸ்ா | ஸ்ரி ப்ம் க்ரி.ரீ . | தஸ்ா ஸ்நிதபதா |
| கலக்கமும் நீங்கி | மனைவியு டன் | ஐ . ய . னை . . | அர்ச் சி. . த்து |
| பத க்ரி. ஸ்ாஸ்ா | தஸ்ஸ் ஸ்நிதா பத | பதஸ்ஸ்நிதா தா | பா, தபம தபதா |
| கா . ல மெல்லாம் | தொழு த . வனையுன் | கழல டி . . | சே. . ர்த் தா.யே |

# 27. நிமிநிந்தியடிகள்

அந்தணர் - சோழநாடு - ஏமப்பேரூர் - வைகாசி - பூசம்

கோயில்களில் தீபங்களேற்றுவதில் பிரியங் கொண்டவர் நிமிநிந்தியடிகள். ஒருசமயம் அறநெறி கோயிலில் தீபத்தொண்டு செய்ய எண்ணிய நிமிநிந்தியடிகள். ஊருக்குச் சென்று நெய் எடுத்துவர நேரமாகி விடுமென்றெண்ணி, அங்குள்ள ஓர் வீட்டில் நெய் யாசித்தார். அது சமணம் வீடுபோலும் கையில் மழுவேந்தியுள்ள சிவனுக்கு விளக்கெதற்கு? என்று சொன்னதுடன், நெய்க்குப்பதில் நீரை வார்த்து விளக்கேற்றுமாறு கேலி செய்தார் அவ்வீட்டுக்காரர். வருந்திய நிமிநந்தியடிகள் குளத்துநீரை, ஊற்றியே விளக்கேற்றுவாய் என்று வானில் ஒலித்ததைக் கேட்டுமகிழ்நத அவ்வாறே திருப்பணி செய்தார்.

ஒரு சமயம் திருவாரூர் தியாகேசன் திருவிழாவில் ஊர்வலத்தைக் கண்டு, களித்துவிட்டு ஊர் திரும்பி தன் வீட்டுகொல்லையில் ஒர்மூலையில் படுத்திருந்தார். காரணம் கேட்ட மனைவியிடம், தான் பல சாதியினருடன் கலந்து திருவிழா பார்த்தால், காலை குளித்துவிட்டுப் பின்உள்ளே வருவதாகக் கூறினார். அவருடைய கனவில் ஐயன் தோன்றி திருவாரூர் மக்களெல்லாம் சிவகணங்களே என்று எடுத்துகூறி விளக்கினார். தன்குற்றவுணர்க்கு வருந்து அவ்வூரைவிட்டு, திருவாரூர் சென்று தங்கினார். தன்னை மன்னித்தருளும்படி ஈசனை வேண்டினார். அப்பரால் தொண்டர்களுக்கு ஆணிப்பொன் என்று புகழ்ந்து பாடப்பட்டார்.

ராகம் : சுத்த தன்யாசி (20) ஆ : ஸகமபநிஸ்

தாளம் : ஆதி அவ : ஸ்நிபமகஸ

## பல்லவி

ஏமப் பேரூர் அந்தணர் நமிநந்தியடிகள்
அரநெறக் கோயில் தீபத் தொண்டாற்றி வந்தார்

## அனுபல்லவி

சமணர் வீட்டில் விளக்கு நெய் யாசிக்க
நீர் வார்த்து எரித்திடச் சொல்லி விரட்டினரே.

## சரணம்

குளத்து நீர் ஊற்றியே விளக்கினை யேற்றச் சொல்லி
ஆரூர் மக்களெல்லாம் உன் கணங்களென்றீர்
உளம் தெளிந்து மனம் குளிர்ந்து ஆரூர்குடி பெயர்ந்து
அப்பரால் ஆணிப் பொன் என்று அழைக்கப்பட்டார்.

## பல்லவி

| | | |
|---|---|---|
| ; , கா ம பா மா, கமக ஸா | ; , கமகாஸ | நிபநீஸா ; |
| ஏமப்பேரூர் அந்தணர் | ந மிநந்தி | ய. டி கள் |
| ; , நிஸ க மா பாப நி மாபா | ; , பநீ ப ம | மகபமக மகஸ |
| அர நெறி கோ . . . யில் | தீ பத் தொண் | டாற்றி வந்தார் |

## அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; , க ம ப நி ப பா ப நி ஸ்ா; | ; , நி ஸ் நி பா | பா ப நி ஸ்ா ஸ்ா |
| சமண . ர் வீ . . ட்டில் | விளக்குநெய் | யா . . சிக் க |
| ; , க்ம் க்ா ஸ்ா நிப பா நிஸ்ா | ; , நிஸ் நி பா ம | மகபமக மகஸ |
| நீர் வார்த்து எ . ரித் திட | சொல்லிவி | ரட் டி. ன. ரே |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , கமம மா ; , கஸ க மா | ; , க ம ப பா | மக பம கம கஸ |
| குளத்து நீர் ஊ ற் றி யே | விளக்கினை | ஏற் றச் சொல்லி |
| ; , கமகஸா நி பா நி ஸாஸா | ; , நிஸ கமா | பா , கமாபா |
| ஆ . ரூர் மக்க ளெல்லாம் | உன்கணங் | க ளென்றீர் |
| ; , கமப பாநிபா நிஸ் ஸ்ஸா | ஸ்ா , நிஸ் நீப | நிஸ்ாஸ் ஸ்ாஸ்ா |
| உளம்தெளிந்து . மனம்குளிர்ந் | து ஆ . ரூர் | கு டி பெ யர்ந்து |
| ; , ஸ்ா ம்க்ஸ்ாநிஸ்ாநிபநிஸ்ா | ; , நிஸ்நி பா | மக பம கமகஸ |
| அப் ப . ரால் ஆ.ணிப் பொன் | என். று | அழைக்க. பட்டார் |

# 28. திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள்

அந்தணன் - சோழநாடு - சீர்காழி - வைகாசி - மூலம்

இவருடைய இயற்பெயர் ஆளுடையப் பிள்ளை. மூன்று வயதிலேயே லோக மாதாவால் தாய்பாலுடன் ஞான அமுதமும் புகட்டப்பட்டார். லோக பிதாவால் பொற்தாளம் பெறப்பட்டார். அந்தணர்கள் மூலம் அய்யன், முத்துக்குடை, முத்துச் சிவிகை, முத்துச் சாமான் இவைகளைக் கொடுத்தார். பதிகம்பாடி ஈசனிடமிருந்து பொருள்பெற்று தந்தைக் களித்தார். அரசகுமாரியின் தீராத நோயைத் தீர்த்தார். பஞ்சகாலத்தில் ஈசனிடம் படிக்காக பெற்று அடியார் கூட்டத்துப் பசியாற்றினார். வேதம் பூசித்து மூடிப்போன கதவை அப்பர் திறக்கவும், மூடவுமாக இருக்கும்படி இவர் செய்தார். பாண்டிராசனது வெப்ப நோயையும், கூனையும் போக்கினார். சமணர்களுடன் வாதிட்டு வென்று, அவர்களை கழுவிலேறச் செய்தார். ஆற்று வெள்ளத்தைக் கடக்க, ஓடத்தில் ஏற்றி அடியார்களை அக்கரை சேர்த்தார். இவைத் தடுத்த புத்தனை இவரது சீடன் சம்பந்த சரணாலயன் என்பவன், இவரால் செய்யப்பட்ட, ஒரு பதிகத்தைப் பாடவும் தலையில் இடி வீழந்திறந்தான் அந்த புத்தன் சர்ப்பம் தீண்டியிறந்தவனை எரித்த அஸ்தியை கொண்டு பிழைக்க வைத்துள்ளார். திருமணத்தன்று, மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு திருமணத்திற்கு வந்தவர்களுடன் கோயிலில், சோதியின் வாயிலில் நுழைந்து பரமனிடம் சேர்ந்தார்.

**ராகம் : முகாரி (20)** **ஆ : ஸரிமபதஸ்**

**தாளம் : மிச்ரசாபு அவ : ஸ்நிதபமகரிஸ**

**பல்லவி**

அம்மையால் அமுதமும் அப்பனால் தங்கத் தாளும்
முத்துச் சிவிகை பொன்னும் பெற்றார் சம்பந்தர்

**அனுபல்லவி**

தம் அடியார்களை படிக்காக பெற்றுப் பேணி
பாம்பு கடித்த பெண்ணையும் வணிகனையும் காத்தார்

**சரணம்**

பெண்ணின் நோய் தீர்த்தார் பெருமாள் உன் அருளைப் பெற்று
மண்ணில் மேல் சைவம் ஓங்கப் பாண்டியில் சமணம் மாய்த்து
உள் நிறை அன்புடனே ஒண்தொடிக் கையைப் பற்றி
ஓங்கிய சோதிக்குள்ளே உற்றாருடனே சேர்ந்தார்.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ; ரிமபதப | பமாகரிஸா | , ரீமாமா | பா, தபம பதபதபா |
| அம்மையால் | அமுத . மும் | அப்பனால் | தங்க . . தா . . .ளும் |
| ; ரிம பாநித | ஸ்ஸ்நிநித தப | ரீ, மா ; | பநீநிதா ஸ்ாஸ்ா |
| முத் துச் சி . | விகை. பொன்னும் | பெற் றார் | சம் . . . பந்தர் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ; நி த ஸ்ஸ்ா | ரீ ., ரி.க ரி.க் ஸ்ரீ ., | தஸ்ா ரிம்க் ரிஸ்ா | ஸ்ாஸ்நிநிதஸ்ாஸ்ா |
| தம் அடி | யார் க. . . ளை | படிக் கா. . .க | பெ ற் று. . . பேணி |
| க்ாரி., ஸ்ஸ்ாஸ் | ஸ் நி ரிஸ்ாநி நிதபா | ; ரிமபதப | பமா கரிஸா |
| பா ம் பு கடித்த | பெண். . . ணை. யும் | வணிகனையும் | கா. த் தா .ர் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| மா , பாத ப | பமாகரிஸா | ரிரி மா, பம | பநீ நிதபாப |
| பெண் ணின் நோய் | தீர்த் தா . ர் | பெருமான் உன் | அருளைப் பெற்று |
| ரீம பநிதப | பமக ரீ ; | ஸஸரி பம கரி | ஸ நித ஸா ; |
| மண்ணில் மேல் . . . | சை . வம் ஓங்கப் | பாண். டி. யில் . சம | ணம் மாய் . த் து |
| பாமா ப பத | ஸ்ா, ஸ்ஸ் ஸ்ா | பபத ஸ்ா தஸ் | ரீ ., ரி.ம்க்ா |
| உள். நிறை . | அன் புட னே | ஒண்தொடிக்கை . | யை பற் . றி |
| தஸ்ா ரி.ம்க்ரி ஸ்ா | ஸ்ஸ் நிநி தபா | ஸ்ஸ்ா நித பா | பமா கரிஸா |
| ஓங் கி ய | சோ . திக் . குள்ளே | உற்றாருட னே | சேர்ந் தா . ர் |

## 29. ஏயர்கோன் கலிக்காம நாயனார்

வேளாளர் - சோழநாடு - திருப்பெருமங்கலம் - ஆனி - ரேவதி

பரமனையே பறவைக்காக தூதனுப்பிய சுந்தரர் மேல், ஏயர்கோன் கலிக்காமரருக்கு தீராப்பகையேற்ப்படடது. இவர்களின் பிணக்கைத் தீர்க்கயெண்ணிய சிவபெருமான் கலிக்காமருக்கு கொடிய வயிற்று வலியையளித்து, அது சுந்தரரால் தான் தீர்க்க முடியும் என்று கூறினார்.

சுந்தரருடைய வைத்தியந்தனை வெறுத்த கலிக்காமர், அவரிடம் வைத்தியம் செய்து கொள்வதை விட தாமிறப்பதே மேலெனத் துணிந்து தன் வயிற்றைக் கீறிக்கொண்டு இறந்தார். இதனையறிந்த சுந்தரர், தானும் உயிரை மாய்த்துக் கொள்கையில் ஈசன் தடுத்து கலிக்காமரை எழுப்பித் தந்தார். பின் இருவரும் பகைநீங்கி சிவத்தொண்டு புரிந்தார்கள்.

ராகம் : ஆனந்தபைரவி (20) ஆ : ஸகரிகமபதபஸ்
தாளம் : கண்டசாபு அவ : ஸ்நிதபமகரிஸ

**பல்லவி**

பரமனையே பரவைக்குத் தூதனுப்பிய சுந்தரர் மேல்
கடுங்கோபம் கொண்டார் ஏயர்கோன் கலிக்காமர்

**அனுபல்லவி**

பரமனும் பக்தன் சினம் தீர அவனுக்கு
வயிற்று நோய் தந்து சுந்தரரால் தீருமென்றார்

**சரணம்**

சுந்தரர் வைத்தியம் வெறுத்த கலிக்காமர்
வயிற்றைக் கிழித்துத் தம் உயிரை மாய்த்துக் கொள்ள
வந்த சுந்தரரும் தம் உயிரையும் மாய்க்க (எண்ண)
தடுத்து கலிக்காமரை எழுப்பி அருள் செய்தீர்.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| கம ப ப ப | பப பப ம | கமபபம | பம கரிஸ |
| பர ம னையே | பர வைக் குத் | தூதனுப்பிய | சு ந் தரர் மேல் |
| ஸ ஸ ஸக ரி | ரிக மா, | காம பா | ப ம க ரி ஸ |
| கடுங் கோ . பம் | கொண் டார் | ஏயர்கோன் | கலிக்கா . மர் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| பப நிபம | பா ஸ் ஸ் ஸ் | ஸ்ம்க்ரி ஸ் | தநிஸ்ா , |
| பர மனும் | பக் தன் சினம் | தீ. ர அ வ | னுக்கு |
| பப ப ஸ்ா | ஸ்ா நிதப | கா ம பப | மா கரிஸ |
| வயிற்றுநோய் | தந்து | சுந்தரரால் | தீ ருமென்றார் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ஸாப பா | பாதபம | மமம பம | கரி கா, |
| சுந் தரர் | வைத்தியம் | வெறுத்த கலிக் | கா . மர் |
| கம பா ப | ம கரி ஸா | ஸ ம க க ரி | ஸா ஸா ஸ |
| வயிற் றைக்கி | ழித்துத் தம் | உயிரை மாய்த் | து க் கொள்ள |
| பா நி ப ம | பஸ்ஸா, | ஸ் ஸ்ம் க் ரி | ஸ்த நிஸ் ஸ் |
| வ ந்தசு ந் | தரரும் | தன் உயிரை | மாய்க்க எண்ண |
| பப ஸ்ஸ்ஸ் | ஸாநித ப | ககம ப ம | கரிகா, |
| தடுத்துக்கலிக் | காம . ரை | எழுப்பஅருள் | செய்தீர் |

# 30. திருமூல நாயனார்

வடநாடு - ஐப்பசி - அசுவினி

மாடுகளை ஓட்டிச் சென்ற இடையன் திடீரென்று அந்த இடத்தில் இறந்ததால் ஆவினங்கள் செய்வதறியாது, அவனைச் சுற்றி சுற்றி வந்தது. இதைப் பார்த்த சீவயோகி சித்தியனால் இடையன் உடலில் புகுந்து ஆவினங்களை பத்திரமாக வீடு சேர்ந்தார்.

ஈசனருளால் சிவயோகியினுடல் மறைந்து விட்டது. இதனால் பல சங்கடங்களேற்ப்பட்டது. இடையன் வேடத்தில் வந்த சிவயோகி இடையர்க்களுக்குத் தன் நிலையை விளக்கினார்.

சிவன் அருளால் அவர் பழைய உடல் மறைந்தது. திருவாடுதுறை கோயில் அரச மரத்தடியில் யோகாசனத்தில் அமர்ந்தார் திருமூலர்.

மூவாயிரம் ஆண்டுகள் யோகமாகவே வாழ்ந்து திருமந்திர மாலை எனப்படும் மூவாயிரம் பாடலைப்பாடி உலகுக்களித்தார் திருமூலர்.

ராகம் : வலசி (28) ஆ : ஸகபதநிஸ்

தாளம் : ஆதி அவ : ஸ்நிதபகஸ

### பல்லவி

பசுக்களும் கன்றுகளும் மூலம் இறக்க
பரிதவித்தலைவதை பார்த்தார் சிவயோகி

### அனுபல்லவி

பசுக்கள் துயர் தீர தம் உயிரை சித்தியால்
இடையன் உடலில் செலுத்தத் திருமூலரானார்

### சரணம்

சிவனருளால் சிவயோகி உடல் மறைய
இடையர்க்குத் தம் நிலை கூறிய பின்
சிவராஜ யோகியாய் மூவாயிரமாண்டில்
திருமந்திரம் பாடிச் சிவனடி சேர்ந்தாரே.

### பல்லவி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; க ஸாக பா தா ; தா நீ | ॥ | நித தப தாநித | ॥ | பாகப கஸ கா | ॥ |
| ப சுக்களும் கன் று க | ॥ | ளு . ம் . . மூ . | ॥ | லன்இ . றக்க | ॥ |
| ; க நீ த பா க பகா கா ஸா | ॥ | ; ஸா, நி.த.ா | ॥ | த.ாநீ. ஸா ஸா | ॥ |
| ப ரிதவித் த . லை வ தை | ॥ | பார் த்தார் | ॥ | சிவ யோகி | ॥ |

### அனுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; தநீத பா பா; பா தப | ॥ | காக பா த நீ | ॥ | ஸ்ா, தாநிஸ்ா | ॥ |
| பசுக் கள் துயர் தீர. | ॥ | . த ம் உயிரை | ॥ | சித்தியால் | ॥ |
| ; நிஸ்ா க்ஸ்ாஸ்நிநி தா நி தா | ॥ | பா ; ; நித | ॥ | பத தப க ப கா | ॥ |
| இடை யன் உட . லில் செலுத் | ॥ | தத் திரு | ॥ | மூ . ல . ரா . னார் | ॥ |

**சரணம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; ஸ ஸா ககா பா, கபா த நி | ॥ | ஸ்ா ; ; ஸ் நி | ॥ | நித பக தபகா | ॥ |
| சி வ னரு ளால் சிவ யோ. | ॥ | கி உ . | ॥ | டல் ம . றை . ய | ॥ |
| ஸா கநீ த பா பக தப காஸா | ॥ | ; , ஸா க கா | ॥ | பா ; ; ; | ॥ |
| இடையற்க்குத் தம் . . நிலை | ॥ | கூ றி ய | ॥ | பின் | ॥ |
| ; நிதா நீத பா ; பத தப | ॥ | கா, க ப தா த | ॥ | நீ ; ஸ்ா, ஸ் | ॥ |
| சிவ ரா ஜ யோ கி . யா . | ॥ | ய் மூ . வா யி | ॥ | ரம் ஆண்டில் | ॥ |
| ; நிஸ்ா க்ஸ்ா ஸ்ா, நிநி தா ப | ॥ | ; க நீ த பா | ॥ | பக தப க பகா | ॥ |
| திரு மந்தி ர ம் பா டி | ॥ | சிவனடி | ॥ | சே .ர்த்தா. ரே | ॥ |

## 31. தண்டியடிகள்

சோழநாடு - திருவாரூர் - பங்குனி - சதயம்

சமணர்களால் தூர்க்கப்பட்ட குளத்தை சரி செய்ய, மண்ணை வெட்டிக் கொண்டிருந்தார் தண்டியடிகள். அதனைத்தடுத்த சாமான்கள் அவரையும் கீழே தள்ளினார். வருந்திய அடிகள் கனவில் ஈசன் தோன்றி, அவருக்குப் பார்வையளித்து தீங்கிழைத்த சமணர்களின் பார்வையை இழக்குமாறு செய்வதாகச் சொன்னார். பின் சோழனின் கனவில் தோன்றி அக்குளத்தை வெட்டும்படி கூறினார். வெட்டப்பட்டது ஒப்பபுக்கொண்டபடி, பார்வையிழந்தை சமணர்கள் நாட்டைவிட்டு ஓடினார். கண் பெற்ற தண்டியடிகள் பணிகள் பல செய்து பரமனடி சேர்ந்தார்.

### ராகம் : ஸிம்மேந்திரமத்தியமம் (57) தாளம் : ஆதி

**பல்லவி**

சமணரால் பாழான குளம் பெருக பார்வையற்ற
தண்டியடிகள் சிவ நாமம் சொல்லி மண்வெட்ட

**அனுபல்லவி**

சமணர்களடியின் பணியைத் தடுக்கக்
கேளாதவரை குளத்தில் தள்ளினரே

**சரணம்**

மன்னன் கனவில் தோன்றிக் குளத்தை வெட்டச் செய்து
அடிகள் பார்வை ஒளி பெறச் செய்தீர்
இன்னல் பல செய்து சமணர்களை விரட்டி
அடிகளை உந்தன் திருவடி நிழல் சேர்த்தீர்.

**பல்லவி**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; , நிக் ரி.ஸா நிஸா நிதா பா | ׀ | ; , பதா நி நி | ׀ | ஸ்ா, ஸ்ா ஸ்ரி. நி | ॥ |
| சமணரால் பா. ழா ன | ׀ | குளம்பெரு | ׀ | க பார்வை யற் | ॥ |
| ஸ்ா, ரீ.ஸ் நிஸ ரீ.ரீ., க் ரீ | ׀ | ; , க்ா ரி. ஸ்ா | ׀ | ஸ் நிதப பதநீ | ॥ |
| ற தண டி ய டி கள் சிவ | ׀ | நாமம் சொல் | ׀ | லி மண்வெட்ட | ॥ |

**அனுபல்லவி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; , ஸ் ரீ . நிஸா ரி. க் ரி. கஸ்ரீ . | ׀ | ; , நிக் ரீ.க் | ׀ | க்ரி.ரீ . ஸ்ா; | ॥ |
| ச மணர்கள்அ . டி யின் | ׀ | பணியைத் | ׀ | த . டுக்க க் | ॥ |
| ; , நிக் ரீ.ஸ் ஸ்நிதா , பத நி | ׀ | த பா தப நித நி | ׀ | ஸ்ா ; ; ; | ॥ |
| கே. ளா த வ. ரைகு. ளத் | ׀ | தில் தள்ளின் | ׀ | ரே | ॥ |

**சரணம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; , ப நி த பா பா பா பா பா | । | ; , ம ப ப பா | । | பம கா கா ரீ | ॥ |
| ம ன்னன் க ன வில் தோன்றிக் | । | குளத்தைவெட் | । | ட. ச் செய்து | ॥ |
| ; , ஸ ரி க ரீ ஸநிகரி ஸ நிஸா | । | ; , ஸரி க மா | । | பம தா பா; | ॥ |
| அடிகள் பா. . . . ர்வை | । | ஒ ளி பெறச் | । | செய் தீர் | ॥ |
| ; , பதநீ த நிஸா, ஸா ஸா | । | ; , ஸ் ரி. நீஸ் | । | ரீ ., நிக்ரீ . | ॥ |
| ; , இன்னல் ப. ல செய்து | । | ச ம ணர் க | । | ளை விரட் டி | ॥ |
| ; , க் ம் க் ரீ . ஸ்த நீ ஸ்ா ; | । | ; , நிஸ் நிதா | । | பமா பத நி ஸ்ா | ॥ |
| அடி களை உந் . தன் | । | திரு வ டி | । | நிழல் சேர்த்தீர் | ॥ |

## 32. மூர்க்க நாயனார்

வேளாளர் - சோழநாடு - திருவேற்காடு - கார்த்திகை - மூலம்

சிவனடிகளுக்கு அமுது படைத்தவே இவரது தொண்டு மூர்க்கரின் வறுமையுற்று பொருளின்றி, சூதாடி வெற்றிபெற்று, அதில் வரும் வருவாயில் தம் பணியை செவ்வனே செய்து வந்தார். ஆட்டத்தின்போது ஏதேனும் சொல் மாறாட்டம் ஏற்பட்டால் , அடித்து நொறுக்கி விடுவார். இதனால் இவருக்கு மூர்க்கர், நற்சூரர் என்பது காரப்பெயராக அமைந்தது. இவ்வாறு பணி செய்தே முக்தியடைந்தார் மூர்க்கர்.

**ராகம் : வாசஸ்பதி (64)** **தாளம் : ரூபகம்**

**பல்லவி**

திருவேற்காட்டு வேளாளர் திருவெண்ணீறு பூசி
அடியார்க்களுக்கு அமுது செய்வித்தார்

**அனுபல்லவி**

திருவமுது செய்யப் பொருளனைத்தும் விற்றபின்
சூதாடிப் பணம் பெற்றுப் பணிகளை தொடர்ந்தார்

**சரணம்**

ஆட்டத்தில் சொல் மாறினாரிடம் கெடூரமாய்
நடந்து மூர்க்கர் என்னும் பெயரும் கொண்டார்
நாட்டமுடன் பணிதன்னை நாள் தவறாது செய்தாரை
நடராசரே திருவடியில் நலமுற ஆண்டு கொண்டீர்.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ; த ஸ்ாநீ, தா பா | பத நித பம கம பா ; | ; ம நீதா, பா; | மதபம கா ரீஸா; |
| தி ருவேற்காட்டு | வே. . . ளா. . . ளர் | திருவெண்ணீ | று . . . பூ . சி |
| ; ஸாரிஸாஸநீதா | த.ா நீ. ஸா ; ; ; | ; ஸா ரீ கா ; மா | பதநீ நிததா பா; |
| அ டி யார்க | ளுக் கு | அமு து செய் | வி. . . த்தார் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ; ம மா பப தா; | தா நீ ஸ்ா ; ; ; | ; த நீ ஸ் ரீ .ஸ்ா; | ; நீ நித தா பா ; |
| திரு வமு து | செய் யப் | பொரு ள னைத்தும் | விற்ற. . பன் |
| ஸாரீகம் ப்ம்க்ரிஸ்ா | ஸ்ாரிஸ் நித தா பா; | மபத நிஸ்ா நிதபா; | பதநித பமக ம பா ; |
| சூ தா . . . . . டிப் | பணம் பெ. . ற்றுப் | ப . ணி . . க . ளை | தொ.ட. . . ர்ந்தார் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| நித பம கா மா பா ; | மபதநிஸ்ாநிததாபா | பத நிதபம கமபா; | மதபம காரீ ஸா ; |
| ஆ. . ட்ட த் தில் | சொல். . . மா. . றி | னா . . . ரி . டம் | கொ . டு . .ர மாய் |
| ஸா ரி ஸ நீ தாதா நீ | ஸா ; ; ; ; ; | ஸாரீ காபம பாபா | மபதநிநி ததாபா ; |
| ந ட ந் து . மூ ர்க் | கர் | என்னும் பெ . யரும் | கொண் . . . . டார் |
| நீ மா பா நீ தா ; | தா நீ ஸ்ாநீ ஸ்ா ; | ஸ்ாரீ கா ரீஸா; | ஸ்ாதாநீ நிததாபா |
| நா ட் ட முடன் | பணி தன் . னை | நாள் த வ றா | து செய் தா . . ரை |
| ஸ்ரிக்ம்ா, க்ாக்ர்ரீ . | ஸா ரிஸ் நிததா பா; | மபதநிஸ்ாநித தாபா | பதநித பமகம பா ; |
| ந டரா . . . ச . ரே | தி . ரு . வ . டி . யில் | ந . ல . . . மு . ற . | ஆண்டு.கொண்.டீர் |

## 33. சோமாசிமாற நாயனார்

அந்தணர் - சோழநாடு - திருவம்பர் - வைகாசி ஆயில்யம்

குலதர்மத்தை விடாது. யாகம் செய்து, திருவைத்தெழுத்தையோதி சிவனடிகளுக்கமுது படைத்து இனிதே வாழ்ந்திருந்தார் சோமாசி மாறர். ஐம்புலன்களையும் அடக்கி, காமக்ரோத லோபமோக மதமாச்சரியம்தனையடக்கி வாழ்ந்தார். இவரையே யாரும் சிவமாகக் கருதினார் இவர் சுந்தரமூர்த்தி நாயனாரிடம் நட்பு மிகக் கொண்டிருந்தார். முடிவில் என்றும் நீங்காத பேரின்பம் பெற்றார்.

ராகம் : தேவகாந்தாரி (20) ஆ : ஸகமபநிஸ

தாளம் : கண்டசாபு அவ : ஸ்நிதபதபமகரிஸ

**பல்லவி**

திருவம்பர் அந்தணர் சோமாசி மாறர்
திருவைந்தெழுத்தை ஓதும் சிவ பக்தர்

**அனுபல்லவி**

திருவமுது படைத்துப் பட்சமுடன் நடத்தும்
அடியார்கள் இவரைச் சிவமாய் வழிபட

**சரணம்**

காமக்ரோதலோப மோகம் யாவற்றினின்றும்
தம்மையும் பிறரையும் காத்த குணாளர்
சோமனின் பக்தர் சுந்தரருடனிருக்க
திருவாரூர்ச் சென்றானை உன்னடி சேர்த்தீரே.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| த ரி. ஸ்ா ஸ் | ஸ்நிதா தபா | பா தாப | பமமகரீ , |
| திரு வம்பர் | அந் . தணர் | சோமா . சி | மா. . . றர் |
| ஸ்ாரிக ஸரிஸ | ஸ நி. த.ா ஸா , | ஸரி பம பப | பாதஸ் பதப |
| திரு. வைந்தெ | மு. த்தை | ஓ. தும் சிவ | ப . க் தர். |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ததபம ததத | தஸ்ஸ்ா, | தாஸ் ரி. ரி. | ம்க்ரீ ரீ ., |
| தி . ரு வமுது | படைத் துப் | பட்ச முடன் | ந . டத்தும் |
| ஸ்ாரிக் ஸ்ரிஸ் | ஸ்நிதஸ் பதப | பதஸ்ா பதப | மகரீ மப தா |
| அ டி. யார்கள் | இ . வ.ரைச் | சிவ . மா . ய் | வ . ழி ப . ட |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| தா பப ப | தப மக ரிரிரி | ரீமக ரிரிரி | ஸ நி.த.ா ஸா, |
| காமக் ரோத | லோ.ப மோகம் | யா . .வற்றி | னின் . றும் |
| த.ாஸரீ | ரீமக ரிரீ | பா மகரீ . ரி. | ரீபம பா, |
| தம்மையும் | பற. ரையும் | காத் த . . கு | ணா. . ளர் |
| தா பபம | தா ஸ்ா, | தரி.ஸ் ரி.ரி. | ம்க் ரி.ரி.ரி. |
| சோமனின் | பக் தர் | சுந் தரரு | டனிருக்க |
| ஸ்ரி. ஸ்ரிஸ் | ஸ்நிதா தபப | மப தஸ் தப | மகரீ தப தா |
| திரு வா. ரூர்ச் | சென் . றா . னை | உன்ன. டி. . | சேர்த்தீ . ரே |

## 34. சாக்கிய நாயனார்

வேளாளர் - சோழநாடு - திருச்சங்க மங்கை - மார்கழி - பூராடம்

முதலில் பௌத்த மதத்தில் நம்பிக்கையுள்ளவராயிருந்தார் சாக்கியர். பின்னர் சிவநெறியே உண்மை பொருளென்றுணர்ந்தார். எந்தக் கோலத்திலிருந்தாலும் மனத்தில் சிவனை நினைத்தாலே போதுமென தீர்மானித்து, தன் வேடத்தைக் நீக்காமலே சிவனைத் துதித்து வந்தார். செய்கையெப்படியானாலும், அதன் பாவந்தான் முக்கியமெனக் கொண்டார். ஒரு சமயம் ஓர் லிங்கத்தினைக் கண்டு பூசை செய்யும் ஆவல் உந்த, ஓர் கல்லை விட்டெறிந்து வணங்கினார். அதைத் தவறாகக் கருதாமல், அப்படிச் செய்யத் தன்னை ஊக்குவித்ததே சிவன் செயலென்று தினமும் கல்லெறி பூசையையே தனது தொண்டாகக் செய்து கரையேறினார் சாக்கியர்.

**ராகம் : ஷண்முகப்ரியா (56)　　　　　தாளம் : ஆதி**

## பல்லவி

பிறவித் தொடரை இப்பிறவியில் முடித்திட
சாக்கியரும் பௌத்த சமயம் படித்தார்

## அனுபல்லவி

புறசமய முடிவு அறிந்த பின் சாக்கியர்
சிவ நெறியை உண்மைப் பொருளென்றறிந்தார்

## சரணம்

எந்த நிலையிலும் எந்தக் கோலத்திலும்
உந்தனை மறவாதிருத்தலையே கொண்டு
சொந்த வேடம் நீங்காமல் கல்லாலுன்னையர்ச்சித்து
காட்சியும் பெற்றுக் கயிலையேகச் செய்தீரே.

## பல்லவி

| | | |
|---|---|---|
| ; , பதநி ஸ்ா ஸ்நி ரி ஸ் நி த பா | மா, பத ப பா | பம காகா ரீ |
| பிறவித் தொ ட ரை . . . இ ப் | ப ற வி யில் | மு . டித் திட |
| ; , ஸரிக ரீ காப ம தா பா | ; , பத நீநி | ஸ்ா ; ஸா ; |
| சா . க் கிய ரும் . பௌத்த | சமயம் ப | டித் தார் |

## அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; , ஸ் ரீ நி ஸ்ா ரீ , நிக் ரீ | ; , பக் ரி.கா | க்ரி.ரி. க் ரீ . ஸ்ா |
| பு ற ச ம ய மு டி வு | அறிந்தபன் | சா . . க் கி யர் |
| ; நிநிநீ நீ ஸா, ஸ்ரி ஸ்ரீ | ; , நிஸ் நீத | பாத நி தா பா |
| சிவ நெறி யை உண்மைப் | பொரு ளென்ற | றிந் . தா ர் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , பநி த பா பா; பா பா | ; , பாப பம | காரீ கா ரீ |
| எந் த நி லை யிலும் | எந்த க் கோ. . | லத் திலும் |
| ; , ஸரிகரீ கம பம பா, ம | பதாநிஸ்ா ஸ்ா | ஸ் நி ரி ஸ் நிதபா |
| உந்தனை மற . வா தி | ருத் த லை யே | கொண் . . . . டு |
| ; , நீஸ் தாநி ஸ்ா ஸ்ா, ஸ்ா | ; , நிக் ரீக் | க் ரி. ரி ஸ் நிரி. ஸ்ா |
| சொந்தவேடம் நீங் கா மல் | கல்லா . | லுன்னை அர்ச் சித் து |
| ; நீ நீ நீ ஸ்ா ரீ . ஸ் ரி. க்ா | ; , நிஸ் நிதா | பா, பத நிஸ்ா |
| காட்சியும் பெற் று. . | க யி லை யே | கச் செய்தீரே |

## 35. சிறப்புலி நாயனார்

அந்தணர் - சோழநாடு - திருஆக்கூர் - கார்த்திகை - பூராடம்

சிறப்புலியார் திருவைந்தெழுத்தை தினமும் ஓதி, அக்னி முறைப்படி. வளர்த்து, சிவனடியார்களை நன்கு உபசரித்து அவர்களுக்கு வேண்டுவன அளிப்பார். இவ்வாறு பலப்பல புண்ணியங்கள் செய்தே சிவனடி சேர்ந்தார் சிறப்புலி நாயனார்.

**ராகம் : சுத்தசாவேரி (29)** **ஆ : ஸரிமபதஸ்**

**தாளம் : மிச்ரசாபு** **அவ : ஸதபமரிஸ**

**பல்லவி**

இல்லை என்று வந்தோர்க்கு இல்லை என்னாது ஈயும்
ஆக்கூர் வாழ் அந்தணர் சிறப்புலியார்

**அனுபல்லவி**

அல்லும் பகலும் உன் அடிகளைத் தொழுது
அடியார்கள் வேண்டுவதை அள்ளக் கொடுத்தார்

**சரணம்**

திருவைந்தெழுத்தோதி சிவன் அடி தொழுது
தினமும் அக்னி வளர்த்துச் சிவ பணியாய் செய்தார்
திருத் தொண்டு பல செய்து சீரும் சிறப்பும் பெற்ற
சிறப்புலியாரை உந்றன் சீரடி சேர்த்தாயே.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| பதஸ் தாபா | ம பா பம ரி ஸா | ஸரிம ரீ ஸா | ரிஸ த.ா ஸாஸா |
| இல்லை என்று | வந் தோ . ர்க்கு | இல்லை என்னா | து . . ஈயும் |
| ஸரி ரிபம பா | பதஸ் பதபா | மா பமரீ ரிஸ | ரீ ரிபம பா, |
| ஆக் கூ. ர் வாழ் | அந் . தணர் | சிறப்பு . . . . | லி . . . யார் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| பம பத பபத | ஸ்ா, ; ஸ்ா | ஸ்ரிம்ஸ்ரி.ஸ்ா | தஸ்ா தா; |
| அல்லும் ப . க | லும் உன் | அடி. க. ளை | தொழு து |
| ததரி. ஸ்ா ஸ்ா | தாஸ் தா பா | பதஸ் தா பா | மபா பமரீ ரிஸ |
| அடி. யார்கள் | வேண்டு வதை | அள்ளிக் அள்ளி | கொடுத் தா. . .ர் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ஸமா ம ரி ரி ஸ | ரீ, மா மா | ரி மா பா பா | மாபமரீ ரீஸா |
| திரு வைந் தெ . | முத் தோ தி | சிவன் அ டி | தொழு . . . து |
| ஸ ரி ம ரீ ஸா | த.ஸா ஸா ; | ஸஸரி ரீபம பா | பதஸ் பத பா |
| தினமும் அக்னி | வளர்த்துச் | சிவ . பணி யாய் | செய் தார் |
| பபம பா தா | தஸ்ா ஸ்ா ஸ்ா | ஸ்ரீ . ம்ா ரி.ஸ் | தாஸ் தா பா |
| திருத் தொண்டு | பல செய்து | சீ . ரும் சி | றப்பும் பெற் ற |
| தத ரி. ஸ்ா ஸ்ா | தாஸ்தா பா | ம பா பமரீ ரிஸ | ஸரிமரீஸா |
| சிற ப் பு லி | யாரை உந்றன் | சீ . ர . . டி | சே . ர்த்தாயே |

# 36. சிறுத்தொண்ட நாயனார்

மாமத்திரர் - சோழநாடு - திருசெட்டான்குடி - சித்திரை - பரணி

சிறுத்தொண்டர் சேனாதிபதி பதவியை திறமையாய் வகித்தும் இவர் ஓர் ஆழ்ந்த சிவபக்தரென அறிந்தும், இவரை சிவத்தொண்டு புரியுமாறு சொந்த ஊறுக்கே அனுப்பினான் மன்னன்.

இவர் சிவனடியார்களுக்கு அமுது படைத்த பின் உண்பார். ஒருநாள் சிவபெருமானே அடியாராகி, அடியார் இருக்கும் ஊர் சென்றார். அமுதண்ண சிவனடியார் யாரும் கிடைக்காமல், கடைசியில் அடியாய் வந்த சிவபெருமானைக் கண்டு, தம்மில்லத்தில், அமுதுண்ண வரும்படி, இறைஞ்சினார் சிறுத்தொண்டர். மாமிசம் உண்ணுதலையே பிரியமாகக் கொண்டுள்ள தனக்கு, அவனால் உணவு படைக்க முடியாதென அடியார் கூற, எது வேண்டுமானாலும் தான் சமைத்துப் போடுவதாகக் கூறியழைத்தான் சிறுத்தொண்டன்.

கடைசியில் ஒரு வழியாக அடியாராக வந்த சிவபெருமான் ஒருகுடிக்கு ஒரே மகன், கறி வேண்டும் என்று கூறியதோடு மகனைத் தாய் பிடித்துக் கொள்ள தந்தையறுக்க, பின் பெற்றோர் அதனை மனைவி சமைத்த, கறி வேண்டும் என்றார். எங்கும் இம்மாதிரி பாலன், கிடைக்க முடியாதாகையால் மனைவி ஒப்ப, தன் மகனையே கறியாக சமைத்தார். சிறுத்தொண்டர் அடியார் அருகிருந்த அமுதுண்ண, சிவனடிகள் யாரும் கிடைக்காததால் சிறுத் தொண்டரே அருகில் அமர்ந்தார். பின்னர் இவர்களுடைய மகனை பக்கத்திலிருந்து உண்ண, அழைக்குமாறு அடிகள் கூற குழம்பி வேறு வழியின்றி சீராளா ! மகனே! வா! என்றழைத்ததும் ஓடி வந்தான் பையன் உள்ளே வந்தால் அடிகளை காணவில்லை. விண்ணில் எம்பெருமான் உமையுடனும் முருகப் பொருமாளுடனும் காட்சி தந்தார். சிறுத்தொண்டர் மனைவி மகனுடன் ஈசனுடைனே கயிலை சென்றார்.

ராகம் : உசேனி (22)　　　　ஆ : ஸரிகமபநிதநிஸ்
தாளம் : கண்டசாபு　　　　அவ : ஸ்நிதபமகரிஸ

**பல்லவி**

வெற்றி கொள் பரஞ்சோதியை மன்னனும் சிவப்
பணிகள் செய்திட சொந்த ஊர் அனுப்பி வைத்தான்

**அனுபல்லவி**

நெற்றிக் கண்ணயார்க்கு நித்தமும் அமுது
படைத்த பின் உணவு கொள்ளும் நியமம் கொண்டாரே

**சரணம்**

சிவனடியாய்ச் சென்று சிறு பிள்ளைக் கறி கேட்க
தம் ஒரு மகனையே அரிந்து சமைத்து வைத்தான்
அவரையும் உன் அருகே அமர்ந்திடக் கூவியதும்
ஆடி அவன் ஓடி வர விண்ணில் காட்சி தந்தீர்.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ரீகம கரி ஸா ஸா | ஸப பாப | மபாஸ்நிதாபா | மகமப பமகாரீ |
| வெற்றி. கொள். ப | ரஞ் சோதி | யைமன்ன . னும் | சி . வப் பணிகள் |
| ரிகமபதாப | மகமாபபம க ரிரி | ஸாஸபப | பத பத மபா |
| செய்திட . . | சொந் . . .த. ஊ | ர் அனுப்ப | வை. . த் தான் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| பபநீத | தநிஸா ஸ | தாநிஸ்ா | ஸ்நிரிஸ்நிதபாபா |
| நெற்றிகண்ண | யார்க்கு | நித்தமும் | அ . மு . து . . ப |
| பாத தநிஸ்ா | ஸ்நி ரிஸ் நித பாமா | பஸ்நித ப | மகபம கரீ |
| டைத்த பன் | உண . வு கொள்ளும் | நிய . ம ம் | கொண் . டாரே |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ஸஸ ஸஸஸ | ஸபப பப | பா ஸ்நி தப | மக பம க கரி |
| சிவ ன டி யாய்ச் | சென்று சிறு | பள்ளைக் கறி | கே . . . . ட்க |
| ரிக மபா | மகபம க ரீ | ஸஸ பபப | நி நித பா |
| தம் ஒரு | ம . க . னை யே | அரிந் துசமைத் | து வைத்தான் |
| பபப நித | த நி ஸ் ஸ் ஸ் | த நி ஸ் ஸா | ஸ்நிரிஸ் நிதபாபா |
| அவரை யும் | உன் அ ரு கே | அமா்ந்தி டக் | கூ . . வி ய தும் |
| க்ா ரி. ஸ் ஸ் | ஸ்ா நித பப | பத நி ப த | பம காரி , |
| ஆடி யவன் | ஓ டி . வர | விண்ணில் கா | ட்சி தந் தீ. ர் |

# 37. கழற்றறிவார் நாயனார்

அரசகுலம் - மலைநாடு - கொடுங்களூர் - ஆடி - சுவாதி

கழற்றறிவார் கோயில் பக்கம் குடியிருந்து ஈசனுக்குத் தொண்டு செய்து வந்தார். இவருக்கு உரிமையான அரச பதவி வந்ததும், பதவியிலிருந்தால் சிவ பணிக்கு இடையூறு ஏற்படுமோவெனப் பயந்து, சிவபெருமானின் நோக்கையறிந்து பின்னரே பதவியேற்றார் கழற்றறிவார்.

ஒரு சமயம் வீதி வலம் வருகையில் ஓர் வண்ணான் எதிர்ப்பட்டான். அவன் உடல் முழுவதும் உவர்மண் கரைந்து வெளேரென்று விபூதி பூசிய சிவனடியார்போல் காட்சியளித்தான். யானையினின்றும் இறங்கி இவ்வண்ணானை வணங்கினான் மன்னன். சிவபெருமான் பாணபத்திரனிடம் கொடுத்தனுப்பிய திருமகத்தின்படி, ஏராளமான பொன்னும் பொருளும் பாணபத்திரனுக்களித்தான் மன்னன்.

தினமும் இவனது பூசை முடிவில், தில்லை நடராசனது சிலம்பொலி வழக்கமாகக் கேட்கும். ஒருநாள் கேட்காததால், தான் என்ன அபசாரம் செய்தோனோ என்று பயந்தான். அசரீரியில் சிவன், சுந்தரரின் பதிகத்தில் ஆழ்ந்திருந்ததால் சேரனுக்கு சிலம்பொலிதர தாமதமாயிற்றென்று கூறினார். உடனே தில்லை சென்று சுந்தரரரை தரிசித்து, அவருடைய நட்பைப் பெற்று அவருடன் பல தலங்கள் சென்று தரிசித்தார். முடிவில், வெள்ளையானையில் சுந்தரர் கயிலைக்குச் செல்கையில் தன் குதிரைக்குப் பஞ்சாட்சரம் ஓதி சுந்தரர் முன்பாக அவரை வணங்கியவாறே சென்று, தடை மீண்டு, சிவனைக் கண்டு, கணங்களுக்கு அதிபரானார் கழற்றிவார்.

ராகம் : சாரங்க (85)       ஆ : ஸபமபதநிஸ்
தாளம் : ஆதி       ஆவ : ஸ்தாபமரிகமரிஸ

### பல்லவி

வண்ணானைப் பணிந்த கழற்றிவார் கனவில்
பாணபத்ரனுக்குப் பொருள் அளித்திடச் சொன்னீர்

### அனுபல்லவி

மண்ணில் மயங்கிச் சுந்தரர் பால் சென்றதால்
சதங்கையொலி மன்னனுக்குத் தந்திடத் தாமதமென்றீர்

### சரணம்

வெள்ளையானை மீது நண்பன் சுந்தரன் கயிலை செல்வ
தாமும் தம் குதிரைக்கு ஐந்தெழுத்தை ஓதி
துள்ளியே சுந்தரர்முன் சென்று துதி செய்ய
தடை மீண்டு உனைக்கண்டு கணங்களுக்கதிபரானீர்

### பல்லவி

| | | |
|---|---|---|
| நிஸ்ா தாபா , ப ம தா பா ; | க காம ரீ ரீ | ஸநி.த ரீ ஸா; |
| வண் ணனைப் ப . ணிந்த | க ழற் றறிவார் | க . ன வில் |
| ஸா, ஸ ரீ ஸாபக மாபா ; | ப தா நி ஸ்ா ஸ்ா | ஸ்நித நி பா ; |
| பா ண பத் ரனு . க் கு | பொருள் அளித்திடச் | சொன் . . னீர் |

### அனுபல்லவி

| | | |
|---|---|---|
| பாபம ரீ கம ரீ ; நீ. ஸா | ; ப பா த பா | ஸ்ா ஸ் நி ரீ . ஸ்ா |
| மண்ணில் . மயங் கி ச் | சுந் தரர் பால் | சென் . ற தால் |
| ; க்ாம் ரீ . ஸாநீ ஸ் தா பா | தா, பபா பம | ரிகம ரீ , ஸா |
| சதங்கையொலிமன்னனுக்குத் | தந் திடத் தா . | ம . த மென்றீர் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ஸாஸா ரீஸா பா, ப பா பா | பா, த பா பம | ரிக மா ரீ ஸா |
| வெள்ளை யானை மீ து நண்பன் | சுந் தரன் க . | யி . லை செல்ல |
| பா, தா , பா க மா ரீ, ஸா | ஸாஸா ரீஸா | பா; பா; |
| தாமும் தன் குதி ரைக்கு | ஐந் தெழுத்தை | ஓ தி |
| ஸ்ா , ரீ, ஸ்ாஸ்ா ; ஸ்ா ஸ்ா | த நீ ஸ் ரீ . ஸ்ா | நிஸ்ா தா, பா |
| து ள் ளி யே சுந் தர ர் | முன் சென்று | துதி செய்ய |
| ப பா ஸ்ா, ஸ்ா நிஸா தா, பா | நிஸ்ாஸ் தா பா | ரிகா ம ரீ ஸா |
| தடை மீண்டு உனைக் கண்டு | கணங்க ளுக்கு | அதி ப ரானீர் |

# 38. கணநாத நாயனார்

அந்தணர் - சோழநாடு - சீர்காழி - பங்குனி - திருவாதிரை

திருக்கோயிலுக்கு பற்பல திருப்பணிகள் செய்யும் சிவபக்தர் கணநாதர். இவர் முப்போதும் அர்ச்சனை செய்வார். ஞானசம்பந்தரின் பேரன்பைப் பெற்றவர். திருத்தொண்டு புரிவோர்க்குத் தொண்டு புரிவார். சிவசிந்தனையிலேயே சிவனையடைந்தார். சிவகணங்களுக்குத் தலைவரானார் கணநாத நாயனார்.

**பல்லவி**

சீர்காழிப் பதியினில் அந்தணர் குலத்தினில்
பிறந்த கணநாதன் சிவபக்தன்

**அனுபல்லவி**

சீர்மேவும் திருத்தோணியப்பர்க்கு நாள் தோறும்
திருப்பணி பல செய்து சிறப்புடன் இருந்தார்.

**சரணம்**

ஞானசம்பந்த மூர்த்தி பேரன்பாலே
நாள் தோறும் முப்போதும் அர்ச்சனை செய்து
ஞானப் பேருரைகளைத் தொண்டர்களுக்களித்து
ஞானியாகியே சிவலோகம் சென்றிடச் செய்தீர்.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| பா, பா , பா பமகா, ரி ஸா | ; , ஸரிகரீ | ஸநி.த.ா நி. ஸாஸாட |
| சீர் கா ழிப் ப . தி யி னில் | அந்தணர் | கு . லத் . தினில் |
| ஸஸஸா கா கம பா, ம தா பா | ; பபா கமா | பா ; ; ; |
| பிறந்த க ண நா . தன் | சிவ பக் | தன் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| நிஸ் நி தா, பா மகா மா, பா | பா, தா, பா | ; தநி ஸ்ா ஸ்ா |
| சீர் மே வும் திருத் தோணி | யப் பர் க் கு | நாள் தோறும் |
| ஸ ரீக் ரீ . ஸ்ா ஸ்நிதா நீஸ்ா | ; பபாத பா | பம கா கரிஸா |
| திருப் பணி பல . . செய்து | சிறப் பு . டன் | இ . ருந் . . தார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , பா பபா பம கா ரி ரீ ஸ | ; ஸ ரீ க ரீ | ஸ நி.த.ா நீஸா |
| ஞான சம் பந் . த மூர்த்தி | பே . ரன் | பா . . . லே. |
| ; , ஸா கா ரி கமப க மா பா | ; கா மா பா | தா நீ ஸ்ா ; |
| நாள் தோறும் முப் போ.தும் | அர் ச்சனை | செய் . து. . |
| நிஸ்நிதா , பா மகா மா, பா | பா , தா , பா | தா நீ ஸ்ாஸ்ா |
| ஞா .னபே ரு ரை க ளைத் | தொண்டர் க | ளு க்களித்து |
| ; , ஸ் ரி. க் ரீ . ஸ் நிதா தநி ஸ்ா | ; ஸா நித பா | பம கா ரீ ஸா |
| ஞா . னி யாகி . யே சி . வ | லோகம் சென் | றி. டச் செய்தீர் |

## 39. கூற்றுவநாயனார்

**அரசவம்சம் - பாண்டிநாடு - களந்தை - ஆடி - திருவாதிரை**

கூற்றுவர் தோள் வலிமையால் பகைவர்களை வென்று வெற்றி வாகை சூடினார். மிகுந்த சிவபக்தர், சிவனடிகளை ஆதரிப்பார். அரசர்க்குரிய செல்வமும் மதிப்பும் இருந்தும் இவர் திருமுடி மட்டும் பெறாமலிருந்தார். சோழ வம்சத்திலுள்ளவர்களுக்கு மட்டும் இவ்வுரிமையுண்டென, ஓர் பழக்கமுள்ளதெனக்கூறி, யாவரும் சேரநாடு, ென்றுவிட்டனர். இவர் மிகவும் வருந்தி, இறைவனது திருவடியே தனக்கு திருமுடியாக அமைய வேண்டுமென்று நினைத்துப்படுத்தார். அவ்வாறே ஈசனும் தனது திருவடியை கூற்றுவனுக்கு முடியாக சூட்டினார். அதையே முடியாகக் கொண்டு ஆட்சி புரிந்து சிவனடியையும் அடைந்தார் கூற்றுவர்.

ராகம் : யமுனா கல்யாணி (65)　　　　ஆ : ஸரிகமபதஸ்
தாளம் : ஆதி　　　　அவ : ஸ்தமபகரீஸ

## பல்லவி

திருக்கடந்தைக் குறுநில மன்னன் குலத்துதித்த
கூற்றுவார் சிறந்த சிவபக்தர்

## அனுபல்லவி

திருவருளாலே படைபலம் கொண்டு
பகை வென்று புகழ் மிகுந்து வாழ்ந்தாரே

## சரணம்

திரு முடியில்லாத குறையால் மிக வருந்தி
உந்தன் திருவடியே முடியாகிட வேண்ட
திருவருள் புரிய கனவிலுன் திருவடியை
மன்னன் முடி மீது வைத்து மகிழ்வித்தாயே.

## பல்லவி

| | | |
|---|---|---|
| ; நி.ரீ க பம காரீ ஸா ; | ; ஸரிஸ நிதா | நி.ஸாஸாஸா , |
| திருக் க டந் தை க் | குறு . நில | மன் . னன் |
| ; நிநீ ரிரீ கா, ரிக ககா | ; , மநி த பப | மத பமகரிஸா |
| குலத் துதித் த கூற்று வர் | சிற ந்த சிவ | ப . . . . க்தர் |

## அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; ம பா க மா பா ; பா ; | ; , கம த தா | மத நிஸ் நி த பா |
| திரு வ ரு ளா . லே | படை பலம் | கொண் . . . டு |
| ; தஸ்நிதாப மபாம கரிஸா | ; நி. ரீ க பம | க ரீ , ஸா; |
| பகை . வென்றுபுகழ்மி குந் து | வாழ்ந்தா . . | ரே . . |

## சரணம்

| | | |
|---|---|---|
| ; ம பா ப பா பா, பா, பா | ; மதா நிஸ்நி | தாநித பப பா |
| திரு முடி யில் லா த | குறை யால் | மிக வருந்தி |

| | | |
|---|---|---|
| ; க நிதா பா மத பமக ரி ஸா | ; நி. ரீகா ம | பா, கமா பா |
| உந் தன் தி ரு . வ . டி . யே | முடி யாகி | ட வேண் ட |
| ; நிஸ்ா நி தா பா நித பம கா | ; ககா மதா | பதா நிஸ்ா ஸ்ா |
| திரு வருள் பு ரி ய . . | கன விலு ன் | திரு வ டி யை |
| ; நி ரீ . ஸ்ா , தஸ் நி தா பா , | ; மபபபா , | மத பம கரிஸா |
| மன்னன் மு டி . மீது | வைத்தும | கிழ்வித் தாயே |

## 40. புகழ்ச் சோழ நாயனார்

அரசகுலம் - சோழநாடு - உறையூர் - ஆடி - கிருத்திகை

சிவ பூஜைக்கு மலர் எடுத்த வந்த சிவகாமியாண்டானை பட்டத்துயானை தள்ளியது இதனைக் கண்ட எறிபத்தன் பட்டத்து யானையைப் பாகனுடன் கொன்றான். இதனை செவியுற்ற புகழ்ச்சோழன் தன்னையும் கொல்லுமாறு எறிபத்தனை வேண்டினான்.

ஒரு சமயம் எதிரியுடன் போர் செய்கையில், மலைபோல் இறந்து குவிந்திருந்த எதிரிப் படைகளில் ஓர் சடையுள்ள, தலைமுண்டத்தைக் கண்டார். இவருக்கு அது சிவனடியாகத் தோன்றியது. உடனே அரசை மகனுக்கீந்து, அந்தத் தலையை பொன் தட்டில் வைத்து, தன் தலையினில் சுமந்து, தீக்குள் இறங்கினார் புகழ்ச் சோழர். தீயினில் இறங்கியவர் இறைவனடி சேர்ந்தார்.

**ராகம் : தர்பார் (22)** **ஆ : ஸரிமபதநிஸ்**

**தாளம் : ஆதி** **அ : ஸ்நிதபமரிககாரிஸ**

**பல்லவி**

பட்டத்து யானை செய்த பழிக்குத் தன் உயிரையும்
பறித்திட எறிபத்தரை வேண்டினான் புகழ்ச் சோழன்

**அனுபல்லவி**

கட்டளை இட்டபடி கப்பம் செலுத்தாத
அதிகனுடன் போர் தொடுத்த வென்றான்

**சரணம்**

வெட்டிய தலை ஒன்றில் ஒற்றைச் சடைகண்டு
மட்டில்லாத துயர் கொண்ட தலையினை எடுத்து வைத்த
தட்டினைத் தலையில் வைத்துச் சட்டெனத் தழலில் இறங்க
மட்டில்லா மலர் பொழிய உன் மலரிடி சேர்த்தாயே.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , ரிம பதா ரி.ஸ் நிஸ் தா பா | ; , தநி ப பா | பம ரிம ரீஸா |
| பட்ட த்து யா னை . செய்த | பழிக்குத்தன் | உ . யி . ரையும் |
| ; , ரி பா மரி ரிரி மா ரீ ஸா | ; , ரி ம பதா | கா க நி பத பா |
| பறித் திட எறி பத் த ரை | வேண்டினான் | பு கழ் சோ. ழன் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , மா ப தா தா த நி ப த பா | ; ம பா த தா | த நிஸ் நி ஸ்ா ; |
| கட்டளை இட் ட .ப . டி | கப்பம் செலுத் | தா . . த |
| ; , ஸ்ரி. ம் ரி. ஸ் ஸ் நித நி பா ; | ; த நீ பா, | ரீரி ம ரீ ஸா |
| அதி க னு . ட ன் . . போர் | தொடுத்து | வென் . . . றான் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ; , க க ரிஸா ரி மா பா, பா | ; தநி பாம | ரிமரி ககரிஸா | |
| வெட்டிய த லை ஒன்றில் | ஒற்றைச் ச | டை . . கண்டு | |
| ; , ரி ப ப ம பம ரீ கக ரீ ஸ | ; , ரிம ப தா | நி நீ ஸ் தாபா | |
| மட்டில்லாத்து யர்கொண்டு | தலையினை | எடுத்து வைத்த | |
| ; , மப த தா ததநீ தாபா | ; மபாததா | தநிஸ் நி ரீ .ஸ்ா | |
| தட்டி னைத் தலையில் வைத்துச் | சட் . டெனத் | தழலில் . இறங்க | |
| ; , க்க்ரி.ஸ்ா நிநீஸ்தா பா | ; மப தநிபா | பமரீ ககரிஸ் | நிஸ |
| மட் டில்லா மலர் பொழிய | உன் மலரடி | சேர் . த்தாயே. | |

# 41. நரசிங்கமுனியரைய நாயனார்

*சிற்றரசகுலம் - நடுநாடு - திருநாவலூர் - புரட்டாசி - சதயம்*

இம் மன்னன் போரிடுவதையே விடுத்து, திருக்கோயில் செல்வங்களைப் பெருக்குவதிலேயே கண்ணாயிருந்தார். இவருக்குத் திருநிறணிந்தவர், யாராயினும் பெருமதிப்புக் கொள்வார். திருவாதிரை நட்சத்திர நாட்களில் விசேட பூஜை செய்து, அன்றைக்கு தன்னிடம் வந்த திருநீறணிந்த தொண்டர் யாவர்க்கும் நூறு பவுன் அளிப்பது வழக்கம். ஒரு சமயம் அவ்வாறு அளிக்கும்போது, மிகவும் ஒழுக்கம்கெட்ட ஒருவர், விபூதியிட்டு வந்ததால் அவருக்கும் இரண்டு பங்காக பவுன் அளித்தார். இவ்வாறு திருநீறணிந்தவர்களுக்கு திருந்தொண்டு புரிந்து திருவடி சேர்ந்தார். இவர் சுந்தமூர்த்தி நாயனாரின் வளர்ப்புப் பிதா

**ராகம் : ஸ்ரீரஞ்சனி (22)** **ஆ : ஸரிகமதநிஸ்**

**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிதமகரிஸ**

### பல்லவி

திருமுனைப்பாடி நரசிங்க முனியரையர்
திரு நீற்றையே தம் செல்வமாய்க் கருதினார்

### அனுப்பல்லவி

திருக்கோயில் பொருளைப் பெருக்குவதில் தம்
உயிர் போயினும் அதைப் பொருட் படுத்தார்.

### சரணம்

திருவாதிரையில் சிவ பூஜை செய்து சிவ
னடியார்களுக்கு நூறு பொன் காசு கொடுப்பார்
திரு நீறணிந்தவர் தீயவரானாலும்
இகழாமல் தொண்டு செய்து உன்னடிசேர்ந்தார்

### பல்லவி

| | | |
|---|---|---|
| ; த நீ ஸ் ஸாஸ்நிரி.ஸ்நித மா | ரி ரீக மா மா | ரி ரீ க ரீ ஸா |
| திருமு னைப் பா. . . . . டி | ந ர சிங் க | முனி ய ரை யர் |
| ; ஸரிஸ நிதநி ஸா ; ரிக மா | ; க மா நி தா | தா நீ ஸ்ா ஸ்ா |
| திரு . நீற்றை யே தம் . | செல் வ மாய் | கரு தி னா ர் |

### அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; நி தா மா த நீ ஸ்ா ஸ்ா ; | ; நி ஸ்ா ரி. க்ா | க் ரி ரீ.ஸ்ா; |
| திருக் கோயில் பொருளைப் | பெருக்கு கு வ | தில் . தம் |
| ; ஸ் ரி.க் ரீ. ஸ் ஸ் நிதம தநி ஸ்ா | ; த ரி. ஸ் நி த ம | ம க ரி க மா ; |
| உயிபர் போ.யினு . . . அ. தைப் | பொருட் படுத் | தா . . . ர் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ரி ரி க மா, கா காரீ ரீ ஸா | ; ஸ ரி ஸ நி தா | நீ , ஸ ஸா ஸா |
| திரு . வா தி ரையில் சிவ | பூ . . சை . | செய் து சிவ |
| நி ஸாரீ, ரிக மா மா மா ,ம | கமா தா, நித | தா நீ நி த தா |
| ன டியார்க . ளுக்கு நூ று | பொன் காசு . | கொடுப்பா . ர் |
| ; ஸ் ரி. ஸ் நித நிஸ்ாஸ்ா ஸ்ாஸ்ா | ; நி ஸ் ரி. க் மா | க் ரீ.ரீ., ஸ்ா |
| திரு . நீ . . ற ணிந் த வர் | தீ . ய . வ | ரா , னா லும் |
| த நீ ஸ்ா, ஸ்ா ஸ்நித மத நிஸ்ா | ; ஸ்ாநிதமா | மக ரிக மா ; |
| இக ழா மல் தொண்டு. செய்து | உன்ன . டி | சே . .ர்த் தார் |

## 42. அதிபத்த நாயனார்

பரதகுலம் - சோழநாடு - நாகப்பட்டினம் - ஆவணி - ஆயில்யம்

தினமும் தான் பிடிக்கும் மீன்களில், தலையாய மீன் ஒன்றினை ஆரும் பெருமானை நினைந்து ஆழ்கடலில் வீசுவார் அதிபத்தர். ஒருநாள் ரத்தினங்கள் இழைத்த பொன்மீன் ஒன்று கிடைத்தது. அன்று கிடைத்த மீன்களில் அதுவே சிறந்த மீன் அதனைக் கண்டுதும் அதிபத்தர் சிறிதும் யோசியாமல் அதனை நீரில் போட்டார். உடனே சிவபெருமான் விடைமேல் விண்ணில் காட்சியளித்தார். சிவலோகத்தில் அடியார்களுடன் சேர்ந்திருக்கும்படி திருவருள் பாலித்தார்.

ராகம் : பௌளி (15)                    ஆ : ஸரிகபதஸ்
தாளம் : ஆதி        அவ : ஸ்நிதபகரிஸ

**பல்லவி**

நாகப் பட்டின நுனைப்பாடி பரதகுலத் துதித்த
அதிபத்தர் சிவபக்தர்

**அனுபல்லவி**

லாகவமாய் பிடிக்கும் மீனில் தலையாய மீனை
ஆடும் பெருமானுக் கென்று ஆழ்கடலில் போடுவார்

**சரணம்**

ரத்தினங்கள் இழைத்து அதிசயப் பொன்மீன்
அதிபத்தர் வலையினில் அகப்பட்டதும்
பொத்தெனவே கடலில் வீச உந்தன் காட்சி பெற்றுக்
கைகளைச் சிரமேற் கூப்பிக் கயிலையடைந்தாரே.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , பதக ரிக பபா பபா த ப | பா , க பதபா | பா, பபாத ப |
| நாக . ப் பட்டின நுனைப் பா | டி பர தகு | லத் துதித்த |
| கா க பாகரீ ஸ நி. த.ா ஸா ; | ; ஸரீ க் கா | ; பா ; ; |
| அதி பத் தர் . . | சி வ ப க் | தர் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; பா பக பாதஸாஸ் ஸ்ா ஸ்ா | ; , தஸ் ரீ .ஸ் | ஸ்நிதா தாபா |
| லாவகமாய் படிக்கும் மீ னில் | தலை யாய | மீ . . . னை |
| ; , பா த ஸ்ஸ் ஸ்ா, ஸ்ா நி தப | ; , கா பதப | கா, ப கரிஸா |
| ஆடும் பெரு மானுக் கென்று | ஆழ்கடலில் | போடு . வார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , கா பக ரி ஸ ரீக பா பா | ; கபதபா | பா ; த ப கா |
| ரத்தினங் கள் இழைத்து | அதிசயப் | பொன் மீ .ன் |
| ; , பக த.ாபா கபாகரி ஸா | ; .ஸரீ காக | பா ; ; ; |
| அதி பத்தர் வலையி . னில் | , அகப் பட்ட | தும் |
| பா, பக பா, தஸ்ா ஸ்ஸ்ாஸ்ா | ப தா ஸ்ா, ரி.ஸ் | தஸ்ாஸ் நித பா |
| பொத்தெனவே கட லில்வீச | உந் தன் கா | ட்சி பெற்றுக் |
| பதா ஸா, ஸ்ஸ் தஸ் ரி.ஸ் நிதபா | கபா தஸ் நி த ப | பகத ப க ரி ஸா |
| கைகளைச் சிர மே ற் கூப்பக் | கயிலை . . ய . | டை . . ந் தா . ரே |

## 43. கலிக்கம்ப நாயனார்

வணிகர் - நடுநாடு - திருப்பெண்ணுகடம் - தை - ரேவதி

சிவனடிகளுக்கு இன்னமுது படைத்து அவர்களுக்கு வேண்டுவன வளித்தார் கலிக்கம்பர். ஒருசமயம் வந்த, அடியார்களுக்கு பாதபூஜை செய்வதற்கு, மனைவி நீர் வார்க்கையில் சிறிது தாமதமேற்பட்டது. அந்த அடியார், முனாளில் தங்களிடம் குற்றேவல் புரிந்து வந்து மனஸ்தாபம் கொண்டு வேலையைவிட்டு நீங்கினவனே என்று எண்ணத்தால், நீர்வார்க்க தயங்குகிறானோ என்றெண்ணிய கலிக்கம்பர், மனைவியிடமிருந்து நீர் பாத்திரத்தை பறித்துக் கொண்டு அவள் கையைவெட்டி வீசிவிட்டு தானே நீர் வார்த்து அடிகள் பாதம் கழுவி, உபசாரம் செய்த, அமுதூட்டி, அளவற்ற பொருள் தந்து அனுப்பித்தார். இவ்விதம் தொண்டு புரிந்தே ஈசனடி சேர்ந்தார் கலிக்கம்பர்.

ராகம் : மந்தாரி (50) — ஆ : ஸரிகமபநிஸ்

தாளம் : கண்டசாபு — அவ : ஸ்நிபமகரிஸ

## பல்லவி

திருப்பெண்ணா கடத்து வணிககுலத்துதித்த
கலிக்கம்பர் சிவபக்தர்

## அனுபல்லவி

திருத்தூங்கானை மாட சிவக்கொழுத்து நாதர்
திருவடிகட்கு தினம் திருத்தொண்டு செய்தார்

## சரணம்

பாதபூசை செய்ய மனைவிநீர் வார்க்க
பழையபணி யாளனுக்குத் தாமதம் செய்ய
நாதன் வெகுண்டு நங்கை கையை வெட்டி
நிபந்த தொண்டினைச் செய்து நாதனடி சேர்ந்தாரே

## பல்லவி

| | | | |
|---|---|---|---|
| ஸரிகாம | பாபபப | பநிபாம | கா பம கரிஸ |
| திருப்பெண் | ணா கடத்து | வணி க்கு | லத் து . தித் த |
| ஸரிஸா, | ஸநி. ப.ா நிஸா | ஸரி கா பம | கரிஸா , |
| கலிக்கம் | . . . பர் | சிவ ப க் | தர் |

## அனுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| நிஸ் ஸ்நி பா | பாஸ்ா ஸ் ஸ்ாஸ்ா | ஸ்ரி.க்க்ா | ப்ம்க்ரிஸ் |
| திருத் தூ . ங் | கா . னை மாட | சிவக் கொழுந் | து . நா . தர் |
| ஸ்க்ரிஸ்ஸ் | ஸ்நிபா ஸ்ஸ்ா | பபஸ்நிபாம | கா பம க ரிஸ |
| திரு வ டி கட் | கு . . தினம் | திருத் தொண்டு | செய் . தா . ர் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| பாபபம | கமகரிரி | ரிகமகரி. | ஸநி.ரிஸா |
| பாத பூ . | சை . செய்ய | மனைவிநீர் | வார்க்க |
| ஸரிககக | காமகக | ரிகமபா | கமபா , |
| பழைய பணி | யாளனுக்குத் | தா . மதம் | செய்ய |
| ஸ்ாநிபம | கமாபா | கமப நிப | பநிஸ்ா , |
| நா . தன் | வெகுண்டு | நங்கை . கையை | வெட்டி |
| ஸ்ரி.கா ப்ம் | க்ரிஸ்நி பாநீஸ்ா | ஸ்ாநிபம | கமகரிஸ |
| நிபந்த தொண்டி | டி . னைச் செய்து | நாதனடி | சேர்ந்தா . ரே |

## 44. கலிய நாயனார்

வாணியர் - தொண்டைநாடு - திருவொற்றியூர் - ஆடி - கேட்டை

இவர் திருவிளக்கேற்றும் திருப்பணியைச் செய்து வந்தார். மிகுந்த வறுமையுற்று விளக்கேற்ற எண்ணையின்றி யாசித்தும் கிடைக்காமல் வருந்தி, தன் ரத்தத்தைக் கொண்டு விளக்கேற்ற எண்ணி, தன் கழுத்தையறுத்தார். உடனே சிவபெருமான் தோன்றி நாயனாரின் கையைப்பிடித்துத் தடுத்து, பின் கலியனாருக்கு காட்சியுமளித்து சிவலோகத்தில் சிறப்புற்றிருக்குமாறு அருளினார்.

ராகம் : சௌராஷ்டிரம் (15) ஆ : ஸரிகமபதநிஸ்

தாளம் : ஆதி அவ : ஸ்நிஸஅதபமகபமகரிஸ

**பல்லவி**

திருவொற்றியூர்ச் செக்கார் குலத்தகத்தே தவப்
புதல்வனாய் பிறந்த கலியர் சிவபக்தர்

**அனுபல்லவி**

திருக் கோயிலெங்கும் திருவிளக்கேற்றி வைக்கும்
திருப் பணி தன்னை அலுக்காது செய்தார்

**சரணம்**

கலியனை உலகறிய எண்ணங் கொண்டு நீ
வறுமையைத் தந்தும் உன் பணியைத் தொடர்ந்தார்
கலியனும் தன் ரத்தத்தால் விளக்கேற்ற எண்ணி
கழுத்தை யறுக்கையிலே தடுத்தாட் கொண்டாயே.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| தநிஸா ஸா ஸ் நி தா நி த பா ; | ;ம பா த பா | மக ரீ ரீ ஸா |
| திரு வொ ற் றி யூ . ர்ச் செ க் கார் | குலத் தகத் | தே . . தவப் |
| ; ஸ கா ரி ஸா ஸ நி. ரி ஸரீ ; | ; க மா பா , | மக பம க ரிஸா |
| பு தல் வனாய் ப . ற ந் த | க லி யர் | சி . வ . பக்தர் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; மநித பா ம தாநீ ஸ்ாஸ்ா | ; ஸ் ம் க் ரி ஸா | ஸ் நி தா நீ ஸா |
| திருக் கோயி லெங் . கும் | திரு வி . ளக் | கேற்றி வைக்கும் |
| ; நி ரீ . ஸ் ஸ்ா ஸ் நி தா நித பா | ; ம த பா , ம | மக பம கரிரீ |
| திரு ப் பணி தன் . . . னை | அலுக்காது | செய் . . . . தார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; ஸ ம க ரி ஸா ஸாநி ரிஸரீ | ; க மா பா , | நித பம கரி ரீ |
| கலி . ய னை உ ல க ரி . ய | எண்ணங் | கொண்டு . . நீ |
| ; ஸகாரிஸா ஸநி.தா நீ. ஸா | ; க மா பா ம | மகபமக ரிஸா |
| வறுமையைதந் . . தும் | பணி யைத் தொட | ட . . ர்ந் தா . ன் |
| ; ம நி த ப ப ம த.ா , நி ஸ்ா ஸ்ா | ; ஸ் ம் க் ரீ ஸ் | ஸ் நி தா நீ ஸ்ா |
| கலி . யனும் தன் ரத்தத் தால் | விள க் கேற்ற | எண் . . ணி |
| ; நி ரீ . ஸ்ா ஸ் ஸ் நி தா நி த பா | ; ம நி த பா ம | ம கரீ கமபா |
| கழுத் தைய று . க் கயி லே | தடு த் தாட் | கொண் . டா . யே |

# 45. சக்தி நாயனார்

வேளாளர் - சோழநாடு - விரிஞ்சியூர் - ஐப்பசி - சக்தி பூசம்

சிவனடியார்களைப் பற்றி எவரேனும் இகழ்ந்து பேசினால் அவர் தம் நாக்கை இழுத்து அறுத்து விடுவார். அத்தகைய சக்தியுள்ளவராதலால் சக்தி நாயனாரெனப் பயெர் பெற்றார். கடைசிவரை அடியார்கள் பெயருக்கு யாரும் இழுக்கு பேசாமல் காத்து ஈசனைடி சேர்ந்தார் சக்திநாயனார்.

**ராகம் : நடபைரவி (20)** **தாளம் : ஆதி**

### பல்லவி

காவிரி நாட்டு விரிஞ்சையூர் வேளாளர்
சத்தி ஓர் வீர சைவனாய்த் திகழ்ந்தார்

### அனுபல்லவி

காவியணிந்த சிவன் அடியார்களை எவரும்
கலங்கிட்ச் செய்யாமல் காத்து வந்தார்

### சரணம்

அடியாரை இகழும் பாதகர் நாவை
அடியோடு இழுத்தறுக்க ஆயுதம் வைத்து
கொடியோரைத் தண்டித்து நெடுங்காலம் வாழ்ந்த
சக்தி உந்தன் சரணம் அடைந்தாரே.

### பல்லவி

| | | |
|---|---|---|
| ; , ஸ ரி க மா பா ; பா பா | ; , பத நி ஸ்ா | நிஸ் நி நி தா பா |
| கா . வி ரி நா ட் டு | விரிஞ் சை யூர் | வே . . ளாளர் |
| ; , பா தா மா த ப ம கரி ஸா | ; , ரி க ம மா | பத பத மா பா |
| சக்தி ஓர் வீ . . . . . ர | சை . வ ராய் | தி . கழ் ந்தார் |

### அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; , ஸ்நி த ப ம பதா நி ஸ்ாஸ்ா | ; , ஸ்ரி.க்ாஸ் | நி தாநி ஸ்ாஸ்ா |
| கா . வி . ய ணிந்த சிவன் | அடி யார் க | ளை . எ வ ரும் |
| ; , ஸ் ரி. க் ம்ா ரி க்ா ஸ்ரீ.ஸ்ா | ; , ஸ்ா நிதப | மபபம கரி ஸா |
| க லங்கி டச் செய் யாமல் | கா . த்து . | வந் . . . தார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , மபபாப ம தப மகரிஸா | ; , ஸ்ரிகரீ | ஸ நிதநி ஸா ; |
| அடியாரை இ . க ழு . ம் | பா . தகர் | நா . . . வை |
| ; , ரிகமாம மாபா தாபா | ; , பத நிஸ்ா | நீஸ்நி தா பா |
| அடியோடு இ ழுத் தறுக்க | ஆ . யு தம் | வை . . த் துக் |
| ; , ரி. க் நீஸ் ரீ . ; ரி. க் ரீ . | ; , நி க் ரீக் | க்ரிரிக்க்ரி.ஸ்ா |
| கொடியோரை தண்டித்து | நெடுங்காலம் | வா . . . ழ்ந்த |
| ; , பாதபம பா பா தாதா | ; , பத நி ஸ்ா | நீ ஸ்ா ; ; |
| சத்தி . . உந்தன் சரண் | அ . டைந்தா . | .ரே |

## 46. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

அரசகுலம் - தொண்டைநாடு - காஞ்சீபுரம் - ஐப்பசி - மூலம்

இவர் பல்லவ அரசர் சிவத் தொண்டு செய்வதற்காக அரசையே துறந்தவர். சென்ற தலமெங்கும் பாடலிசைத்து ஈசனடி சேர்ந்தார்.

**ராகம் : ஆஸாவேரி (8)** **ஆ : ஸரிமபதஸ்**
**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிதபமகரிஸ**

**பல்லவி**

பல்லவரசன் ஐயடிகள் காடவர் கோன்
சைவநெறி தழைக்க ஆட்சி புரிந்தார்

**அனுபல்லவி**

பலகலைகளிலும் பல மொழிகளிலும்
வல்லவனாகத் திகழ்ந்து வந்தார்

**சரணம்**

இன்னல் தரும் அரசியல் என்றே துணிந்து
ஈசனின் தொண்டு செய்ய ஆட்சியை நீத்துச்
சென்ற தலம் எங்கும் பாடல் இசைத்துப்
பன்னெடு நாள் வாழ்ந்து உன்னடி சேர்ந்தார்.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , பா ப பா பமம ககரி ஸா | ; , ரி கரிஸா | ஸா , ஸரி நி ஸா |
| பல்ல வ அ . ர . . . சன் | ஐ . யடிகள் | கா ட வர் கோன் |
| ; , ரி ரி ம மா பத பத ம பா , | ; , ரிம பாப | பம மக கரி ஸா |
| சை வ நெறி தழைக்க . | ஆட்சி பு | ரிந் . . . . தார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , ப த ம ப தா ஸ் ஸா ஸா; | ; , ரி. க் ரி. ஸா | ஸ் ரி ஸ்ரி தாஸ்ா |
| பல . கலை . க ளி லும் | பல மொழி | க . ளி . லு ம் |
| ; , பதஸ்ஸ்ாஸ்ரிஸ்ரி ஸ்ாப | ; , ரிக ப த ப | பம மக கரிஸா |
| வல்ல வ னா . . . கத் . | திகழ்ந்து . . | வந் . . . . தார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , பா பபப பம மக கரிஸா | ; , காரி ஸா | ஸரி ஸரி நீ. ஸா |
| இன்னல் தரு ம.ர. சி. யல் | என் . றே | து . ணி ந் து . |
| ; , ரி ம மா பா , ப பா த பா | ; , ரிம பதப | மா , க கரிஸா |
| ஈ ச னின் தொண்டு செய்ய | ஆட் சியை | நீ . த் துச் |
| ; , ப.ம. பா த.ஸ்ா ; ரீ . ஸ்ா | ; , கா ரீ ஸா | ஸ் ரி.ஸ் ரி. தா ஸ்ா |
| சென்ற தலம் எங்கும் | பா ட ல் | இ . சைத் துப் |
| ; , பதஸ் ஸா நி ஸா பா ,தா | பா, ரி ம பத ப | பம ம க க ரி ஸா |
| ப ன் னெடு நாள் வாழ்ந்து | . உன்னடி . | சே . . . . ர்ந்தார். |

# 47. கணம் புள்ள நாயனார்

சோழநாடு - இருக்குவேளூர் - கார்த்திகை - கிருத்திகை

இவர் ஈசனுக்குத் திருவிளக்கேற்றும் திருப்பணியைச் செய்து வந்தார். வறுமை மேலிட்டு, திருப்பணி தடைபடாமலிருக்க, கணம் புற்களை வெட்டி அதனை விற்று நெய் வாங்கி, விளக்கேற்றினார். இதனால் இவருக்கு கணம்புல்லர் என்னும் பெயர் ஏற்பட்டது. ஒரு சமயம் புல் விலைக்குப் போகாமல் பணம் கிடைக்கவில்லை, நாயனார் மிகவும் வருத்தி, அப்புல்லையே திரித்து விளக்கேற்றினார். ஆனால் அவ்விளக்க முதல் சாமம் வரை எரியாமல் பாதியிலேயே நின்று போயிற்று. தம் சிகையிலுள்ள முடியைத் தரித்து விளக்கேற்றி வைத்தார் கணம் புல்லர். இவருடைய பேரன்பில் கனிந்த சிவபெருமான், கணம் புல்லரை சிவலோகத்தில் இனிதாக வீற்றிருக்கச் செய்தார்.

**ராகம் : கரஹரப்ரியா (22)** **தாளம் : ஆதி**

**பல்லவி**

இருக்கு வேளூர் பெருங்குடித்தலைவர்
சிவ பெருமானிடம் பேரன்புடனிருந்தார்

**அனுபல்லவி**

திருக்கோயில் சென்று விளக்கில் எண்ணையிட்டுத்
தினமும் துதி செய்து திருவிளக் கேற்றி வைப்பார்

**சரணம்**

வறுமை மிகுந்த தில்லையடைந்து
திருப்புலீச்வரம் கோயில் திருப்பணி செய்தார்
பொறுமையாய் கணம் புல்லை எரித்தபின் போதாமல்
தலை முடியையும் எரித்தருள் மிக பெற்றர்.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; த நீ த ப த நீ ; ஸ்ா ; | ; த நீ த பா | மகரிக மா ; |
| இருக்கு. . வே ளூ ர் | பெருங் குடி | த . லை . வர் |
| ; ரி கா ம பா தாநீ தா பா | ; ரிகா ஸாரி | காமபாபா, |
| சிவ பெரு மா. னி டம் | பே . ரன்பு | டன் இருந் தார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; நிஸ்ா நீ த பா ; ; தப | மாம பா த தா | நீ ; ஸ்ா ஸ்ா |
| திருக் கோ யில் சென் று . | விள க்கிலெண் | ணை யிட்டுத் |
| ; நி க்ாரி.ஸ்ா ஸ் நித ப தநிஸ்ா | ; த நீத பா | ரீ , க மா பா |
| தினமும்து தி . . . செய் து | திரு விளக் | கேற் றி வைப் பார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; த நீ த பா பா ; ;  பா | ; ம பா நித ப | கா கா ரீ ; |
| வறுமை மி குந் து | தி ல் லை . . | ய டைந்து |
| ; ரி பா ம கா கா ரீ நீ. ஸா | ; ரிகா மமா | பா ; பாபா |
| தி ருப் பு வீச் வரம் கோயில் | திருப் பணி | செய் . தார் |
| ; த நீ ப.தா தா நீ ஸ்ா ஸ்ா | ; த நீ ரி. ரீ . | க் ம்ாரி. க்ா ரீ . |
| பொறுமையாய்க் கணம் புல்லை | எரித்த பன் | போ . . தாமல் |
| ; நி க்ா ரி. ஸ்ா நித நி பா த நீ | ஸ்ா த நீத பா | மக ரிக மா பா |
| தலை முடி யை . யும் எரித் | து அருள் மிகப் | பெ . .ற் றார் |

## 48. காரி நாயனார்

சோழநாடு - திருக்கடவூர் - மாசி - பூராடம்

இவர் தம் தமிழப் புலமையால் ‘காரிக் கோவை’ என்னும் நூலை இயற்றி மூவேந்தரிடமும், பெருமதிப்பும், செல்வமும் பெற்றார். இந்நிதி கொண்டு சிவன் கோயில் பல கட்டினார். சிவனடியார்களுக்கு பெரும் நிதியளித்து உதவினார். சிவபெருமானருளால் அமைந்த உடலுடன் ஜீவன் முக்தராய் வடகயிலை மலைக்குப் போய்ச் சேர்ந்தார்.

ராகம் : காம்போதி (28) — ஆ : ஸரிகம பதஸ்
தாளம் : கண்டசாபு — அவ : ஸ்நிதபமகரிஸ

### பல்லவி

திருக்கடவூர் பதியில் காரியெனும் பெரியார்
சிவத் தொண்டு பல செய்து இனிதே வாழ்ந்திருந்தார்

### அனுபல்லவி

உருவாகக் காரிக் கோவை எனும் நூலை பாடி
மூவேந்தரிடமும் பொருள் மிகப் பெற்றார்

### சரணம்

சிவன் கோவில் பல கட்டிச் சிவனடிகட்குப் பல
தொண்டினைச் செய்து இன்புற்றிருந்தார்
சிவனருளாலே இவ்வுடலுடனே
ஜீவமுக்தராய் வட கயிலையடைந்தார்

### பல்லவி

| | | | |
|---|---|---|---|
| ப த ஸ் ஸ் ஸ் | ஸ்நிரி.ஸ் நிதா | பா தப தஸ் | ஸ் நி நி த பா, |
| திருக்கட வூர் | ப . தி . யினில் | கா ரி . யெனும் | பெ . ரி . யர் |
| க ம பபப | பதப மாக | ப த ஸ்ாஸ் | பதஸ்ா , |
| சிவத் தொண்டு | பல . செய்து | இனி தேவாழ்ந்த | திருந்தார் |

### அனுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| மக பாத | த ஸ் ஸ்ஸ்ஸ் | பதஸ்ாஸ் | நிதபா தா. |
| உருவாகக் | காரிக் கோவை | எனும் நூலைப் | எ . ழுதி |
| தாக் ரி ஸ் | ஸ்நிநித பத ஸ்ா | பாதா ரி.ஸ் நிதபா | தப மக பத ஸா |
| மூ வேந்தர் | க . ளி .ட . மும் | பொருள் மிகப் . . | பெ . . . . ற் றார் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| த ஸ் நீ த | தத்த நித | பப தஸ் ஸ் | ஸ் நிநித தபா |
| சிவன் கோயில் | பல கட்டிச் | சிவ னடி கட் | குப் ப ல |
| நீ த பா | பமதப பமமகமா | பதஸ்ாஸ் | ஸ்நிநித தபா |
| தொண் டி னைச் | செய் . . . . . து | இன் புற் றி | ருந் . . தார் |
| மக பதா | ஸ் பத ஸ்ா , | ஸ் ரி ம்க்க்ரிஸ்ா | ஸ்நிநித பதா |
| சிவ னரு | ளா . . லே | இவ் வு . . . ட | லு . . ட னே |
| தா க் ரி ஸ் | ஸ் நிநித பத ஸ்ா | ஸ்நிரிஸ் நிதபாபா | த ப மக பதஸ் |
| ஜீவ . | மு . . க் த . ராய் | வ . ட . க . யி லை | அ . டைந் தா . ர் |

# 49. நின்றசீர் நெடுமாறன்

அரசகுலம் - பாண்டிநாடு - மதுரை - ஐப்பசி - பரணி

இவர் சமண மதத்தைத் தழுவியவராக இருந்தார். இவருடைய மனைவி மங்கையர்கரசி சோழநாட்டரசன் மகள். இவள் ஓர் சிவபக்தை. தன் மணாளனை சமத்தினின்றும் காக்கும்படி ஈசனை வேண்டினாள் அரசி. திருஞானசம்பந்தரால் மன்னன் சமணம் நீங்கி சைவமானாள். வடநாட்டுப் பகையரசோடு போட்டியிட்டு வெற்றிவாகை சூடினான் நெடுமாறன். திருத் தொண்டு பல புரிந்து திருநீற்று வழி நடந்து சிவலோகம் தனையடைந்தான் நின்று சீர்நெடுமாறன்.

ராகம் : நாதநாமக்ரியா (15) ஆ : நிஸரிகமபதநி
தாளம் : ஆதி அவ : நிதபமகரிஸநி

**பல்லவி**

தவநெறி சமணமென்று சூழ்ச்சியிலகப்பட்டுப்
பாண்டியின் நெடுமாறன் ஏமாந்தார்.

**அனுபல்லவி**

சிவபக்தை சோழன் மகள் மங்கையர்க்கரசி
கணவன் மாறனைக் காக்க உன்னை வேண்டினார்.

**சரணம்**

திருஞானசம்பந்தர் அருளால் மதுரையில்
சமணம் நீங்கி சைவ மணம் ஓங்கிற்று
திருத் தொண்டு பல புரிந்து திருநீற்று வழிநடந்து
சிவலோகப் பெருவாழ்வு உன்னருளால் சேர்ந்தாரே.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; ஸரீமகா ஸ மா ம மாமா | ; மா, ம மா | மா மா மாபம |
| தவ நெறி சமண மென்று | சூ ழ் ச்சி யி | லகப் பட்டு |
| கா. காக கமா க ரீ க ரீ ஸா | ; ஸ ரீ க ரீ | கா ; ; ; |
| பாண்டியின் நெடு மா . றன் | ஏ . மாந் | தார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; ம ப.ா க.ா ம. பா, பதா பா | ; , பா த பா | பா பா பா தப |
| சிவ பக்தை சோ ழன் மகள் | மங் கையர்க் | க ர . சி . |
| மா ஸ ம மா மா மா மா பாதப | மா கமா பமா | மக பம கரிஸா |
| க ண வன் மா றனைக்காக் க . | . உன் னை . | வே . . ண்டி . னார் |

## சரணம்

| | | |
|---|---|---|
| ; க.ா மா காரி ஸா ; ஸாரிஸ | நீ ஸ ரீ க ரீ | ரீகா கா கா |
| திரு ஞான சம் பந்தர் | . அருளால் | மது ரை யில் |
| ; ம பா மகம பத ப த ம பா , | ; க மா ப மா | மகபம கரிஸா |
| ச ம ணம் . நீ . . . ங் கி | சை வ மணம் | ஓ . . ங் கிற்று |
| ; க மா பதா பதா த தா தா | ; பதா நீஸ் | நிஸ்ாஸ் ஸ்ாஸ்ா |
| திருத் தொண்டு பல பு ரிந் து | திரு நீற்று | வழி ந டந் து |
| ; நிஸ்ா ஸ்ாஸ் நி ஸ்ாநி தா தா | ; பதா பமா | மக பம க ரி ஸா |
| சிவ லோகப் பெரு . வாழ்வு | உன் ன ருளால் | சே . . ர்ந் தா . ரே |

# 50. வாயிலார் நாயனார்

## வேளாளர் - தொண்டை நாடு - திருமயிலாப்பூர்

இவர் மணமாகிய கோயிலில் சிவபெருமுனை எழுச்செய்து ஞானச்சுடனர் விளக்கேற்றி பேரானந்தத் திருமஞ்சனமாட்டி, அன்பு என்னும் திருவமுதையமைத்து, அர்ச்சனை செய்து ஞானபூஜை செய்வார். இவ்வறாறு வழிப்பட்டு இறுதியில் சிவபெருமானது திருவடி நிழலையடைந்தார் வாயிலார்.

**ராகம் : கருட்டி (28)** **ஆ : ஸரிமபநிஸ்**

**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிதபமகபரீஸ**

### பல்லவி

தொண்டை நாட்டு மயிலையில் வேளான குலத்துதித்த
வாயிலார் எனும் பெரியார் சிவ பக்தர்

### அனுபல்லவி

தொண்டு செய்வதில் மிக விருப்பம் தொண்டு சிவ
பெருமானை தம் மனத்தே எழுந்தருள செய்தார்

### சரணம்

ஞானத்தால் விளக்கேற்றி ஆனந்த மஞ்சனமாட்டி
அன்பமுது படைத்து அர்ச்சனை செய்து
ஞான பஜையை நாள் தோறும் செய்து
நல்லலுகம் சென்று உன்னையடைந்தாரே,

### பல்லவி

| | | |
|---|---|---|
| பஸ்ாஸ் ஸ்ா ஸ்ா ஸ்நி நித பாபா | ம ப ம மநி தபா | மமா கரிமரிஸ |
| தொண்டை நாட்டு ம . யி . லையில் | வே . . ளா . . ள | கு லத் து தித் த . |
| ரீ , ப மாரீ ரீ, ம ரீ ஸா | ; ரிமா பநி த | பா ; ; ; |
| வா யி லார் எனும் பெ ரி யார் | சிவ ப . க் | தர் |

### அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ஸ்ா, ஸ் நி த பா பாபநிமாபா | மா பா நீ ; | ஸ்ா , ஸ் ஸ்ாஸ்ா |
| தொண்டு செய் வ தில் . மிக | விருப் பம் | கொண்டு சிவ |
| நிஸ்ாரி.ம்ாரி.ஸ் நீ , த த நிஸ்ா | நீஸ்ா , நிதா | பா; ரிமபா |
| பெரு மா . னை . தம் மனத் தே | எழுந் தரு | ளச் செய்தார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| மா , மா , மா ம மா மா , மா | ம பா பநித பா | மா மகரிமரிஸ |
| ஞா னத் தால் விளக் கேற் றி | ஆ . னந் . த | மஞ்சன மா . ட்டி |
| ரீ பா மாக ரீரி மா ரீஸா | ரீ , ம பா ; | பஸ்நித பாபா |
| அன்பமுது படை த்து | அர்ச்சனை | செய் . . . து |
| பா ஸ்ாநிதபா பா பநி மா பா | ம பா நீ , நீ | நீஸ்ா ஸ்ா; |
| ஞா . ன . . பூ . . சை யை | நாள் தோறும் | செய் து |
| நீ , நி நீ நித தா நீ ஸ்ா ; | ஸ்ா ; நிதபா | மக ரி ம ரீஸா |
| நல்லு ல கம் சென்று | உன் னை . ய | டை . . ந் தாரே |

## 51. முனையடுவார் நாயனார்

வேளாளர் - சோழநாடு - திருநீடூர் - பங்குனி - பூசம்

இவர் போருக்குச் சென்று, பகைவர்களை வென்று அதனின்றும் கிடைக்கும் கூலியைக் கொண்டு சிவனடியார்களுக்கு அமுது படைப்பார். இவர் அஞ்சாமல் போர் செய்வார் என்னும் பெயர் வந்தது. இவ்வாறு தொண்டு செய்தே சிவனடி சேர்ந்தார்.

**ராகம் : மணிரங்கு (22)** **ஆ : ஸரிமபநிஸ்**

**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிபமகரிஸ**

**பல்லவி**

திருநீடூர் எனும் ஊரில் வேளார் மரபில்
வள்ளவாயிருந்தார் ஓர் சிவனடியார்

**அனுபல்லவி**

திருத் தொண்டு செய்திடப் போர் முனை சென்று
பகைவர்களை வென்று பொருளீட்டுவார்

**சரணம்**

அஞ்சாமல் போர் செய்யும் நெஞ்சம் படைத்ததால்
முனை யடுவார் என்ற பெயர் தனைப் பெற்றார்
அஞ்சும் படி போரிட்டு பெற்ற பொன்னில் உன்றன்
அடியார்க்கு அன்னமிட்டு உன்னடி சேர்ந்தானே.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ரி ரீ மா, மா பா பா பா பா | மபா நீ , பா | பம கா ரீ; |
| திரு நீ டூர் எனும் ஊ ரில் | வே . ளா ளர் | ம . ர பல் |
| ரீ , ம கா ரீஸாஸ நி. நீ. பா | நீ. ; , ஸ ரீ | பம க ரீஸா , |
| வள்ளளா யிருந் . . தார் | ஓர் சிவ | ன . டி . யார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ரிமாப நீ நீ பாநீ ஸ்ாஸ்ா | ம பநிஸ் ரீ .ரி.ரி. | ஸ்ரி ப்ம்க்ரி.ஸ்ா |
| திருத் தொண்டு செய் திடப் | போ . . . ர் முனை | சென் . . . .று |
| நிஸ்ா க் ரீஸ்ாஸ் நி பா நீஸ்ா | நிஸ்ாபநீ பா | ப மக ரிஸரீ , |
| பகைவர் க ளை வென் . . று | பொரு ளீட்டு | வா . . . .ர் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| பநீ நீ , நீ நீ, நீ , நீ | நிஸ் நி பா , பா | ப மா க ரீ ; |
| அஞ் சா மல் போர் செய்யும் | நெஞ் . சம் ப | டை . த் தலால் |
| ரிரி பம காரீ ஸா ஸநி. நீ. ப.ா | நீ. ஸா , ரி ரீ | பம கரி ஸா ; |
| முனை . . யடு வா . ர் என்ற | பெயர் தனைப் | பெ . ற் றார் |
| மாபா நீஸ்ா ரீ . ; க்ா ரீ . | ரீ , க் க்ரி. ரீ . | ஸ்ா ; ; ஸ்ஸ் |
| அஞ்சும் படி போரி ட்டு | பெற்ற பொன் | னில் உன்றன் |
| நி ஸ்ாரி. க்ாரீ .ஸ் நி நிப நீஸ்ா | நீஸ்நி பா பா | மப பம கா ரீ |
| அ டி யார்க் கு அன்ன , மிட்டு | உன் . ன டி | சேர் . ந் தா ரே |

# 52. கழற்சிங்க நாயனார்

அரசகுலம் - தொண்டை நாடு - காஞ்சிபுரம் - வைகாசி - பரணி

அறநெறி தவறாமல் போர் செய்வார் சுழற்சிங்கர். ஒருசமயம் மனைவியுடன் தென்திருவாரூர் கோயிலுக்குச் சென்று ஈசனை வணங்கினார். இவருடைய மனைவி கோயில் கலையழகை ரசித்த வண்ணம், மெதுவாக உள்ளே வந்தாள். வரும் வழியில் மாலை கட்டும் மண்டபத்தருகே ஓர் மலர் வீழ்ந்து கிடந்தது. அதனை எடுத்து முகர்ந்தாள் அரசி, இதனைக் கண்ட செருதுணையார் என்னும் திருத்தொண்டர் அவளது முகர்ந்த மூக்கதனை அரிந்து விட்டார். ஈசனைத் தரிசித்துத் திரும்பிய கழற்சிங்கர் நடந்ததை செருத்துணை மூலமறிந்து தன் காதல் மனைவியின் கைகையும் வெட்டி வீழ்த்தினார். பன்னெடுங்காலம் வாழ்ந்து சிவதொண்டாற்றி, சிவபெருமான் திருவடி சேர்ந்தார்.

ராகம் : காபி ஆ : ஸரிகமரிபமபதநிஸ்
தாளம் : ஆதி அவ : ஸ்நிதபமகரிஸ (22)

### பல்லவி

பல்லவர் குலத்துக் சுழற்சிங்க மன்னன்
சிவன் திருவடியின்றி மற்றொன்றை மதியார்

### அனுபல்லவி

இல்லாளுடன் கோயில் வருகையிலே அவன்
கலையழகை கண்டு மெல்ல வந்தான்

### சரணம்

மண்டபத்தருகே மலர் கண்டு முகர்ந்தவளை
வெகுண்டு செருத்துணையார் மூக்கையறுக்க
கண்ட அரசரும் பூவை எடுத்தவளின்
கைதனை வெட்டி வீழ்த்தின்னாரே

### பல்லவி

| | | |
|---|---|---|
| ; , ரீ ம மா பா ; பா ; | ; மகா ம நிப | மக பம காரீ |
| பல்ல வர் குலத் துக் | சு ழற் சி ங்க | மன் . . ன ன் |
| ; , ஸரிகரீ, ரிஸகரி நீ. ஸா | ; , ரீம மா | பா பா பா ; |
| சிவன்திரு வ . டி யின்றி | மற் றொன்றை | ம தி யார் |

### அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; , ம ப கா ம பா, பா , பா | ; மபா நிநீ | ஸ்ா ; ஸ்ா ஸ்ா |
| இல் லாளஉ டன் கோ யில் | வரு கை யி | லே அ வர் |
| ; , ஸ்ரி. க் ரீ ரி. ஸ்க் ரி. நீஸ்ா | ; , ஸ்ா நி பா | மகப ம கா ரீ |
| க லை ய ழ கை . . . கண்டு | மெல் ல | வந் . . தா ள் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , காக கா மா மா மா ; | ; , ரி ம பநிப | ககாம கா ரீ |
| மண்ட பத் த ரு கே | மலர் கண்டு | முகர்ந்த வளை |
| ; , ஸரிகா , ரிஸாரி நீ. ஸா | ; , ரீ மா , | பா பா பா ; |
| வெகுண்டு செருத்து ணையார் | மூக்கை | ய றுக் க |
| ; , ம ப நீஸ் ரீ . ; க்ா ரீ . | ; , நிக் ரீ . க் | ரிஸ்ாரி. நீஸ்ா |
| கண் ட அர சரும் | பூ . வை | எடுத்த வளின் |
| ; , க்ா ரி.ஸ்ா தா நீ மா பா | ; , கம த பா | கா, ம ரீ ஸா |
| கை த னை வெ . ட் டி | வீழ்த்தி . | னா . . ரே |

# 53. இடங்கழி நாயனார்

*சிற்றரசகுலம் - கோனாடு - கொடும்பாலூர் - ஐப்பசி - கிருத்திகை*

இவரது ஆட்சி காலத்தில் சிவனடியார்களுக்கு அமுத செய்விக்கும் தவச்சீலர் ஒருவர் வாழ்ந்தார். அவருக்கு தன் பணிதடை படும்படி வறுமையேற்பட்டது. இதனால் அரசநெல் களஞ்சியத்தின்றும் திருடச் சென்று, பிடிபட்டு அரசன் முன் கொண்டு நிறுத்தப்பட்டார். சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டு தடைபடாமலிருக்கவே தாம் நெல்லைத் திருடியதாக அந்த தவசீலர் கூறியதும், அவரைத் தண்டியாது விட்டதுடன், எல்லா நெல்லையும் சிவனடிகளுக்கே அளிக்குமாறு பணித்தார். இவ்வாறு தயையுடன் ஆட்சிபுரிந்து சிவனடி சேர்ந்தார் இடங்கழியார்.

ராகம் : கானடா ஆ : ஸரிகமதநிஸ்
தாளம் : ஆதி அவ : ஸ்நிபமபதநிபமகமரிஸ

## பல்லவி

கொடும்பாளூர் மன்னர் இங்கழியார்
சீலம் மிகுந்த சிவபக்தர்

## அனுபல்லவி

நடுநிசியில் அரச நெல்லைத் திருடிய
சிவனடி யைப்பிடித்து அரசன் முன் நிறுத்தினார்கள்

## சரணம்

சிவனடிக்கமுது தர பொருளின்மையால் தான்
திருடியதாக அடிகள் சொன்னதும்
அவரது பக்தியை கண்டு மனமிரங்கி
குறைவற்ற நிதி தந்து உன்னடி சேரச் செய்தாய்.

## பல்லவி

| | | |
|---|---|---|
| ; , கம ரீரி ஸா ; ஸா ஸா | ; , நி. ஸாரி ஸ | ஸ நி. ரி ஸ நீ. தா |
| கொடும பா ளூர் மன் னர் | இடங் க ழி | யா . . . . ர் |
| ; , நீ.ஸா ஸரீ ; ; ரீ | ; , ஸரி ரீ ப | கா , ம ரீ ஸா |
| சீ லம் மிகுந் த | சிவ பக் | . தர் . . . |

## அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; , கம தநீ ஸ்ா , ஸ்ஸ்ா ஸ்ா | : , ஸ்ா ஸ்ாஸ் | ஸ்நிரீ .ஸ் நீ ப |
| நடு நிசியில் அ ர ச | நெல் லை தி | ரு . டி ய . |
| ; , க்ம்ரி.ஸ்ா நீ, த நீ ஸ்ா | ; , தநி ப பா | ககாம ரீ ஸா |
| சிவன டியைப் பிடித்து | அரசன் முன் | நிறு த் தினார்கள் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , தநிப பா ம பாப பா பா | ; , மபதநிப | காக ம ரீஸா |
| சிவனடிக் கமுது தர | பொருளின்மை | யா . . ல் தான் |
| ; , க மா ரி ஸ ஸநி. ரிஸ நீ. த.ா | ; , நிஸாரீ | ரீ , ப கா ; |
| திரு டி ய தா . . . . க | அ டி கள் | சொன்னதும் |
| ; , கமத நீ ஸ்ா, ஸ் ஸ்நிரீ . | ஸ்ா , பஸ்ாஸ்ா | ஸ்நிரி.ஸ் நீபா |
| அவரது பக் தியை . கண் | டு மன மி | ரங் . . கி . |
| ; , க் ம் ரி ஸ்ா நிஸ்ா பா , பா | ; , தநிபபா | கா , ம ரீஸா |
| குறைவற்ற நி தி தந் து | உன்னடி | சேரச் செய்தாய் |

# 54. செருத்துணை நாயனார்

வேளாளர் - சோழநாடு - ஆவூர் - ஆவணி - பூசம்

இவர், தவறு செய்தவர் யாராயிருந்தாலும் தண்டியாமல் விடமாட்டார். ஒரு சமயம் சோழன் பட்டத்தரசி, கோயிலில் பூக்கட்டும் மண்டபத்தருகே, கிடந்த ஓர் பூவை எடுத்து முகர்ந்தாள். இதனைக்கண்ட செருந்துணை, அரசியென்றும் பாராமல் அவளது மூக்கினை அரிந்து விட்டான். இவ்வாறு அஞ்சாமல் காரியங்களை பல செய்து ஆண்டவனடி சேர்ந்தான் செருந்துணை.

**ராகம் : பியாக் (29)** **ஆ : ஸரிகமஸகமபநிஸ்**
**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிபதநிதபமகரிஸ**

**பல்லவி**

சோழநாட்டுத் தஞ்சையில் வேளாள குலத்தே
உதித்தார் உன் பக்தன் செருத்துணை

**அனுபல்லவி**

சோழன் பட்டத்தரசி கோயில் மண்டபத்தே
கீழே விழுந்த மலரை முகர்ந்தாள்.

**சரணம்**

கண்ட செருத்துணை கத்தியால் அரசியின்
மூக்கதனைத் துணிந்தே அறுத்து விட்டான்
தண்டித்து பயமின்றி ஆண்சிங்கமென வாழ்ந்து
தொண்டு பல செய்து பேரின்பமடைந்தார்

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , நிஸ்ஸ்ாஸ் ஸ்நிநித பாபா | ; , பத நீத | பம தப மகா , |
| சோழ நாட்டு தஞ் . சையில் | வே . ளாள | கு . லத் த்தே |
| ; , நி.ஸக மா பா ; பா ; | ; , மநித நீ | பா ; ; ; |
| உதித்தார் உன் பக் தன் | செ . ருத் து | ணை |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , நீத பா தா , த தா தா | ; , ஸ்ாஸ் ஸ்ா | ஸ்ாஸ்ாஸ்ா ; |
| சோழன் பட்டத் த ர சி | கோயில் மண் | ட பத் தே |
| ; , ஸ்ா ஸ்ா ஸ் ஸ் நிநித பா ; | ; , மப பாத | மபா மா கா , |
| கீ ழே விழுந் . . த | மல ரைமு | முகர் ந் தாள் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , ஸா கா ம பா , பா பா , | ; , மா ப தா | மா பா மா கா |
| கண்ட செருத் து ணை | க த் தி யால் | அ ர சியின் |
| ; , க ம பஸ் நி பா ,ம தா பா | ; , ம பா பா | மக பம மா கா |
| மூ க் க த . னைத் துணிந்தே | அ றுத் து | வி. . ட் டா ன் |
| ; , நீ த பா தா நீ நீ நீ | ; , ஸ்ாஸ் ஸ்ா | தநீஸ்ா , ஸ்ா |
| தண்டித்து பய மின்றி | ஆண்சி ங்க | மென வாழ் ந்து |
| ; , பஸ் ஸ்ா ஸ்ஸ் நிநித தாபா | ; , பத நீத | பம தப மா கா |
| தொண்டு ப ல . . . செய்து | பே . ரின்ப | ம . டை . ந் தார் |

## 55. புகழ்த்துணை நாயனார்

ஆதி சைவா - சோழநாடு - செருவிலிப்புத்தூர் - ஆவணி - ஆயில்யம்

இவர் செங்கோயில் அகம்படிமைத் தொண்டு புரிந்து வந்தார். நாட்டில் கொடிய பஞ்சமேற்பட்டது. பட்டினி கிடந்தும் இவர் தொண்டினை விடாது செய்தார். இவர் உடல் மிகவும் தளர்ந்ததால் ஒருநாள் ஈசனுக்கு திருமஞ்சன மாட்டும் பொழுது, கைநழுவி குடம் லிங்கத்தின் மீது விழுந்து உடைந்து விட்டது. உடனே இவரும் மூர்ச்சித்து விட்டார். அந்நிலையில் பஞ்சம் தீரும் வரையில், தினமும் ஒர் பொன்காசு அளிப்பதாகக் கூறினார் ஈசன். அதன்படி பஞ்சம் தீரும்வரை காசு பெற்றுபின்னர் ஈசனடி சேர்ந்தார் புகழ்த்துணை நாயனார்.

ராகம் : அமீர்கல்யாணி ஆ : ஸரிகமபதநிபதஸ்
தாளம் : ஆதி அவ : ஸ்நிதபகமரிகஸ (65)

**பல்லவி**

செருவிலிப் புத்தூர் சிவ வேதியர் குலத்துதித்த
புகழ்த்துணை அகம்படிமை தொண்டு செய்தார்

**அனுபல்லவி**

பெரும்பஞ்சம் வந்தும் பெருமானின் தொண்டு
பிறழாமல் நாளும் நடத்தி வந்தார்

**சரணம்**

அபிடேகம் செய்கையில் குடம் ஐயன் மீது வீழ
அலறித்தானும் பசியால் மயங்கி உறங்க
அபிமானமுடன் ஐயன் கனவில் சொன்னபடி
பஞ்சம் தீரும் வரை பொன் பெற்றுப் பணி செய்தார்

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; ஸஸாரிஸா பா பா, தபா | ; பதா நிஸ் நி | ததா நி தா பா |
| செரு விலி புத்தூர் சிவ | வே . திய ர் | குலத்து தித்தே |
| ; ப பா த பா மகா ம ரீஸா | ; ஸா , ரீஸ | பம தா பா ; |
| புகழ்த் துணை அகம் படிமை | தொண்டு | செய் . தார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; நிஸ்ாநீத தாஸ்நி தா பா | ; ப பா தாப | ஸ் தநீ ஸ்ா ; |
| பெரும் பஞ்சம் வந் . . து | பெரு மானின் | தொண் . டு |
| ; த நீ ஸ்ா ரி. ஸ் நி தா நித பா | ; பா தா பா | மா , க ரீ , ஸ |
| பிற ழா மல் நா . . . . ளும் | ந டத் தி | வ ந் . தர் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; ஸஸா ரீஸ பா ; பா பா | ; பபா தபா | பா , ம காகரி |
| அ ப டேகம் செய் கையில் | குடம் ஐயன் | மீ து வீ ழ . |
| ; ப தா நி ஸ்ா நி தா நிதா பா | ; பாதா பா | மக பம ரீ ஸா |
| அ ல றித் தா னும் பசியால் | மயங் கி | உ . றங் . க |
| ; பா ஸா ஸ்ாநி தா த நி தா ப | ; ப பா த பா | ஸ்தநீ ஸ்ா ஸ்ா |
| அ ப மா ன மு ட ன் ஐயன் | க ன வி ல் | சொன்ன ப டி |
| ; ஸ் ரீ க் ம்ா ரீ .ரி. ரீ . ஸ்ா , | ; நிஸ் நி த பா | மகபம ரீ ஸா |
| ப ஞ் சம் தீரும் வரை | பொன் . பெற்றுப் | ப . ணி . செய்தார் |

# 56. கோட்புலி நாயனார்

வேளாளர் - சோழநாடு - திருநாட்டியத்தானகுடி - ஆடி - கேட்டை

இவர் சிறந்த சேனாபதி அரசன் கொடுக்கும் பணத்தில் பெருமு பகுதியை ஈசன் கோயில் நிவேதனத்திற்காகும் செந்நெல்லை வாங்கிக் குவிப்பான். ஓர் சமயம் சண்டைக்காக வெளிநாடு செல்ல வேண்டியிருந்தது. தான் சேமித்து வைத்த நெல்லை, ஈசன் ஆணையாக எவரும் உபயோகிக்காமல் பாதுகாக்கும்படி சொல்லிச் சென்றான். இவன் போன பிறகு நாட்டில் கொடிய பஞ்ச மேற்பட்டது. உறவினர்கள் கொடுத்த வாக்கை மீறி, நெல்லைப் பயன்படுத்தி விட்டனர். போர் முடிந்து திரும்பிய கோட்புலி, இதனையறிந்து யாரையும் எதுவும் சொல்லாமல், எல்லோரையும் வரவழைத்து ஒருவர் விடாமல் எல்லோரையும் கொன்று குவித்தான். ஒரு பாவமும் அறியாத சிறுகுழந்தையைக் கொல்லும் பொழுது, தடுத்தவனிடம் பாவஞ் செய்தோரின் முலைப்பாலை உறிஞ்சிய குழந்தையும் பாவஞ்செய்ததேயெனக் கூறி அதனையும் வெட்டினான். அவனுடை தீரச் செயலைக்கண்ட சிவபெருமான் உன்னுடைய வாளால் வெட்டப் பட்டவர்களனைவரும், பொன்னுலகையடைந்து பின் என்னுலகையடைவர் நீ மட்டும் இந்த நிலையிலேயே எம்மிடம் வருவாயாக என்று கோட்புலியாரை அழைத்துச் சென்றார்.

ராகம் : ரேவகுப்தி (15)　　　ஆ : ஸரிகபதஸ்

தாளம் : ஆதி　　அவ : ஸ்தபகரிஸ

**பல்லவி**

திருநாட்டியத்தான் குடி வேளாளர் குலத்துதித்த
கோட்புலியார் சேனைத் தலைவராய் விளங்கினார்

**அனுபல்லவி**

திருவமுத படைக்கும் தொண்டினைச் செய்ய
நெற்குவியல் தன்னை மலையாய்க் குவிப்பார்

**சரணம்**

பஞ்சத்தின் கொடுமையால் சிவ ஆணை மீறி
சுற்றத்தார் நெல்லை எடுத்ததைக் கண்டு
வஞ்சனையாக வரவழைத்தனைவரையும்
நெஞ்சினில் குத்திய பின் உன்னடி சேர்ந்தார்

**பல்லவி**

| | | |
|---|---|---|
| , கபகரிக பாபா , த பா | ; , பத பா ப | பபா ப பாதப |
| திரு நாட்டி யத் தான்குடி | வே . ளா ளர் | குலத்து தித்த |
| கா , க பகரீ ஸா பா தாஸா | ; , ஸ ரி க கா | பா பா பா பா |
| கோட் புலி யார் சே . னைத் | த லை வ ராய் | விளங் கி னார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , பக பதா ஸ்ா , தஸ்ா ஸ்ா | ; பதஸ் ஸ்ா , | தஸ் தா தா பா |
| திரு வமு து படைக்கும் | தொண் டி னை | செ . . . ய |
| ; , பா க ரி க பா ; தா பா | ; , க ப த பா | பக தப கரிஸா |
| நெற் கு . வி யல் தன்னை | மலையாய்க் | கு . வி . . ப் பான் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , கப கரிஸ ஸா ஸா ரீஸா | ; , ரிஸ பா த | ஸா ; ; ஸா |
| பஞ் சத்தின் கொடுமை யால் | சி வ ஆ ணை | மீ றி |
| ; , க ப கரிக பா ; பா பா | ; , ப ப த பா | பா ; தபகா |
| சு ற் றத்தார் நெல் . லை | எடுத் த தைக் | கண் டு . . |
| ; , ப க ப தா ஸ்ா ; ; ஸ்ா | ; , ஸ் க் ரி. ஸ்ா | த தாஸ் தா பா |
| வ ஞ் ச னை யா . . க | வ ர வழைத் | த னை வ ரையும் |
| ; , க ப கரிக பா ,ப தா பா | ; , ப க த பா | பகதப கரி ஸா |
| நெஞ் சி . னில் குத்தி ய பன் | உன்னடி | சே . . . . ர்ந் தார் |

# 57. பூசலார் நாயனார்

அந்தணர் - தொண்டைநாடு - திருநின்றவூர் - ஐப்பசி - அனுஷம்

இவர் தன்னிடம் பணமில்லாது போயினும், ஈசன் கோயில் கட்ட வேண்டுமென்ற அவாமிகுந்ததால், மனத்தாலேயே அப்படியிப்படி திட்டம் வகுந்து. பெரிய கோயிலாக மனத்தில் கட்டிவிட்டார். ஈசனைப் புகுத்தும் நாளினைக் கூட நிச்சயித்து விட்டார். அதோ சமயம் பல்லவன் ஓர் அழகிய திருக்கோயில் எழுப்பியுள்ளான். அதனில் ஈசனைப் புகவைக்கும் நாளினையும் குறித்துவிட்டார். அதற்கு முதல்நாள் பல்லவ அரசினின் கனவில் ஐயன் தோன்றி (பூசலார் கோயிலில் தான் நாளைப் புகப் போவதாகக் கூறினார். எழுந்த அரசன் பூசலாரைக் காண விரைந்து, கண்டு கோயிலின் விவரமும் தெரிந்து வியந்தான். பூசலாரும் அய்யன் அருளை எண்ணி மகிழ்ந்தார். பல காலம் தன் மனக்கோயிலுக்கே பூசை செய்து ஈசன் மலரடி சேர்ந்தார் பூசலார்.

ராகம் : சங்கராபரணம் (29) தாளம் : ஆதி

### பல்லவி

திருநின்றவூரில் அந்தணர் குலத்துப்
பூசலார் மனத்தால் கோவில் எழுப்பினார்

### அனபல்லவி

திருக் கோயில் எழுப்பிய பல்லவன் கனவில்
பூசலார் கோயிலில் நாளை புகப் போவதாய்ச் சொன்னாய்

### சரணம்

மன்னன் பூசாரையும் கோயிலையும் கண்டு
தரிசிக்க வந்து கோயிலைக் காணாது
அன்னாரை அணுகி அனைத்தும் அறிந்து கொண்டு
உன்னைப் பணிந் தோனை உன்னடி சேர்த்தாயே.

### பல்லவி

| | | |
|---|---|---|
| ; , க ப ம கா ம க ப ம க ரி ஸா | ; , காரி ஸா | ஸ த. நீ. ஸா ; |
| தி ரு நின்ற வூ . . . . . ரில் | அந் தணர் | கு . லத் துப் |
| ; , ஸாரிகா மபபா பா ; | ; , பஸ் நிதப | பமகரி ஸரிகா |
| பூசலார் மனத்ததால் | கோ . . . வில் | எ . ழுப் ப . னார் |

### அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; , மப கா ம பாதா நீஸா | ; , க்ாரி. ஸ்ா | ஸ்தநீஸ்ா ; |
| திருக் கோயில் எழுப் பய | பல்ல வன் | க . ன வில் |
| ; , தநி ஸ் ஸ்ா ஸ்நிதா பா தநி | ஸ்ா , ஸ்நி தபம | தபப ம க ரி ஸா |
| பூ . ச லார் கோ . யி லில் நா | ளை புகப் போ . வ | தா . . ய் சொன் னாய் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , காம பா பா பா பா பா | ; , தஸ் நி தப | பம தப மகமரி |
| மன்னன் பூ ச லா ரை யும் | கோ . . யிலை | யும் . . கண்டு . |
| ; , கம பமக மக ப ம கரிஸா | ; , பா க . மா | பா , பா , பா |
| தரி சிக்க . . வந் . . . .து | கோயி லைக் | கா ணா து |
| ; , பா கா ம பாபத நீ ஸா | ; , ஸ் க் ரீ ., | ஸ்த நீ ஸ்ா ஸ்ா |
| அன்னாரை அணு . . . . கி | அனைத்தும் | அறி ந்து கொண்டு |
| ; , ஸ்ா ஸ்ஸ்ா நி ஸ்ா , ஸ்நி பா | ; , கம பபம | ம க க ரி ஸரிரிக |
| உன்னைப் பணிந் தோ . னை | உன்னடி . | சே . . ர்த் தா . யே . |

## 58. மங்கையர்கரசி

அரசகுலம் - பாண்டிநாடு - மதுரை - சித்திரை - ரோகிணி

இவன் சோழமன்னனின் மகள். சிவபக்தை கணவன் சமணனாய் இருந்ததால் மந்திரி உதவியுடன், திருஞானசம்பந்தரை வரவழைத்து, அவரது அருளால் சமணத்தினின்றும் சைவமாக மாறினான் மன்னன். அவன் கூனும் நீங்கியது. மங்கையர்க்கரசியும் மகிழ்ந்து பல திருத்தொண்டுகள் புரிந்து சிவனடி சேர்ந்தாள்.

ராகம் : பூபாளம் ஆ : ஸரிகபதஸ்
தாளம் : ஆதி அவ : ஸ்தபகரிஸ (8)

**பல்லவி**

சோழகுலக் கொழுந்தாம் மானியென்னும் பெயராள்
மங்கையர்க் கெல்லாம் அரசியாய் திகழ்ந்தார்

**அனுபல்லவி**

பாழடைந்த நெற்றியாய் சமணனாகிய மன்னன்
நின்றசீர் நெடுமாறன் மனைவியாய்த் தவித்தார்

**சரணம்**

கணவன் சைவமாகிட மந்திரி உதவியுடன்
ஞானசம்பந்தரை வரவழைத்தார்
குணவன் அருளாள் கணவன் குறைதீர்ந்து
சைவ நெறி நின்று உன்னடி சேர்ந்தாள்.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; , ஸாரிகா கா கா தாபா | ; , தாபகா | கா , கரீஸா |
| சோழ குலக் கொ ழுந்தாம் | மானியென் | னும் பெய ரான் |
| ; ,ஸாரிஸா பா த.ா ஸா ; | ; , ரிஸ கரீ | பா பத பா ; |
| மங்கயர்க் கெல்லாம் | அர சி யாய் | திகழ்ந் தார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; , பாகபத ஸ்ா ; ஸ்ாஸ்ா | ; , பதஸ்ஸ்ா | தாபாதா பா |
| பாழடைந்த நெற் றியாய் | சமணனா | கிய மன்னன் |
| ; , பதஸ் ஸ்ா தாஸ்ா தா பா | ; , பஸ் த பா | ; தபா கரீ |
| நின்ற சீர் நெடு மாறன் | மனை வியாய்த் | தவிர்த்தார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , ஸரிகா , கா கா கா கா | ; , ரிகக கா | ரிகாரி ஸா ஸா |
| கணவன் சை . வ மா கிட | மந் தி ரி | உ தவி யு டன் |
| ; , காரிஸா பா , த. ஸா ; | ; , ஸ ரீகா | பா ; பா ; |
| ஞான சம் ப ந்த ரை | வ ர வ | ழை த் தார் |
| ; , தஸ் தா ப தாஸ்ா ஸ்ா ; | ; , ஸ்ரிக் க்ா | க் ரீ . ரீ . , ஸ்ா |
| குண வான் அரு ளால் | கணவன் கு | றை . தீர் ந்து |
| ; , ஸ்ாஸ் ஸ்ாஸ்ா , தா , பா | ; , பதப பா | கரீ , ரீஸா |
| சைவ நெ றி நின் று | உன்ன டி | சேர் ந்தாள் |

## 59. நேசநாயனார்

சாலியர் - குடகுநாடு - காம்பிலி - பங்குனி - ரோகிணி

ஐந்தெழுத்தை சதா ஓதிக் கொண்டேயிருப்பர். சிவனடியார்களுக்கு வேண்டிய ஆடைகளை நெய்து தருவார். இவ்வாறு தொண்டு புரிந்து சிவனடி சேர்ந்தார்.

**ராகம் : கல்யாணி (65)** **தாளம் : ஆதி**

**பல்லவி**

காமபீலி நகரத்துச் சாலியர் குலத்துதித்த
நேசன் நேசவாளி சிவ பக்தர்

**அனுபல்லவி**

தாம் நூற்ற நூலைவிற்றுச் சிவனடித் தொண்டு செய்து
திருவடிகளை தம் தலையில் சூடித்துதித்து

**சரணம்**

திருவைந்தெழுத்தை வாக்கினால் ஓதி
அடியார்க்கு ஆடையை கையினால் நெய்து
திருவடித் தாமரையை மனத்தில் இருத்தித்
தினமும் துதித்து உந்தன் திருவடி சேர்ந்தார்.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| க தா பா , பா பமாகா , ரீ | ரிகா ரிஸ ஸ நீ | ரிகாக கா கா |
| கா ம் பீ லி ந க ரத் துச் | சா லி ய ர் | குலத் து தித்த |
| க மா பா , பா பா பாதா பா | ; ஸ் நீ தா , | பா ; ; ; |
| நே . சன் நெ ச வா . ளி | சிவ பக் | தர் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ஸ்ா , ஸ்ா ஸ்ா ஸ்ா, நி த ப பா | ; ப பா த பா | பத நீஸ்ா ஸ்ா |
| தாம் நூ ற்ற நூலை வி ற் றுச் | சிவ னடித் | தொண்டு செய்து |
| ததாக்ரீ. ஸ்ா ஸ் நி நி த த ப தா | நீஸ்நீதபா | பா பம கரிகா |
| திரு வடி க ளைத் . . . . . தம் | தலை யில்சூ | டித்து . தித் து |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ரிகா கா, கா மதப ம க ரி கா | ; ரி க ரி ஸ ஸா | ரீ ; ரீ ; |
| திரு வைந்தெ ழு . த்தை . . | வாக்கினா ல் | ஓ தி |
| ஸ ரீ கா , பம கரி கா ரீ ஸா | ; பா க மா, | பா தா பா ; |
| அடி யார்க்கு . ஆ . . டை யை | கை யி னால் | நெ ய் து |
| ; , பப த பா பதா நி ஸ்ா ஸ்ா | ; ஸ் ரி ஸ் ஸ்ா , | ஸ்த நீ ஸ்ா ; |
| திருவடித் தாமரையை | மனத்தில் | இருத்தித் |
| த தா க் ரீ. ஸ்ா ஸ் நி நி த பத நீ | ஸா நீதா பா | மத பம கரி ஸா |
| தின மும் து தித்து . உந்தன் | தி ரு வ டி | சே . . ர் ந் தார் |

# 60. கோச்செங்கட் சோழநாயனார்

அரசகுலம் - சோழநாடு - சிதம்பரம் - மாசி - சதயம்

இவர் பிறக்கும் போது சோதிடர்கள் ஒரு நாழிகை கழிந்து பிறந்தால் மூவுலகையும் ஆள்வானென்று கூறியதால், இவனது தாயார், தலைகீழாக ஒரு மணிநேரம் இருந்தபின் இவனைப் பெற்றாள். குழந்தை காலந்தாழ்ந்துப் பிறந்ததால் கண்கள் சிவந்திருக்க அதனைக் கண்ட தாய் (இவளது), என் கோசெங்கண்ணனா என்று கதறி இறந்துவிட்டாள். இவனுக்கு கோச்செங்கண்ணன் என்ற பெயர் வைத்து, தந்தை வளர்த்து, பட்டம் கட்டினார். முற்பிறவியில் ஓர் சிலந்தியாயிருந்து திருவானைக்காலிங்கத்தின் மீது வெய்யில் படாதிருக்க கூடு கட்டிற்றாம். அதனை வழிபடும் ஓர் யானை சிலந்தி வலையைக் கலைத்து சுத்தம் செய்து பின்தான் வழிபடுமாம். இதே மாதிரி பல தடவையான பிறகு சிலந்தி யானையின் துதிக்கையில் நுழைந்து அதனைக் கடித்தது வலிதாங்காது துதிக்கையை ஓங்கி அடித்து யானையும் இறந்தது. சிலந்தியும் இறந்தது. சிவபெருமான் யானைக்கு நற்பதம் அளித்து சிலந்தியை, சோழமன்னாக அவதரிக்கச் செய்தார். இவரே கோச் செங்கண்ணன் இவர் பல கோயில்களைக் கட்டியுள்ளார். பின்னர் சிவபதமும் பெற்றார்.

ராகம் : பைரவி (20) ஆ : ஸரிகமபதநிஸ்

தாளம் : ஆதி அவ : ஸ்நிதபமகரிஸ

**பல்லவி**

வெள்ளை யானை துதிக்கும் ஆனைக்காலிங்கத்தில்
வெய்யில் படாதிருக்க சிலந்திவலை பின்னிற்றே

**அனுபல்லவி**

தன்னியே வலை கலைத்த யானையை கடித்து
சிலந்தியும் யானையுடன் இறந்திட்டதே

**சரணம்**

காலந்தாழப் பிறந்ததால் மூவுலகம் ஆள்வானென்று
தலை கீழாய் நின்று பெற்ற பிள்ளை கோச்செங்கண்
காலமும் பல கோயில் கட்டியுந்தன் அடி சேர்ந்தார்
கடந்த பிறவியில் உன் அருள் பெற்ற சிலந்தியாம்.

**பல்லவி**

| | | |
|---|---|---|
| தநீ ஸ்ா , ஸ்ா ஸ் நி ரி. ஸ் நித பா | ம ப த நிஸ் நிதப | மகபம கா ரீ |
| வெள்ளை யா னை து . தி . . க் கும் | | ஆ. னை . . க் கா . லிங் . . |
| கத் தில் | | |

| | | |
|---|---|---|
| ஸ ரிகரிஸா ஸா ரீ , ரி கா ரீ | ; ரி கா ம மா | பத பத ம ப பா |
| வெய். . யில் ப டா திருக் க | சிலந் தி வ | லை . பின் . னிற்றே |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ஸ்ா , நி தா பா பா , த பா மா | பா , ப த நீத | தா நீ ஸ்ா ; |
| தள் ளி யே வ லை க லைத் த | யா னை யை | க டித் து |

| | | |
|---|---|---|
| தா நீ , ஸ் ஸ்ா ஸ் நி ரி. ஸ் நி த பா | மபதநிஸ்நிதப | மக பம கா ரீ |
| சிலந் தியும் யா . னை . யு . டன் | இ . றந் . . தி ட் | ட . . . .தே |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ரீ , க மா மா ரீ க ம க ரி ஸா | ரீ , க மா மா | பா தா பா பா |
| காலந் தாழப் பறந்த . தால் | மூ வு ல கம் | ஆள் வா னென்று |
| ப மா , நித நீ ஸ்ா , நி நித பா | மா , ப மாகரி | ரிகா , மா மா |
| தலை கீ . ழாய் தா ன் நின் று | பெற்ற பிள் ளை | கோ செங் கண் |
| பா , த பா ; பா தா நீ ஸ்ா | தா , நி ஸ்ா ஸ்ா | ஸ்ஸ்ா நி நித பா |
| கா ல மும் ப ல கோ யில் | கட் டி யுந் தன் | அடி . . . சேர்ந் தார் |
| நிக்ா ரி. ஸ்ாஸ்ா ஸ்நி ரி.ஸ் நித பா | தாநீ , த பா | பாதம பா தா |
| கட ந்த பி ற வி . யில் . . . உன் | அருள் பெற்ற உன் | சிலந் தியாம் |

## 61. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

பாணர் - நடுநாடு - எருக்கதத்ம் - புலியூர் - வைகாசி - மூலம்

இவர் சாதியின் காரணத்தினால் கோயிலினுள் தானும் வரமுடியாமல் கோயில் வெளியே நின்று கொண்டே மனைவி பாட, தானும் யாழ் வாசித்துக் கொண்டே பாடுவார். ஒரு சமயம் மதுரையில் அவ்வாறு பாடும்போத மகிழந்த ஈசன். அடியார்களத கனவில் தோன்றி, பாணரை கோவிலினுள் அழைத்து வருமாறு பணித்தார். அதன்படி கோயிலினுள் வந்த பாணன் நெஞ்சுருகும்படி பாட, யாழ் கெடாமலிருப்பதற்காக ஓர் பலகையை அவருக்கு இடும்படியும் பணித்தார் ஈசன். பின்னர் திருவாரூரில் பாணர் ஞானசம்பந்தருடன் சின்னாள் தங்கி, அவரது நட்பைப் பெற்று அவருடனே அவரது திருமணத்தின் போது சோதியில் கலந்தார் நீலகண்ட யாழ்ப்பாணர்.

ராகம் : சாமா (28) ஆ : ஸரிமதபதஸ்

தாளம் : கண்டசாபு அவ : ஸதுதபமகரிஸ

**பல்லவி**

திருவெருக்கத் தம்புலியார் நீலகண்ட யாழ்ப்பாணர்
மனைவி சிவன் புகழ் பாடயாழிசைத்தார்

**அனுபல்லவி**

திருத்தொண்டர்கள் கனவில் பாணனைக் கோயிலினுள்
அழைத்து வரச் சொல்லி ஆணையிட்டாரே

**சரணம்**

வானொலிப்படிப் பொற்பலகை தொண்டரிடம் பெற்று
ஆரூர் சிவன் வகுத்த வாசல் வழி சென்று
ஞானசம்பந்தன் பாட தான்யாழ் இசைத்து
சிவ ஜோதியில் கலந்து அவருடன் மறைந்தார்.

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| பத ஸ்ஸ்ஸ் | ஸ்தஸ்தப | பாதஸ் தப | மாமககரிரீ |
| திருவெருக்கத் | தம் புலி யர் | நீல . கண்ட | யாழ்பா . . . ணர் |
| ஸரிகஸரி | ஸகஸஸா | ஸாரி பம | பதஸ் பதப |
| மனைவி . சி | வன் புகழ் | பா ட யா | ழிசைத் தா . ர் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| பம பாத | ஸ்ாஸ்ஸ்ஸ் | ஸ் தஸ் ரீ | ஸ்ரி. ம்ா க் ரீ |
| திருத் தொண்டர் | கள் கனவில் | பா . ண னைக் | கோ . . யினுள் |
| ஸ் ரி க்ஸ்ரி. | ஸ்ாத த ப | பாதஸ் பதப | மககரிஸரி மபதா |
| அழைத்து . வ | ரச் சொல்லி | ஆ . . ணை யிட் | டா . . . ரே . . . |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| பா பமம | மமகரி ரி ரிரி | ஸ ரிக ஸரி | ஸஸ ஸஸஸ |
| வா னொலி ப்ப | டி . . . பொற் | பலகை தொண் ட | ரிடம் பெற்று |
| த.ஸரிமம மாமமம | பாதஸ் பதப | மககரீ | ரி ரி ரீ |
| ஆரூர் சிவன் வகுத்த | வா . . சல்வ | ழிச் . . . | சென் . று |
| பம ப த ஸ் | தா ஸ்ாஸ் | தஸ் ரீ ., | ஸ்ரி.ம்ா க்ரி.ரி. |
| ஞானசம்பந் | தன் பாட | தான்யாழ் | இசைத்து |
| த ரி.ஸ்ாஸ் | தஸ் தத ப | பாதப ம மா | ஸரி மப ம |
| சிவ சோதி | யில் கலந்து | அவ . ருடன் | மறைந்தா . ர் |

## 62. சடையநாயனார்

ஆதிசைவம் - நடுநாடு - திருநாவலூர் - மார்கழி - திருவாதிரை

இவர் சுந்தரமூர்த்தியின் தந்தையாவார்.

**ராகம் : நளினகாந்தி** **ஆ : ஸகரிமபநிஸ்**

**தாளம் : ஆதி (திச்ரநடை)** **அவ : ஸ்நிபமகரிஸ**

**பல்லவி**

திருநாவலூர் ஆதி சைவ குலத்தே அவதரித்த
சடையனார் இணையில் சிவ பக்தர்

**அனுபல்லவி**

திருத் தொண்டு புரிந்து திருநாமம் தன்னையே
தினமும் துதித்துச் சிவன் அடியை அடைந்திட்ட

**சரணம்**

திருவடியார்களின் மன வருத்தம் தீரத்
திருத் தொண்டர் தொகை செய்து மனம்குளிரச் செய்து
திருவடி நோக பரவைக்கும் தூதாக
சிவபெருமானையே அனுப்பியவரைப் பெற்றிட்ட

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| நிஸ் நி பபா | பபம கரீ | ரிப ம மா க | ரி ரி கரிஸா |
| திரு நாவ லூர் | ஆ . தி சை வ | குலத் தே . | அ வ த ரித்த |
| ஸரிஸநி. பா | நி ஸா ரீ , | ம கா ரி கரி | ஸா ; ; |
| ச டை ய னார் | இணை யில் | சிவ பக் . | தர் |

**அனுபல்லவி**

| | | | |
|---|---|---|---|
| க ப ம க ரிக | பபா பபப | க ப ப நி க ப | பஸ் நி ஸ்ா , |
| திருத் தொண்டு | புரி ந் து . . | திரு நா . மம் | தன்னை யே |
| ஸ்க் ரி க் ம் ரி | ஸ்நிப ஸ் ஸ்ா | நிஸ் நி பா , | மகா ரி . ஸா |
| தி ன மும் துதித் | துச் . . சி வன் | அடி . . யை | அடைந்திட்ட |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| ஸ ப ப ப பா | பமா ம க க | ரி பம ம க ரி | ரிக ரி ஸா , |
| தி ரு வடி யார் | க ளின் மன | வ ரு த் தம் . | தீர . த் |
| நி. ஸ நி. பபா | ஸஸ ஸா ஸா | ரி ம க ரிக ரி | ஸ நி. ரி ஸா , |
| தி ருத் தொண்டர் | தொகை செய் து . | மனம் குளிரச் | செய் . து |
| நிஸ் நி பா , | பஸ் நி ஸா , | நிஸ் க்ாரீ . | ப்ம்க் ரி. ரீ . |
| திரு வ டி | நோ . கப் | பர வைக் கும் | தூ . தா . க |
| ஸ்க்ரி. ஸ்ா , | ஸ் நிப ஸ்ா , | நிஸ் நிபபப | ம க கரி ஸா |
| சிவ பெரு | மா . னை யே | அனுப்பியவரைப் | பெ ற் றிட் ட |

# 63. இசை ஞானியார்

ஆதிசைவர் - மழநாடு - திருநாவலூர் - சித்திரை
இவர் சுந்தரமூர்த்தி நாயனாரின் தாயாராவர்.

**ராகம் : மத்யமாவதி (22)** **ஆ : ஸரிமபநிஸ்**
**தாளம் : ஆதி** **அவ : ஸ்நிபமரிஸ**

### பல்லவி

சுந்தரனைப் பெற்ற சுந்தரியாம்
இசைஞானியார் எனும் பெருந்தேவி

### அனுபல்லவி

அந்தணர் குலத்துதித்து அளவில்லா பெருமை வாய்ந்த
சடையனார் வாழ்வில் இனிதே இணைந்திட்ட

### சரணம்

கணமும் மறவாது சிவனையே நினைந்து
பல விந்தை புரிந்து பலருக்கும் அருள் சுரந்து
குணவான் சேரனுடன் திருவஞ்சிக்கதைதினின்றும்
வெள்ளையானை மீது சிவலோகம் சென்றிடும்.

### பல்லவி

| | | |
|---|---|---|
| ; , ரீம மா பா , நி மா பா | ; , மப நி நீ | ஸ்ா ; ; ; |
| சுந் தரனைப் பெற்ற | சுந் த ரி | யாம் |
| ; , பரி ஸ்ாஸ் நீஸ்நிபாபா | ; , ஸ் நி பாம | ரிமபம ரீஸா |
| இசை ஞானி யா . ர் எனும் | பெருந்தே . | வி . . . . . |

### அனுபல்லவி

| | | |
|---|---|---|
| ; , பாபபா பபா நி மா பா | ; , ம ப நி நீ | ஸ்ஸ்ஸ்ஸா ஸ்ா |
| அந்தணர் குலத் து தித் து | அள விலா | பெரு மை வாய்ந்த |
| ; , ரி. ம் ரி.ஸ்ா ஸ்நி நி ப நீஸ்ா | ; , நிஸ் நி பா | ரீப ம ரீ ஸா |
| ச டை ய னார் வா . . . ழ் வில் | இனி . தே | இணை ந் திட் ட |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ; , ஸப பா ம ரீ ரி ரீ ஸா , | ; , ரி ம ரி ஸா | நிப நீ ஸா ; |
| க ணமு ம் ம ற . . வா து | சி வ னை யே | நி . னைந் து |
| ; , ரி ம ரீம பாநீ மா பா | ; , மப நி நீ | நிஸ்ாஸ் ஸ்ாஸ்ா |
| பல விந்தை புரிந் . து | பலருக்கும் | அருள்சு ரந் து |
| ; , நிஸ் ரீ . , ரீ . , ம் ரீ . ஸ்ா | ; , நிஸ் ரி.ஸ்ா | ஸ்நீப பநிஸ்ா |
| குண வாந் சே . ர னு டன் | திரு வஞ்சிக் | கதைதி னின்றும் |
| ; நி ரி.ஸ்ாஸ் நீ ஸ்நிபா ; , | ; , ஸ்நி பா ம | ரீ ரி ம ரீ ஸா |
| வெள்ளை யானை மீ . . து | சி வ லோ கம் | சென் . . . றிடும் |

## மங்களம்

இராகம் : சுருட்டி (28) ஆ : ஸ்ரிமபநிஸ்

தாளம் : ஆதி அவ : ஸ்நிதபமகபமரீஸ

**பல்லவி**

மங்களம் ஜய மங்களம் – மலரடிகட்கு

**சரணம்**

1. நங்கை சிவகாமி மங்கை மணாளனுக்குனை
நம்பித் துதி செய்த நாயன்மார்களுக்கு (ம)

2. அங்கிங்கெனாத படி எங்கும் நிறைந்திருக்கும்
ஆனந்தனிடம் சேர்ந்த அறுபத்த மூவர்க்கும் (ம)

3. ஐயனடி மறவா அன்பர் புகழைத் தொகைச்
செய்ய தமிழ் தந்த துய்ய சுந்தரர்க்கு (ம)

4. பெரல்லாப் பிள்ளை பதம் போற்றுமன்பிற்சிறந்த
நல்லார் நம்பியாண்டார் நம்பி யடிகளுக்கும்

5. வையம் புகழத் தொண்டர்மாக் கதை தன்னைத் தந்து
உய்ய எங்கட்கருளும் உயர்ந்த சேக்கிழாருக்கு (ம)

**பல்லவி**

| | | | |
|---|---|---|---|
| ; ஸ்ா நீதா பாபா மகபம | ரீ ; ; ரிம | ரீஸா ரிம பா | நீ . |
| மங்களம் ஐ ய மங்தக | ளம் ம . | லரக்கு (மங்) | |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| 1) | ; , ஸ்ா நி தா பா . நிமா பா | ; , ம ப நி நீ | ஸ்ா ; ஸா ஸா |
| | ந ங் கை சிவ கா மி | மங்கை ம | ணா ள னை |
| | ; , நீ ; நீ நி நீ , த த நிஸா | ; , ஸ்ா நி தா | பா ; ரிம பநி |
| | நம் பித்து தி . செய்த | நாயன் மார் | க ளுக்கு . (மங்) |